R Guthe


THAYAGAM

# தாயகம்

26 . 11 . 93

75¢

உண்மை:5
தேடல்:21


# விரைவில் நிரந்தரத் தீர்வு

## பயங்ரவாதத்தை ஓரிரு நாட்களில் அழிக்க முடியாது

# நுவரெலியாவில் ஜனாதிபதி

## பூனகரியில் ஆயிரம் இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் புலிகள் அறிக்கை

## அரசு விசாரணை

## இந்தியப்படைகளை அழைக்கக் கோரிக்கை

## யுத்த முனையில் போராடும் பெண் புலிகள்

## மனநோயால் பாதிக்கப்படும் சூடானாட்டுக் குழந்தைகள்

றெய்ட்டர் நிருபர் தகவல்

## டிங்கிரி பண்டா-தொண்டா வடாய்

# EVERGREEN

## IMPORT & DISTRIBUTORS

**(416) 964-8601**

**324-9345/ 968-9545**

இலங்கை,
இந்தியப்
பத்திரிகைகள்,
சஞ்சிகைகளை
உடனுக்குடன்
பெற்றுக் கொள்ளலாம்.
நேரடி விநியோகமும்
உண்டு.



**வர்த்தகர்களுக்கு
விசேட கழிவுகள்
உண்டு**

தலைநகை, தலைப்பாகை
வாடகைக்கு கிடைக்கும்

**சிவசங்கரி, பாலகுமாரன்,
அனுராதா ரமணன், சுஜாதா,
புஷ்பா தங்கத்துரை, லேனா
தமிழ்வாணன், மு.கருணாநிதி,
கண்ணதாசன், வைரமுத்து, மேத்தா
உட்பட தமிழகத்தின்
பிரபல எழுத்தாளர்களின் புத்தகங்கள்
மலிவு விலையில் கிடைக்கும்.**

வவுனியா,
யாழ்ப்பாணம்,
கொழும்பு, இந்தியா,
சிங்கப்பூர் மற்றும்
ஐரோப்பிய நாடுகளுக்கும்
உடனுக்குடன்
பணம் அனுப்பி
வைக்கப்படும்

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

- மங்கையர் மனம் விரும்பும் நவநாகரீக ஆடைகள்
- ஆண்களுக்கான ஜீன்ஸ், ரீ சேட் வகைகள், சாரங்கள், பட்டு வேட்டி வகைகள்
- சாறி வகைகள்
- அலங்காரப் பொருட்கள், பரிசுப் பொருட்கள்
- மற்றும் எவர்சில்வர் பாத்திரங்கள்

*அனைத்தும் மலிவான விலையில்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்*

**566 A Parliament St (Parliament/Wellesley)**

Second class mail Registration No:8435

# தாயகம்

'உண்மையைத் தேடி'

## விரைவில் நிரந்தரத் தீர்வு
### நுவர எலியவில் ஜனாதிபதி

இலங்கையின் இனப்பிரச்சனைக்கான நிரந்தரத் தீர்வு விரைவில் வரும் என்று ஜனாதிபதி விஜேதுங்க தெரிவித்திருக்கிறார். நுவர எலியாவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய ஜனாதிபதி 'அரசாங்கம் பயங்கரவாதத்தை ஓரிரு நாட்களில் அழிக்க முடியாது. வடக்கில் சமாதானத்தை விரும்புகின்ற, சட்டத்தை மதிக்கின்ற மக்கள் வாழுகின்றார்கள். அவர்களை எந்த விதத்திலும் பாதுகாக்க வேண்டும்' என்று கூறினார்.

வருடாந்த ஐ.தே.கட்சி மாநாட்டிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்திருந்தார்.

## இந்தியப்படைகளை அழைக்கக் கோரிக்கை

சமீபத்திய தாக்குதல்கள் குறித்து எதிர்க்கட்சியினருக்கு இராணுவத்தினர் நடத்திய கூட்டம் ஒன்றில் இந்தியப் படையை மீண்டும் அழைப்பது பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. சென்ற வாரம் ஐலண்ட் தனது ஆசிரிய தலையங்கத்திலும் இந்தியாவின் உதவியை நாட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறது. இலங்கை இராணுவம் புலிகளின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாத நிலையில் இளம் இளைஞர்களை இழந்து கொண்டிருக்கிறது என்றும் இதனால் இந்திய இராணுவத்தின் உதவியை நாட வேண்டும் என்றும் இது குறித்து அரசாங்கத்திற்கு வற்புறுத்தும்படி எதிர்க்கட்சிகளை கேட்டுக் கொண்டதாகவும் செய்திகள் வெளிவந்திருக்கின்றன. எதிர்க்கட்சிகளுக்கு என நடத்தப்பட்ட கூட்டத்தில் பிரதமர், விமானப்படை, கடற்படைத்தளபதிகள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வணசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர். இராணுவத் தளபதி வடக்கில் இருந்ததால் அவர் சமுகமளிக்கவில்லை. எதிர்க்கட்சிகளின் சார்பில் சிறிமாவோ பண்டாரநாயக்க, சுரேஷ் பிரேமச்சந்திரன், அஷ்ரப், தினேஷ் குணவர்த்தன ஆகியோரும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் இந்தியாவின் துணையை நாடுவது பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இந்த நிலையில் அரசாங்கம் புலிகளை அடக்க இந்தியாவை தொடர்ந்தும் இங்கே வைத்திருக்க வேண்டும் என்று சிறிமா தெரிவித்திருந்தார். ஆனால் உண்மையில் இந்திய இராணுவம் இருந்த நேரத்தில் சிறிமாவோ அதை வன்மையாக எதிர்த்திருந்தார். சிறிமா தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக் காட்டி சிறிமாவோ தான் இந்தியப்படை வெளியேற்றப்பட வேண்டும் என்று கூறியிருந்தார் என்பதை நினைவுபடுத்தினார்.

அத்துடன் இலங்கை அரசு நாட்டை யுத்தத்திற்கு தயாராக்க வேண்டும் என்று சிறிமா விடுத்த கோரிக்கைக்கும் கண்டனம் கிளம்பியுள்ளது. அரசாங்க படைகள் தாக்குதலை நடத்த உதவியாக அவசரகால விதிகளை நீடிக்க எதிர்ப்புத் தெரிவிக்கும் அதே வேளை எவ்வாறு யுத்த நிலைக்கு நாட்டைக் கொண்டு வர முடியும் என்று சுதந்திரக்கட்சி உறுப்பினரான எஸ்.எல்.குணசேகர கேள்வி எழுப்பியுள்ளா.

## தொண்டா- டிங்கிரி பண்டா லடாய்

தொண்டமானுக்கும் அரசுக்குமான சுமுக உறவுகள் தற்போது கசப்படைந்த நிலையில் உள்ளன. சமாதானத் தீர்வு காணும் தொண்டமானின் திட்டத்தை அரசு உதாசீனம் செய்ததுடன் தொண்டமான் பகிரங்கமாக தெரிவித்த கருத்துக்கள் பலவும் அரச தரப்பினருடன் தொடர்புகளை சர்ச்சையில் கொண்டுவந்திருந்தன. தன்னை மூன்று மாதங்கள் கழித்து சமாதானப் பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் வகிக்க ஜனாதிபதி அழைப்பார் என்று தொண்டமான் கூறியிருந்தார். இதற்குள் கொழும்பில் பலர் கைது செய்யப்படுவது பற்றி ஆட்சேபம் தெரிவிக்க தொண்டமான் முனைந்த போது அவரைச் சந்திக்க ஜனாதிபதி தயாராக இருக்கவில்லை. தற்போது இந்த உறவுகள் விரிசல் அடைந்துள்ளன.

தோட்டங்களை ஐந்து வருடங்களுக்கு தனியார் வசம் ஒப்படைக்க முன்னர் அரசு முடிவு செய்த போது தொண்டமான் அதை வரவேற்றிருந்தார். ஆனால் மேலும் முப்பது வருடங்களுக்கு அதை நீடிக்க அரசு எடுத்த முடிவை தொண்டமான் எதிர்க்கிறார். அத்துடன் பாராளுமன்றத்தில் உள்ள சென்னன், முத்துசிவலிங்கம் ஆகியோர்

3ம் பக்கம் பார்க்க..

மாபெரும் மலிவு விற்பனை

சிவாஸ் ரேடிங் கோ
3852 Finch Ave East (Kennedy/Finch)
321 2739

A Weekly Newsmagazine Published by Georgicka Communications

26.11.1993

# ஆயிரம் இராணுவத்தினரைக் கொன்றதாக புலிகள் அறிவிப்பு

கடந்த பூனகரி யுத்தத்தில் ஆயிரம் இராணுவத்தினரைக் கொன்றுள்ளதாக புலிகள் அறிவித்துள்ளனர். ஆயினும் சண்டே ரைம்ஸ் தனது செய்தி ஒன்றில் 754 இராணுவத்தினர், கடற்படையினர் கொல்லப்பட்டோ காணுமல் போயோ உள்ளனர் என்று கூறியுள்ளது. ஆயினும் இராணுவம் இன்னமும் உத்தியோக பூர்வமாக எதையும் அறிவிக்கவில்லை. ஆயினும் 737 பேர் கொல்லப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. பாதுகாப்பு அமைச்சதிகாரிகளின் கணிப்பின்படி 227 இராணுவத்தினரும் 14 கடற்படையினரும் கொல்லப் பட்டனர், 308 இராணுவத்தினரும் 88 கடற்படையினரும் காணுமல் போயுள்ளனர், 500க்கு மேற்பட்ட இராணுவத்தினரும் 47 கடற்படை யினரும் காயமடைந்து ள்ளனர். அத்துடன் புலிகள் தரப்பில் 400 முதல் 600 வரை கொல்லப்பட்டிருக்கலாம் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

இராணுவத்தில் 17 அதிகாரிகள் தரத்தினரும் 620 படையினரும் கொல்லப்பட்டதுடன் கடற்படையில் இரண்டு அதிகாரிகள் தரத்தினரும் 117 கடற்படையினரும் கொல்லப்பட்டதாக சண்டே ரைம்ஸ் கூறியுள்ளது. ஜலண்டில் உள்ள செய்திக்குறிப்பின்படி முஞஸ் என்ற இராணுவ உளவு அதிகாரியும் கடும் காயமுற்றதாக கூறப்படுகிறது.

புலிகள் தங்கள் தரப்பில் 411 பேர் கொல்லப்பட்டதாக அறிவித்துள்ளனர். கொழும்பில் உள்ள செய்தி நிறுவனங்களுக்கு ஃபாக்ஸ் மூலம் அனுப்பிய செய்தியில் ஐந்து படகுகள், இரண்டு டாங்கிகள், ஆயுதங்கள் என்பவற்றை மீட்டதாக கூறியுள்ளனர். அத்துடன் கரும்புலி தற்கொலைப் படையின் மேஜர் கணேஷ் கொல்லப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இந்த தாக்குதல்களில் புலிகளின் தாக்குதலால் புகாரா விமானம் ஒன்று சேதமடைந்ததுடன் விமானி காயமடைந்தார். ஆயினும் விமானம் பலாலி தளத்தில் பாதுகாப்பாக வந்திறங்கியது.

தங்களில் கொல்லப்பட்டவர்கள் பற்றிய தகவல்கள் வெளியில் வராதபடி புலிகள் யாரையும் குடாநாட்டை விட்டு வெளியேற விடவில்லை என்று இராணுவம் கூறியது.

புலிகள் தரப்பில் தாக்குதலுக்கு தலைமை தாங்கிய அன்பு கொல்லப்பட்டார். இவர் மணலாற்றுப் பகுதியில் பொறுப்பாளராக இருந்தவர். புலிகளின் தரப்பில் தாக்குதலில ஈடுபட்டவர்கள் பலர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது. முன்னர் மட்டக்களப்பு தளபதி கருணுவின் பொறுப்பில் சுமார் ஆயிரம் பேர் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

அஞ குழுவினர் எனப்படும் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்களுடன் வன்னி, யாழ்ப்பாணம், திருமலை, வெலி ஓயா மன்ஞர் பகுதியைச் சேர்ந்த குழுக்களும் தாக்குதலில் பங்கு கொண்டன. இவர்களுடன் சார்ள்ஸ் அன்டனி பிரிகேட், அலியண்ஞ பிரிகேட், விசேட படைப்பிரிவு, பெண்கள் அணி, சய்பர் அணி, கரும் கடற்புலிப் பிரிவு என்பனவும் தாக்குதலில் ஈடுபட்டன.

விசேட படைப்பிரிவினைச் சேர்ந்த இளங்கோவன், மைக்கல், குமரன் ஆகியோர் கொல்லப்பட்டனர். அத்துடன் ஆறு கப்டன்களும் 12 இரண்டாவது லெப்டினன்ட்களும் கொல்லப்பட்டனர். புலோலியில் புலிகளின் கம்பியூட்டர் தகவல் பிரிவில் பணியாற்றிய பத்துப் பேர் வரை கொல்லப்பட்டிருக்கிருர்கள்.

மேஜர் பத்மா, மேஜர் கணேஷ், கோபி ஆகியோர் தற்கொலைத் தாக்குதலில் ஈடுபட்டனர். கற்பகன், கவியரசன், ஏழுமலை, விவேகன் ஆகிய இரண்டாம் லெப்டினன்ட் தர கடற்புலிகளும் கொல்லப்பட்டனர்.

# பூனகரி பற்றி விசாரிக்க குழு

பூனகரித் தாக்குதல் பற்றி இலங்கை அரசு விசாரணை ஒன்றை நடத்தவுள்ளது. போதிய கால இடைவெளிக்கு முன்னர் தகுந்த முன்னெச்சரிக்கை வழங்கப்பட்ட போதும் முகாம் ஏன் வீழ்ந்தது என்றது பற்றி விசாரணை நடத்தப்படும்.

இது பற்றி பாராளுமன்றத்தில் இதுபற்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். நான்கு சிரேட்ட இராணுவ அதிகாரிகள் இந்த விசாரணைக்குழுவில் இருப்பார்கள். நிலைமையை ஏன் இராணுவம் கவனிக்க தவறியது என்பது பற்றியும் புலிகள் சூழ்வது பற்றி ஏன் இராணுவம் அறியவில்லை என்பது பற்றியும் விசாரிக்கப்படும்.

அத்துடன் மீட்புப்படைகள் சென்ற இறங்க ஏன் மூன்று நாட்கள் பிடித்தன என்பது பற்றியும் இந்த குழு ஆராயும். ஏற்கனவே முன்னணி பாதுகாப்பு நிலைகளின் மீது புலிகள் ஊடுருவும் முயற்சி மேற்கொண்டதும் புலிகள் தங்கள் ஒலிபரப்பில் பூனகரி முகாமை தாக்குவது பற்றி கூறியதும் தெரிந்தும் இராணுவத்தினர் ஏன் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யவில்லை என்பது பற்றியும் விசாரணை செய்யப்படும். முழு அளவிலான தாக்குதலிற்கு முன்னர் பல மணி நேரங்களுக்கு முன்பே புலிகள் ஊடுருவியிருந்தனரா என்பது பற்றியும் விசாரிக்கப்படும். தாக்குதலின் போது மொத்தம் 2292 பேர் முகாமில் இருந்திருக் கிருர்கள். இந்த தாக்குதலின் பின்னர் அரசாங்கம் யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பகுதியில் உள்ள இராணுவ தலைமைகளை இணைத்து தனியாக்கியிருக்கிறது.

# வடக்கில் குண்டுவீச்சு

மாவீரர் தினத்தை ஒட்டி புலிகள் தாக்குதல்களை நடத்தக் கூடும் என்று பாதுகாப்புப் படையினரை உசார் நிலையிலிருக்குமாறு தலைமையகம் அறிவித்துள்ளது. கிழக்கிலும் வவுனியாவிலும் தேர்தல் நடத்தும் நோக்கத்தை முறியடிக்க புலிகள் முயற்சிக்கலாம் என்றும் இராணுவ வட்டாரங்கள் கூறியுள்ளன.

விமானங்கள் வடக்கில தாக்குதல்களை நடத்தின. காலநிலை அனுமதிக்கும்வரை தங்கள் தாக்குதல் தொடரும் என்றும் இராணுவம் கூறியது. இராணுவம் முகாம்களுக்குள் முடங்கியபடியால் விமானம் மூலமே தாக்குதல் நடத்தலாம் என்றும் இராணுவ அதிகாரி ஒருவர் கூறிஞர்.

# ராஜீவ் கொலைச் சந்தேக நபர்களின் கோரிக்கை நிராகரிப்பு விசாரணைக்கு உத்தரவு

ராஜீவ் கொலை வழக்கில் சந்தேகநபர்கள் தாங்கள் சுற்றவாளிகள் என்று தெரிவித்த முறையீட்டை நிராகரித்த நீதிபதி அவர்கள் நீதிமன்ற விசாரணைக்கு உள்ளாக வேண்டும் என்று தீர்ப்பளித்திருக்கிறார். சந்தேக நபர்கள் 26 பேரும் ராஜீவ் கொலையில் சம்பந்தப்பட்டிருப்பதற்கு ஆதாரங்கள் இருப்பதாகவும் நீதிபதி சித்திக் தீர்ப்பளித்தார்.

அரசதரப்புச் சட்டத்தரணியான ராஜமாணிக்கம் புலிகள் இந்தக் கொலையை மோசமான முறையில் செய்ததாக குற்றம் சாட்டினர். தங்கள் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரம் இல்லை என்றும் தங்களை விடுவிக்குமாறும் கோரி சந்தேக நபர்கள் தொடுத்த வழக்கின் விசாரணை கடந்த ஆறு மாத காலமாக நடைபெற்றது. குற்றம் சாட்டவர்கள் மீது தொடர்ந்தும் விசாரணை நடத்த போதிய சாட்சியங்கள் உள்ளன என்று நீதிபதி தீர்ப்பில் கூறினர்.

ஆயினும் இந்த தீர்ப்பை எதிர்த்து தாம் மேன்முறையீடு செய்யப் போவதாக எதிர்த்தரப்பு சட்டத்தரணி துரைசாமி தெரிவித்தார். இதனல் விசாரணை இன்னமும் தாமதமாகலாம்.

இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் கொலைச் சதி முதல் வெடிகுண்டுகளை பாவித்தமை, போலி பாஸ்போட் தயாரித்தமை வரை உள்ளன.

# தேர்தல் பின்போடப்படும்

அரசாங்கம் வடக்கு கிழக்கில் நடத்தவிருந்த தேர்தல்களில் சிலவற்றை பின்போடவிருப்பதாக பிரேமசந்திரன் கூறியிருக்கிருர். டிசம்பர் மாதம் நடைபெற இருப்பதாக கூறப்படும் இந்த தேர்தல் மார்ச் மாதம் வரை பின்போடப்படலாம்.

அந்தப் பிரதேசங்களில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் எதிர்ப்புக்காரணமாக இந்த தேர்தல்கள் பின்போடப்படும் என்று இரண்டு அமைச்சர்கள் கூறியதாக பிரேமச்சந்திரன் தெரிவித்தார். நாட்டின் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கான முயற்சிகள் நடைபெற்ருல் மட்டுமே தாங்கள் தேர்தலில் கலந்து கொள்ளப் போவதாகவும் அவர்மேலும் கூறினர்.

# இராணுவத்தினருக்காக கொழும்பில் ஹர்த்தால்

கடந்த வெள்ளிக்கிழமை பூனகரியில் இறந்த இராணுவத்தினருக்காக கொழும்பில் உத்தியோகபற்றற்ற ஹர்த்தால் அனுட்டிக்கப்பட்டது. கொழும்பில் கடைகள் பூட்டப்பட்டதுடன் தெருக்களில் மக்கள் நடமாட்டம் குறைந்து காணப்பட்டது. புறக்கோட்டையில் உள்ள கடைகள் பல பூட்டப்பட்டிருந்தன. சில குழுக்கள் கடைகள் தோறும் சென்று படைவீரர்களை கௌரவிக்க ஹர்த்தால் அனுட்டிக்குமாறு கேட்டிருந்தன. வெள்ளைக் கொடிகளும் பறக்க விடப்பட்டிருந்தன. சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன.

இனக்கலவரம் தலைதூக்காதபடி பல இடங்களில் படையினர் நடமாடினர். குறிப்பாக கண்டி, குருணகலை போன்ற இடங்களைச் சேர்ந்த படையினர் அதிகம் இறந்ததால் அந்தப் பகுதிகளில் பாதுகாப்பு அதிகமாக இருந்தது. நுவர எலியாவில் வடக்கிலிருந்து வந்த தமிழர் பலர் மீது சோதனை நடத்தப்பட்டது.

# தொண்டமான்...

இதனல் அரசை விட்டு வெளியேற எண்ணுகின்றனர்.

அத்துடன் தொழிலாளர்களுக்கு 300 நாள் வேலை என்ற திட்டத்திற்கு முதலில் சம்மதம் தெரிவித்த தோட்ட முகாமை நிறுவனங்கள் தற்போது பின்வாங்கியுள்ளது. இதுவும் தொண்டமான் எதிர்க்கும் விடயமாகும்.

பிரேமதாசா காலத்தில் சுமார் ஐந்து லட்சம் பேருக்கு குடியுரிமை வழங்கப்பட்டதால் அவர்களின் வாக்குப் பலத்தினுல் தொண்டமான் சிங்களக் கட்சிகளை ஆட்டிப்படைத்து வருகிருர். சமீபத்திய மாகாணசபைத் தேர்தல்களிலும் மலையகத்தில் வெற்றியை நிர்ணயித்தது தொழிலாளர்களின் வாக்குகளே. பதுளை, நுவரெலியா, கண்டி, ரத்தினபுரி, கேகாலை ஆகிய இடங்களில் சிங்களக் கட்சிகள் வெற்றி பெறுவதாயின் தொண்டமானின் ஆதரவை நாடியே ஆக வேண்டும். முன்பு ஜே.ஆர், பிரேமதாச ஆகியோர் தங்கள் ஜனதிபதி பதவிகளைப் பெற ஐம்பது வீத தேவைப்படும் வாக்குகளைப் பெற தொண்டமானே உதவினர். இதனல்தான் அவர் துணிச்சலாக பல கருத்துக்களை முன்வைத்திருந்தார். சமீபத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களிடம் அனுரா ஐ.தே. கட்சியில் சேர்ந்திருக்கக் கூடாது என்றும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் பிரச்சனையை சமாளிக்கும் விதத்தில் பிரதமரும் சொக்ஸியும் ஜனதிபதியைச் சந்தித்து தொண்டமானின் அவசியத்தை வலியுறுத்தி அவரைச் சந்திக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

மத்திய மாகாண சபையிலும் தொண்டமானின் காங்கிரசின் உதவியுடனேயே ஐ.தே.கட்சி ஆட்சியமைத்துள்ளது. தொண்டமான் விலகும் பட்சத்தில் எதிர்க்கட்சிகளின் கையில் ஆட்சி செல்லலாம். இதனல் மூன்று மாகாணங்களை ஐ.தே.கட்சி இழக்கும் நிலை ஏற்படலாம்.

இதற்குள் தொண்டமான் காமினியுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதாகவும் கூறப்படுகிறது. சுதந்திரக்கட்சியும் இதற்குள் தொண்டமானைத் தங்கள் வசம் இழுக்க முயல்கிறது. பாராளுமன்றத்தில் பேசிய சிறிமாவோவும் விரைவில் இன்னெரு மாகாணசபை தங்கள் வசம் வரும் என்று கூறியிருக்கிருர். இதன் மூலம் சிறிமாவோ மத்திய மாகாண சபையைக் கவிழ்க்க தொண்டாவின் உதவியை நாடக் கூடும்.

# மலிந்த விலையில் விமானம் வாங்க முயற்சி

எயர்லங்கா நிறுவனம் எயர்பஸ் நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை ரத்துச் செய்து ஏற்கனவே வாங்க இருந்த இரண்டு விமானங்களை வாங்கும் திட்டத்தை கைவிட்டு ஆயினும் குறைந்த விலையில் இரண்டு விமானங்களை வாங்குவதற்கு சம்மதிக்க உள்ளது. உலக வங்கியின் ஆலோசகர் ஒருவரின் உதவியுடன் இலங்கை அரசு எயர்பஸ் நிறுவனத்துடன் இது குறித்த பேச்சுவார்த்தைகளை நடத்தும்.

முதலில் 1991 இல் ஏழு விமானங்களை எழுபது கோடி டொலர்களுக்கு வாங்க இலங்கை அரசு ஒப்பந்தம் செய்தது. இதில் முதல் இரண்டு விமானங்களும் இவ்வருட தொடக்கத்தில் கிடைத்திருந்தன. ஆயினும் மீதி ஐந்து விமானங்களுக்கான விண்ணப்பங்கள் ரத்துச் செய்யப்பட்டிருந்தன.

இந்த கொள்வனவினுல் இலங்கை பெருமளவில் பணத்தை இழக்கும் என உலக வங்கி, பத்திரிகைகள், எதிர்க்கட்சியினர் கண்டனம் தெரிவித்திருந்தன.


காற்றினிலே ஒரு கீதம்

**கீதவாணி**

வானொலி நிகழ்ச்சி

அலைவரிசை 88.9 FM

சனி காலை 10 மணி முதல் 11 மணி வரை

ஞாயிறு காலை 6 மணி முதல் 8 மணி வரை

தொடர்புகளுக்கு

447 9031


# மனநோயால் பாதிப்புறும் குழந்தைகள்

யாழ்ப்பாணம் சென்ற றெய்ட்டர் நிருபரான மினெலி டி சொய்சா யுத்தம் காரணமாக அங்கு வாழ்பவர்களில் ஏற்பட்டுள்ள மனரீதியான தாக்கம் பற்றி எழுதியிருக்கிறுர்.

ஒரு வருடத்திற்கு முன்னர் சிவராணி (உண்மைப் பெயர் அல்ல) என்ற ஒன்பது வயதுப் பெண் குழந்தை தான் டாக்டராக வர வேண்டும் என்று விரும்பினுள். ஆனுல் இன்றோ தான் நாளை உயிரோடு இருப்பேனு என்று ஆச்சரியப்படுகிறுள். 'கடவுள் ஏன் இதை எங்களுக்குச் செய்தார் என்று அவள் கேட்கிறுள்' என்கிறுர் தாயார்.

எந்த சத்தங்களும் அவளைப் பயப்படுத்துகின்றன. தனது தாயில்லாமல் அவள் எங்குமே போக மறுக்கின்ருள். குழந்தைகளுடன் விளையாட மறுக்கின்ருள். ஒரு வருடத்திற்கு முன்னர் இவளது கண்முன்னுல் அவளது வீடு விமானத் தாக்குதலில் தரைமட்டமானது. 'அவளுக்கு சமாதானம் நிறைந்த சூழல் வேண்டும். தொடர்ந்தும் இங்கே வாழும் வரைக்கும், தொடர்ச்சியான தாக்குதல்களுக்கு ஆளாகும்வரைக்கும் இவள் குணமடைய மாட்டாள். இது ஓட்டை வாளியினுள் நீர் வார்ப்பது போன்றது' என்கிறுர், இவளுக்கு சிகிச்சை அளிக்கும் டாக்டர் தயா சோமசுந்தரம். இவர் யாழ் வைத்தியசாலையில் அதிர்ச்சி சம்பந்தப்பட்ட கிளினிக் ஒன்றை நடத்துகிறுர்.

யாழ்ப்பாணத்தில் இருக்கின்ற இரண்டு மனேதத்துவ டாக்டர்களில் தயா ஒருவர். Post Traumatic Stress Disorder எனப்படுகின்ற அதிர்ச்சிக்குப் பிந்திய அழுத்தங்கள் தொடர்பான வருத்தங்கள் பெருமளவில் உள்ளதாகவும் இது வியட்னுமில் யுத்தம் செய்தவர்கள் அனுபவித்தது போன்றது என்றும் கூறுகிறுர் இவர்.

யாழ்ப்பாணத்தில் போதியளவில் மனேதத்துவவியலாளர்களோ, சிகிச்சையாளர்களோ இல்லை என்கிறுர் இவர். அத்துடன் மருந்துகளும் இல்லை.

ஒவ்வொருவரும் ஏதோ ஒருவிதத்தில் பாதிக்கப்பட்டிருக்கிறுர்கள். ஒவ்வொரு மாதமும் நூறு பேர் வரை வருகிறுர்கள். ஆனுல் பத்து வீதத்தினர் மட்டுமே சிகிச்சைக்கு வருகிறுர்கள். இங்கே வருவதாயின் மோசமான நிலையுள்ளவர்களே வருகிறுர்கள் என்கிறுர் அவர்.

மனநோய்க்கு சிகிச்சை பெறுவதில் சமூகத்தில் சிக்கல்களும் உள்ளன. ஆயினும் தங்களின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட விடயங்களால் அது ஏற்படுகின்றது என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறுர்கள்.

எழுபது வீதம் குழந்தைகள் இதனுல் பாதிக்கப்பட்டிருக்கிறுர்கள், வயதான குழந்தைகள் குழந்தைத்தனம் பெறுகிறுர்கள், பேச்சுத்திறன், வாசிப்புத்திறனை இழக்கிறுர்கள். அத்துடன் தனியே இருக்கப் பயப்படுகிறுர்கள். கட்டுப்பாடின்றி சிறுநீர் கழிக்கிறுர்கள்.

இவர்களுடைய பெற்றோரும் தளர்ந்து போய் விடுகின்றனர். இது குழந்தைகளை மீண்டும் பாதிக்கிறது.

91 இல் யாழ்ப்பாணத்தில் வசிக்கின்ற 101 பேரை பேட்டி கண்ட போது அதில் 30 வீதத்தினருக்கு மனரீதியான பாதிப்பிருந்தது, (PSTD) ஐம்பது வீதமானேர் அழுத்தங்களுக்கு ஆளாகியிருந்தனர். (Depression). எண்பது வீதமானேர் உறவுகளில் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இதில் பெண்களே அதிகம் பாதிக்கப்பட்டனர். அவர்களின் கணவன்மார் கொல்லப்பட்டோ, சித்திரவதைப்பட்டோ, தடுத்து

**6ம் பக்கம் பார்க்க..**

# தலைச்சாட்சி

போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் என்ற திமிர் பிடித்த வாசகங்களை ஜே.ஆர் சொல்லிப் போய் இப்போது பத்து வருடங்கள்.
பனியிலிருந்து விழுந்து நொந்து கிடக்கும் தமிழ் மனிதர்களை சிங்கள அரசு மாடுகள் மிதித்துப் போய் சரியாக பத்து வருடங்கள்.
இந்த பத்து வருட காலத்தில் தமிழர்கள் சாதித்தது ஒன்று. போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்று சிங்கள அரசுக்கு திருப்பிச் சொல்லும் அளவுக்கு பலம் வாய்ந்த புலிகள் இயக்கத்தை வளர்த்து விட்டிருப்பது.
போர்கள் நிரந்தர வெற்றியைத் தேடித் தருவதில்லை. மாறாக இரு எதிரணிகளையும் பேச்சுவார்த்தை சார்ந்த தீர்வொன்றுக்காக நெருக்குவாரப் படுத்துவதிலேயே போர்கள் பெரும்பயனை ஈட்டித் தந்திருக்கின்றன. ஸிம்பாவே விடுதலை, தென்னாபிரிக்கச் சமாதானத் தீர்வு, இஸ்ரேல் பலஸ்தீனிய ஒப்பந்தம், கம்போடிய சமாதானத் தீர்வு போன்றவற்றுக்கெல்லாம் ஆயுதப் போராட்டங்கள்தான் முன்னோடியாக இருந்திருக்கின்றன.
பிரித்தானிய பெருநிலப்பரப்பில் ஐ. ஆர்.ஏ கையாண்ட குண்டுத்தாக்குதல்கள் பிரித்தானிய அரசை சின்பெயின் என்ற ஐ.ஆர். ஏயின் அரசியல் பிரிவுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் நிலைக்கு தள்ளியிருக்கிறது.
பல உயிர்களின் மடிவில் தான் சில உயிர்களின் வாழ்வு நிச்சயமாக்கப்படுகிறது. இதில் எவருக்கும் சம்மதமில்லையாயினும் இதுவே யதார்த்தம்.
தமிழ் சிங்கள பிணக்குகள் ஆரம்பித்ததிலிருந்து இரு பகுதியினருக்கும் அளவற்ற இழப்புகள். இருப்பினும் அரசு தரப்பினர் மனமுவந்த சமாதானத் தீர்வுக்கு இன்னமும் தயாராகவில்லை. புலிகள் இராணுவரீதியாக வெற்றியீட்டும் போது சமாதானம் பற்றிப் பேசுவதும் அவர்கள் பலவீனப்பட்டிருக்கும் போது இராணுவத் தீர்வு பற்றிக் கொக்கரிப்பதுமாக வெறும் அரசியல் நாடகமாடிக் கொள்வதே வழக்கமாகி விட்டது. இந்த நிலையில் புலிகள் இதுவரை சொல்லிக் கொண்டும் செய்து கொண்டும் வந்த 'ஆழம் பார்த்து காலை விடும்' எவரையும் எளிதில் நம்பாத நடவடிக்கைகள் சரியானது தான் என்று விஜயதுங்க அரசு நிருபித்திருக்கிறது.
பேச்சுவார்த்தைகளினால் மட்டுமே பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவேண்டுமென்ற மனித நேய சக்திகளினால் கட்டி வளர்க்கப்பட்ட நம்பிக்கைகளைத் தகர்க்கும் வகையில் சிங்கள ஆட்சியாளர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருவது இளகிய மனங்களை இறுக்கமாக்கி வருவது மட்டுமல்லாது தமிழரிடத்தே புலிகளுக்கான ஆதரவையும் அதிகரிக்கச் செய்கிறது.
நிகரான பலமுள்ள எதிரியுடன் பேச்சுவார்த்தைக்கு போவது என்பது பொதுவான ஒரு சண்டியர் சட்டம். சிறு சண்டியர்களை குட்டிக் கலைத்து விட்டு பெரும் சண்டியர்களுக்குத் தலையசைத்து விட்டுப் போகும் இப்படியான சண்டியர் சட்டங்கள் உலகம் பூராவும் அனுசரிக்கப்படுகிறது. 'நீ என்னோடு தனகாத வரைக்கும் நான் உன்னோடு தனக மாட்டேன்' என்பது போன்ற ஒப்பந்தங்கள் பல உலக நாடுகளிடையேயும் நீண்ட கால சமாதானம் நிலவ வழிவகுத்திருக்கின்றன.
ஸ்திரமற்ற நட்பை விடவும் பலமான எதிரியை ஓரளவு நம்பலாம். எதிரியை எந்த நேரத்திலும் இழுத்துக் காரியமாற்றலாம். நண்பரை நம்பி எதுவுமே செய்து விட முடியாது. அரசியலிலும் இது விதிவிலக்கல்ல. உடையாத சோவியத் யூனியனை விடவும் உடைந்து போன குடியரசுகள் தான் அமெரிக்க அரசுக்கு கவலை தருவன. இவர்கள் கைகளில் இருக்கும் அணு ஆயுதங்கள் எங்கு எப்போது வெடிக்கும் என்று சொல்லி விடமுடியாது.
பிரபாகரனை நண்பனாக கருதியதால் தான் தன்னைக் கொல்வதற்கு புலிகள் முனைய மாட்டார்கள் என்று பிரேமதாசா நினைத்திருக்கலாம். விஜயதுங்காவும் ஆரம்பத்தில் நட்பு நாடகமாடி புலிப்பல் பார்த்து பின் வேட்டையில் இறங்கினார். புலி பொய்ப்பல்லைக் காட்டி விட்டு பின்னர் குதறி விட்டது.
பிரேமதாசாவின் உடல் கூறுகளினால் கொழும்புத் தெருக்களில் கோலம் போட்டுக் காட்டிய பிறகும் கூட விஜயதுங்க இராணுவத் தீர்வின் பக்கம் சரிந்ததை என்னவென்று சொல்ல முடியும்?
கண்களை நம்பாதே, Gun களை நம்பு?
மனச்சாட்சி பிழை என்கிறது.
தலைச்சாட்சி சரியென்கிறது.

## சிவதாசனின்



# அசை

# கிழக்கில் தாக்குதல்

கிழக்கில் நடைபெற்ற தாக்குதல் ஒன்றில் எட்டு புலிகளை கடந்த திங்கட்கிழமை கொன்றதாக இராணுவம் கூறுகிறது. திருமலையில் நடைபெற்ற இந்த தாக்குதலில் இராணுவத்தினருக்கு காயம் எதுவுமில்லை என்று கூறப்பட்டது.
மட்டக்களப்பில் ரோந்து சென்ற இரண்டு விமானப் படையினரும் புலிகளின் தாக்குதல்களில் கொல்லப்பட்டதாகவும் இன்னொரு செய்தி கூறுகிறது. கண்ணிவெடி வெடித்ததில் விமானப்படையினர் கொல்லப்பட்டதாக செய்திகள் கூறுகின்றன. திருமலையில் இராணுவத்தினர் மீது புலிகள் தாக்கியதில் ஒரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ஐவர் காயமடைந்தனர்.

# யுத்த களத்தில் பெண்புலிகள்

## றெய்ட்டர் நிருபர் செய்தி

யாழ்ப்பாணம் சென்ற றெய்ட்டர் நிருபர் மினெலி டி சொய்சா பெண்புலிகள் பற்றிய செய்திக்குறிப்பு ஒன்றை அனுப்பியுள்ளார்.

தாங்கள் போராட்டத்தில் சேர்ந்ததன் மூலம் தங்கள் சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டதாகவும் தங்கள் ஆண்களிடமும் எதிரி இராணுவத்தினரிடமும் தங்களுக்கு மரியாதை கிடைத்திருக்கிறது என்றும் பெண்புலிகள் கூறியுள்ளனர்.

சமூகத்தில் பெண்கள் குறைவாக மதிப்பிடப்படுவதாகவும் இயக்கத்தில் எல்லோரும் சமனக இருப்பதாகவும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே பயிற்சியும் ஒரே செயற்பாடுகளும் கிடைப்பதாக ஒரு வருடம் கட்டக்கலே பயின்ற ஆர்த்தி என்ற 26 வயதுப் பெண்புலி கூறினர்.

இதுவரையும் இறந்த 5500 புலிகளில் 417 பேர் பெண்கள். 1988 இல் ஆர்த்திக்கு முள்ளந்தண்டில் குண்டு பாய்ந்தது, அவரது கால்கள் தற்காலிகமாக செயலிழந்தன, ஆறு மாதங்களின் பின்னர் குணமடைந்து தற்போது யுத்தமுனையில் நிற்கிறார்.

இனரீதியான அராஜகங்களை, அகதிகள் இடம் பெயர்ந்த போது, மக்கள் குண்டுவீச்சால் கொல்லப்பட்ட போது கல்வியை விட போராட்டம் முக்கியம் என்று உணர்ந்தேன் என்கிறார் ஆர்த்தி.

பெண்கள் தான் அதிகளவில் பாதிக்கப்படுகிறார்கள், அவர்கள் விதவைகளாக்கப்பட்டார்கள், கற்பழிக்கப்பட்டார்கள், குழந்தைகளை இழந்தார்கள், எங்கள் நாட்டில் ஆண்களை விட பெண்களே அதிகம், எனவே நாங்கள் போராட வேண்டும் என்கிறார் சந்திரிகா என்ற 21 வயதான பெண்புலி. இவர் 1991 இல் இயக்கத்தில் சேர்ந்தவர்.

பெண் புலிகளுக்கு மூன்று மாதம் பயிற்சி வழங்கப்படுகிறது. சுவர் ஏறுதல், தடைகளைப் பாய்தல், கயிற்றில் ஏறுதல், முட்கம்பிக்கூடாக ஊர்ந்து செல்லல், நெருப்பினூடாகப் பாய்தல் போன்ற பயிற்சிகளுடன் கிரனேட் வீசிகள், 50 கலிபர் துப்பாக்கிகளிலும் பயிற்சி வழங்கப்படுகிறது.

இந்த நேரத்தில் தான் முழங்கைத் தோல் கிழிகிறது, முட்கம்பிகள் பாதங்களை குத்துகின்றன, கயிறு கைகளை தேய்க்கின்றன என்று அடேலா பாலசிங்கம் 'பெண் போராளிகள்' பற்றி எழுதிய புத்தகத்தில் குறிப்பிடுகிறார். அவர்கள் வியர்வையில் குளிக்கிறார்கள், பவுடருக்கு பதிலாக முகத்தில் தூசு படர்கிறது, உடைகள் கிழிகின்றன, இந்த நேரம் தான் துப்பாக்கி உங்களுக்கு நண்பனுகிறது, தயாராயிருத்தலே உயிரைக் காக்கிறது, சந்திரனும் நட்சத்திரமுமே ஒளியாயிருக்கிறது, புல்லே உங்களுக்கு தகவல் தருகிறது என்கிறார் அடேலா.

மற்ற வழிகளில் தனக்கு கிடைக்காத சம உரிமை அங்கு கிடைப்பதாக கூறுகிறார் ஆர்த்தி. நாங்கள் எதைச் செய்யும் போதும் தந்தை, சகோதரர்களிடம் அனுமதி கேட்க வேண்டும், இங்கே நாங்கள் சுதந்திரமாயுள்ளோம் என்று கூறும் ஆர்த்தியின் 21 வயது சகோதரியும் இயக்கத்தில் உள்ளார்.

யுத்தம் முடிந்ததும் சமூகத்தில் சேர்ந்து கொள்வாரா என்று கேட்ட போது சமூகம் தங்களை சேர்த்துக் கொள்ள வேண்டும், இல்லையேல் சமூகத்தை மாற்றுவோம் என்கிறார் ஆர்த்தி. 1986 இல் முதல் தடவையாக பெண்கள் போராடும்வரை ஆண்கள் அவர்களின் திறமை பற்றி சந்தேகம் கொண்டிருந்தார்கள். தங்களது திறமையைப் பார்த்து அவர்கள் மனதை மாற்றிக் கொண்டார்கள் என்று கூறுகிறார் ஆர்த்தி. முதலில் களத்தில் இறங்கியவர்களில் இவரும் ஒருவர்.

சமீபத்திய யுத்தத்தில் கலந்து கொண்ட இராணுவத்தினரும் கூறுகிறார். பெண்கள் கடும் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு நடுவிலும் முன்னேறுகிறார்கள் என்றார்.

இவர்களின் திறமையால் பெண்களுக்கான பயிற்சி முகாம் 1987இல் உருவானது. சகல பெரிய யுத்தங்களிலும் முகாம் தாக்குதல்களிலும் பெண்கள் பங்குபற்றினர். கரும்புலிகள், கடற்புலிகளிலும் அவர்கள் உள்ளனர்.

கழுத்தில் சயனைட் கொண்டிருந்த ஆர்த்தி ஒரு தடவை அதை விழுங்க கூடிய நிலையில் இருந்தார். 1987ல் இந்திய இராணுவத்தினர் ஒருவர் இவரை எதிர்கொண்ட போது எந்த வித ரவையும் இல்லாமல் வெறும் கிரனெட்டுடன் எதிர்கொண்ட போது தான் கிரனெட்டை எறிந்தவுடன் இந்திய இராணுவத்தினர் ஓடி விட்டதாகவும் அதனுல் சயனைட்டை அருந்தவில்லை என்றும் கூறுகிறார் ஆர்த்தி.

சரணடைவதை விட மரணிப்பது மேல் என்கிறார் அவர்.

இவ்வாறு மினெலி டிசொய்சா தனது குறிப்பில் தெரிவித்திருக்கிறார்.

### மனநோயால் பாதிக்கப்படும்..

வைக்கப்பட்டோ, நாட்டை விட்டு சென்றோ உள்ளனர், அவர்களே குடும்பத்தின் பொறுப்பை ஏற்க வேண்டியிருக்கிறது என்கிறார் தயா.

13 வயது முதல் இயக்கத்தில் செயற்படுபவர்கள் கொல்லப்பட்ட சகாக்களையும் அங்கம் இழந்த நண்பர்களையும் காண வேண்டிய நிலையிலும் காயமடைந்தவர்களை தூக்கிச் செல்ல வேண்டிய நிலையிலும் நிரந்தரமாகவே பாதிக்கப்படுகின்றனர். இவர்கள் உடல்ரீதியாக உறுதியாக உள்ளதால் இவர்களைக் கட்டுப்படுத்த முடியாது.

குழந்தைகள் முழுமையாக வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாததால் சிகிச்சையின் போது இவர்களிடம் படம் கீறுமாறு கேட்கப்படுகிறது. ஜயந்தா என்ற 13 வயதுச் சிறுவன் தன் வீட்டுக்கு விமானம் குண்டு போடுவதையும் கொல்லப்பட்ட உடல் ஒன்று கிடப்பதையும் துப்பாக்கியால் ஒருவர் விமானத்திற்கு சுடுவதையும் விமானம் தீப்பற்றுவதையும் கீறினர்.

உடல் காயங்கள் மாறலாம், ஆனுல் இவை மாறுது என்கிறார் தயா.

மினெலி டி சொய்சா தனது செய்திக் குறிப்பில் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கை, இந்திய உணவுப் பொருட்கள், கடலுணவு, மரக்கறி வகைகள்
அனைத்தும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ள விரையுங்கள்

# துர்க்காஸ் சுப்பர்மார்க்கட்

**Tel:297 9444**

## விசேட மலிவு விற்பனை

| | 5 கிலோ | 1 கிலோ |
|---|---|---|
| சம்பா அரிசி | 6.50 | 1.39 |
| குத்தரிசி | 6.50 | 1.39 |
| அரிசிமா | 6.89 | 1.39 |

சீனி 1.29/2 கிலோ
பால் 2% $2.99
முட்டை(12) $1.39
5 றேசஸ் மா $10.99
சவர்க்காரம் .39


மிளகாய்த்தூள் 3.29/450 கி
6.99/900 கி

மைசூர் பருப்பு, உழுத்தம்பருப்பு,
துவரம்பருப்பு, பயத்தம்பருப்பு
1 கிலோ $ 1.39
5 கிலோ $ 6.50

## THURKAS SUPERMARKET

*4080 Sheppard ave E (Kennedy/Sheppard)*

மற்றும் ஆட்டிறைச்சி,
கோழி, கோழிக்கால், ஈரல்,
கிட்னி, மரக்கறி வகைகள்,
பழவகைகள் அனைத்தும்
மலிவு விலையில்...




# ATLANTIC AUTO CLINIC LTD

**1960 LAWRENCE AVE EAST**

**755 8550**

**CALL**
**MIKE or RAJAN**

**Car Certification**
**29.99**


Exhaust,starter,Shocks,Altenater,Clutch
Radio,Transmission,Air Conditon,
General Repair
பல வருட அனுபவம் மிக்கவர்கள்

| | |
|---|---|
| 4WHEEL ALLIGNMENT | 44.99 |
| BREAK SHOES | 29.99 |
| BREAK PADS | 24.99 |
| TUNE UP FROM | 34.99 |
| ENGINE SHAMPOO | 24.99 |
| FILTER 4 CYL | 16.99 |

உங்கள் வாகனங்களை
குறைந்த செலவில் சிறந்த முறையில்
கம்பியூட்டர் இணைப்புகளுடன்
திருத்திக் கொள்வதற்கு நகரில்
ஒரு சிறந்த ஸ்தாபனம்

Fuel Injections, Electronic
and Electric
திருத்துவதில் பல வருடம்
அனுபவம் உள்ளவர்கள்

**We use Quaker State Oil**



# ஜெயந்தீஸனின் விசாரணைகள்

எஸ்.கௌந்தி 'தாயகம்' பக்கங்களில் நடத்தி வரும் விசாரணைகளைக் கண்டதும் எனக்கும் கூட விசாரணை நடத்தும் ஆசை வந்து விட்டது. இந்த ஆசையின் விளைவாக கனிந்ததே இச்சித்திரம்)

மாலை நேரம் ஒன்றில் பார் ஒன்றிலிருந்து எழுதிக் கொண்டிருக்கிறேன். சூடான பால் வாங்கிய அழகிய கறுப்பி ஒருத்தி எனக்கு எதிரிலேயே வந்து அமர்கிருள். இது எனக்குப் புதினமாகப்பட்டது. எனது எழுத்துப் பணிக்கு அவள் தொல்லையாகி விடுவாளோ என்று அஞ்சிய barman அகமட் ஓடி வந்து 'வேறு இடத்தில் போய் இருக்கலாமே' என்று அவளிடம் சொல்லி விட்டு என்னைப் பார்த்து 'உவளை உனக்குத் தெரியுமா?' என்று கேட்கின்ருர். தெரியும் என்பது போலத் தலையாட்டுகின்றேன். அ வளை இப்போது நிமிர்ந்து பார்க்கின்றேன். நட்சத்திர வடிவில் மூக்குத்தி ஒன்று மின்னுகின்றது. அவள் என்னைப் பார்த்துப் புன்னகைக்க நானும் புன்னகைக்கின்றேன். மூக்குத்தியைச் சுட்டிக் காட்டி அதற்கு பிரெஞ்சு மொழியில் என்ன பெயர் என்று கேட்டதும் அவள் தடுமாறி விட்டாள். நான் அறிந்த வரையில் அதற்கு பிரெஞ்சுமொழியில் பெயர் இல்லை. எனது பிரெஞ்சு ஞானத்தைக் காட்டுவது போல ஒரு பெயரை உடனடியாக உருவாக்கிச் சொல்கின்றேன். சிரிக்கின்ருள். தமிழில் இதற்கு 'மூக்குத்தி' என்பதே பெயர். அதனையே பிரெஞ்சிலும் சுவீகரித்துக் கொள்ளலாமே என இன்னெரு சிபார்சு செய்தவுடன் இரண்டு தடவைகள் 'மூக்குத்தீ' என அவள் சொல்லிப் பார்த்தாள். உச்சரிப்பு அச்சாவாகத் தான் இருந்தது.

சில மாதங்களாக பாரிஸ் மெத்ரோக்களில் எனது விழிகளை வசீகரிப்பது மூக்குத்தி தான். பிரெஞ்சு ஆபிரிக்கப் பெண்கள் தமிழ் பெண்களுடன் போட்டி போடுவது போல மூக்குத்தி அணிந்து தமது பொலிவுக்கு பொலிவு காட்டுவதில் மும்முரமாக உள்ளனர். மூக்குத்தி அணிந்த பெண்களிடம் ஒரு தனித்த லுக் உள்ளது என்பது தான் எனது அழகியல் மனத்தின் தனிப்பட்ட அபிப்பிராயம். பெண்ணிலை வாதிகள் எனது அபிப்பிராயத்துடன் உடன்பட மாட்டார்கள் என்பது எனக்குத் தெரியாத விடயமல்ல. நகைக்கடைகளுக்குள் நுழைந்து புதிய ஸ்டைல்களில் 'வெளியிடப்பட்டுள்ள' மூக்குத்திகளை நான் பார்த்து ரசிப்பதுண்டு. ஒரு நாள் நான் இப்படி ரஸித்துக் கொண்டிருந்த போது திருமதி OC என்னைக் கண்டுவிட்டா. 'ஆருக்கு மூக்குத்தி செலக்ட் பண்ணிறீர்.. எனக்கு உப்பவே உண்மை தெரிஞ்சாக வேணும்' என்று மிரட்டும் பாணியில் கேட்டா. நான் உடனடியாக 'உங்களுக்காகத்தான்' எனச் சொன்னவுடன் உள்ளம் கனிந்து என்னை நன்றியுணர்வுடன் பார்த்தா. அன்றைக்கு எனக்கு 300 பிராங் நட்டம். பார்த்தீர்களா, ஜெயந்தீஸனுடன் விதி எப்படி விளையாடுகின்றது என்று. எது எப்படியோ, எனது மூக்குத்தி, திருமதி OC யின் எழிலுக்கு எழில் கூட்டியது என்பது மட்டும் உண்மை. பலர் தன்னைப் புகழ்ந்ததாக பல தடவைகள் என்னைக் கண்ட போதெல்லாம் சொல்லி விட்டா.

ஒரு நாள் நானும் திருமதி O.C யும் அகஸ்மாத்தாக மெத்ரோவுக்குள் முட்டுப்பட்டுக் கொண்டோம். Chateau Rouge மார்க்கட்டில் தான் ஷொப்பிங் செய்யப்போவதாகவும் துணைக்கு என்னை வருமாறும் கேட்டுக் கொண்டா. இருவரும் மெத்ரோவில் சற்றே நெருக்கமாக இருந்து போய்க் கொண்டிருந்த போது 'அந்தப் பெடியனை ஒருக்காப் பாரும்' என்று சொல்லி எனது சுயநினைவை அவ கெடுத்தா. அவன் ஒரு கறுவல். மூக்கின் இரண்டு பக்கங்களிலும் வளைய வடிவில் இரண்டு மூக்குத்திகள் போட்டிருந்தான். உங்கள் தலையில் அடித்துச் சொல்வேன். நாணயக்கயிறுடன் கூடிய நாம்பன் மாட்டைப் பார்த்தது போலிருந்தது.

'எனக்கெண்டா உது துண்டாப் பிடிக்கேலை. கறுவல்களுக்கு தாங்கள் என்னவோ பிறின்ஸ், மைக்கேல் ஜாக்ஸன் எண்ட நினைப்பு. உவங்கள் ஒரு பெட்டையளையும் நிம்மதியாக இருக்க விடமாட்டாங்கள். என்ரை அப்பாட்மெண்டிலை இருக்கிற கறுவல் ஒருவன் எப்ப என்னைக் கண்டாலும் உத்துப்பார்த்தபடி'

'அவன் ஒரு இலக்கியவாதியாக இருந்து நீங்கள் கவிதை எழுதிற விசயம் ஒருவேளை அவனுக்கு தெரிஞ்சிருக்கலாம். ஒருக்காக் கதைச்சுப் பாருங்கோவன்' என்றேன்.

'அவன்ரை பார்வை இலக்கியப் பார்வையில்லை. வேற பார்வை... எனக்கெண்டா அவனைப் பார்க்கிற நேரமெல்லாம் பயமாய் கிடக்கு. ஒருக்கா வந்து வெருட்டிவிடுமன்'

'வெருட்டிற வேலைக்கு நான் தோதானவன் இல்லை. ஆரும் இயக்ககாரரிட்டை போய் ஹெல்ப் கேட்கலாமே' என்றதும் அவவின் முகம் சிணுங்கி விட்டது. சில நிமிடங்கள் முகத்தைக் கோணலாக்கி மறுபக்கம் வைத்தா. இதற்குள் Chateau Rouge மெத்ரோ வந்து விட்டது.

மார்க்கட்டில் நல்ல சனம். யாரும் இலக்கியவாதிகள் என்னையும் அவவையும் ஒன்ருகக் கண்டு விடக் கூடாது எனப் பிரார்த்தித்துக் கொண்டேன். நாங்கள் சாமான்களை வாங்கிக் கொண்டிருந்த போது திடுதிப்பென்று விமர்சகர் கார்த்திக் எங்கள் முன் பிரச்சன்னமானுர். எனக்கு உடல் நடுங்கியது. எதனையும் உலக இலக்கியமாக்கி விடும் அபூர்வசக்தி அவரிடம் உண்டு.

'அக்கா, அவரோட ஒரு முக்கியமான விசயம் கதைக்க வேணும். அடிக்கிறன், அடிக்கிறன், என் கேஜாக்கிடக்கு. எப்ப வந்தா அவரைப் பிடிக்கலாம்' என்றவுடன் இருவரது உடலும் சேர்ந்து நடுங்கியது.

'இந்தக் கிழமை அவருக்கு எக்கச்சக்கமான அப்பொய்ண்ட மெண்ட்ஸ் இருக்கு. நீர் வாறகிழமை ஒருக்கா அடிச்சுப் பார்ரும்' என்று திருமதி ஓ.சி சொன்னவுடன் 'நான் தேடிக்கொண்டிருக்கிறதாகவும் எனக்கு ஒருக்கா அவசரமாய் அடிக்கட்டாம் எண்டும் அவரிட்ட சொல்லுங்கோ'

என்றபடி கார்த்திக் போனதும் அவ என்னைப் பார்த்த 'உந்த அறுவான், உப்பவே எல்லாருக்கும் அடிச்சு எண்ணையும் உம்மையும் ஒண்டாக் கண்டதெண்டு சொல்லுவான். அவர் என்னோட புடுங்குப்பட்டா என்ன சொல்றதெண்டு எனக்குத் தெரியேலே. ஒரு ஐடியா சொல்லும்' எனக் கேட்டா. 'என்னை மார்க்கட்டிலே கண்டதெண்டு சொல்லுங்கோ. அவர் வித்தியாசமாக ஏதும் கதைச்சாரெண்டா... அவருக்கும் கார்த்திக்கும் பாடம் படிப்பிக்க ஒரு திட்டம் இருக்கு..' என்றேன்.

'அது என்ன திட்டம்?' அவ தனது விழிகளைத் திறந்தா.

'என்ரை மச்சான் சூரியன் இப்ப பிரான்சிலே தான் இருக்கிறான். கராட்டியிலே பிளாக் பெல்ட் வாங்கினவன். அவனிட்ட ஒரு சொல் சொன்னா.. பிரச்சனையை டக்கெண்டு தீர்ப்பான்' என்றேன்.

'சூரியன் உம்மட மச்சானே..' என்றபடி அவ என்னை ஆரத்தழுவ கைகளைத் தூக்க, கையிலிருந்த பாக் கீழே விழுந்து, வாங்கிய பொருட்கள் அனைத்தும் தரையில் சிதற நாங்கள் அவற்றைத் தேடும் பணியில் சுறுசுறுப்பாக ஈடுபட்டோம்.

(மூக்குத்தி மீதான விசாரணை இன்னொரு சந்தர்ப்பத்தில் தொடரும்)

## பென் சூரியனின் 'துட்டுக்'கதைகள்

# சீர் வரிசை வாங்காத சீர்'திரித்த'வாதி

காத்தவராயனுக்கு வயது வட்டுக்குள் போய்க் கொண்டிருந்தது. தனக்கு கலியாணம் பேசினால் என்ன சீதனம் கிடைக்கும் என்று மார்க்கட் நிலவரத்தை அறியும்நோக்குடன் தரகர் ஒருவருக்கு அடித்தான். 'தம்பி, பாங்கில வேலை எண்டால் முப்பது வாங்கித் தரலாம். நீர் வெல்பெயரில் இருக்கிறன், களவாய் வேலை செய்யிறன் எண்டிநீர். உமக்கு ஒரு பத்துத் தான் தருவினம்' என்றுவிட்டார். இப்போதைக்கு வேலை கிடைக்கிற மாதிரியும் இல்லை. வெறும் பத்தாயிரத்தை வாங்கி என்ன செய்ய முடியும்? ஊருக்குப் போய் கலியாணம் செய்யும் எண்ணத்துடன் இருந்த காத்தான் (இது நண்பர்கள் இட்ட பெயர்) மெதுவாக கணக்குப் போட்டான். ஊருக்குப் போக, பொருட்கள் வாங்க எப்படியும் மூண்டு வேணும், ஊரில கலியாண வீடு வைக்க எப்படியும் மூண்டுக்கு மேல வேணும், தாலிக்கொடி, கூறை எண்டு செய்ய அதுக்கும் வேணும்.. பிறகு பெட்டையையும் கூட்டி வரவேண்டும்... கையும் கணக்கும் சரியாய் போயிடும் என்று பார்த்தால் கையையே கடிக்கும் போலிருந்தது.

கனடிய பொருளாதார மந்த நிலை மாதிரி தனது நிலையும் உயரும் என்ற நம்பிக்கை போன காத்தான் திடீரென்று 'நான் சீதனம் வாங்காமல் செய்யப் போறன்' என்று கதையைக் கிளப்பி விட்டான். இப்படிச் செய்தால் தன் நண்பர்கள் மத்தியில் தனக்கு மதிப்பு அதிகமாகும் என்ற எண்ணம். ஊருக்கு எழுதியதும் புயல் கிளம்பியது. கனடா மாப்பிள்ளை காத்தானை வைத்து கொஞ்ச காசு உழைக்கலாம் என்ற பெற்றோரின் ஆசையில் மண் போட்டான் காத்தான். இனியென்ன செய்யிறது. நாசமறுவான் போய் துலையட்டும் என்று ஒரு பெண்ணை பேசினார்கள். முந்தி விழுந்து நான் சீதனம் வாங்கிறேலை எண்டு காத்தான் விட்ட கதையை பெண்ணின் பெற்றோர் கேட்டு மெய் சிலிர்த்துப் போய் 'மாப்பிள்ளை, அன்னக்கிளி உன்னைத்தேடுதே.. உங்களுக்குத் தான் எங்கட அன்னக்கிளி' என்று விட்டார்கள்.

அடுத்து மெதுவாக காத்தான் தனது ராஜதந்திர நடவடிக்கைகளை அவிழ்த்து விட்டான். பெண்ணின் அண்ணன்காரன் ஜேர்மனியில் நீண்ட காலம் இருக்கிறான். காத்தான் போன் எடுத்து 'மச்சான், எனக்கு பேப்பர் அக்சப்ற் பண்ணியிட்டாங்கள். ஆனால் ஸ்பொன்சர் பண்ணினால் ரெண்டு மூண்டு வரிசம் செல்லும். அதுக்கிடையில கலியாணம் செய்யிறதெண்டால் அன்னவை (அன்னக்கிளிக்கு அவன் வைத்த ஆங்கிலப் பெயர்) கொண்டு வாறதுக்கு பேப்பர் வாங்க வேணும், ஒரு நாலாயிரம் கிடைச்சுதெண்டால் உடன கூட்டிக் கொண்டு வந்திடுவன்' என்று நீல் விட.. மலர்களைப் போன்ற தங்கை கொழும்பு லொட்ஜ்களில் உறங்குவதா? என்ற அண்ணன் கற்பனைத் தேரில் பறந்து வட்டிக்கு நாலாயிரத்தை எடுத்து அனுப்ப, காத்தான் அந்தக் காசில் தனக்கு டிக்கட்டைச் செய்து அன்னக்கிளிக்கு பிரசண்ட்களும் வாங்கிக் கொண்டு ஊர்கோலம் போனான்.

போனவன் சும்மா இருந்தானா? மெதுவாக 'அவை சீதனம் ஒண்டும் தரேலைத் தானே, கலியாணச் செலவை அவை பொறுக்கட்டும், தாலி, கூறைச் செலவையும் அவை பொறுக்கட்டும், நான் கோட், சூட் செலவைப் பொறுக்கிறன்' என்றுதன் வீட்டாரிடம் தன் பெருந்தன்மையை வெளிப்படுத்தினான். கோட், சூட் நண்பன் ஒருவனின் கிறடிட் காட்டில் அடித்து ஈற்றனில் வாங்கியது.

தலையில் கைவைத்த அன்னாவின் டாடி ஒருமாதிரி செலவைப் பொறுத்துக் கொண்டார். கலியாணம் முடிந்து ஹோட்டலில் தேன்நிலவு முடித்த காத்தான் தேனிலவு முடிய, 'அங்கிள், நான் போய் அவவைக் கூப்பிட எப்பிடியும் ஒரு வருசத்துக்கு மேல ஆகும். நீங்கள் அதுக்கிடையில விருப்பம் எண்டால் அவவை ஏஜன்சியைப் பிடிச்சு அனுப்புங்கோ' என்றுவிட்டு வந்து சேர்ந்துவிட்டான்.

வந்த காத்தான் சீர் வரிசை எதுவும் வாங்காமல் திருமணம் செய்த சீர் 'திரித்த'வாதி என்று புழுகிக் கொண்டான். பெண்ணைப் பெற்றவன் தலையிடியை மடியில் கட்டி வைக்காமல் கடன் பட்டு அன்னாவைக் கட்டி ஏற்றி விட்டான்.

★ ★ ★

அன்னா வந்து சேர்ந்து விட்டா. 'இஞ்சேருங்கோ, உங்களை நான் சீதனம் வாங்காமல் அல்லே கலியாணம் முடிச்சனான். இங்காலை திரும்பிப் படுங்கோவன்' என்ற காத்தானின் பாசமிகு கோரிக்கையைத் தவிர்க்க முடியாமல் அன்னா எனப்படும் அன்னக்கிளி மந்தகாசப் புன்னகையை வீசியவாறே திரும்பினாள்.

# ஜி. மொனிக்கா; ஆர்ப்பாட்டமற்ற சமாதானத் தேடல்

சமாதானத்தை வலியுறுத்துவதும், இதற்காகப் போராடுவதும் உலக இலக்கியத்தின் பிரதான அங்கமாக காலங்காலமாக இருந்து வந்துள்ளது. துரத்தப்பட்ட சமூகக் குழுக்களினது இலக்கிய வெளிப்பாடுகளில் சமாதானத்துக்கான யாசிப்பினை பொதுப்பண்பாக நாம்தரிசிக்கின்றோம். எது எம்மிடமிருந்து பறிக்கப்பட்டதோ அதறக்காகக் குரல் கொடுத்தல் தவிர்க்க முடியாதது. புகலிடப் பெண் கவிஞைகளுள், ஜி.மொனிக்காவின் எழுத்துக்களில் அநேகமானவை தம்மைச் சமாதான கீதங்களாக இனம் காட்டுகின்றன. "தாயகம்" 5 ஆம் ஆண்டு மலரின் முதலாவது பக்கத்தில் மொனிக்கா காணும் கனவு பின்வருமாறு அமைகின்றது.

***"இரத்தக் கறைகளற்ற***
***தெளிந்த நீரோடையில்***
***நான் சிறகு நனைக்க***
***வேண்டும்....***
***"என் மண்ணை நனைத்த***
***இரத்த வெள்ளமும்***
***கண்ணை நனைத்த***
***கண்ணீர் துளிகளும்***
***மறைந்து போக***
***"என் மண்ணில் நான்***
***சுதந்திரக் காற்றைச்***
***சுவாசிக்க வேண்டும்"***

* * *

பிரெஞ்சு வெளியீடு ஒன்றில் பிரஸ்தாப கவிதை மொழிபெயர்க்கப்பட்டு பிரசுரமாகியுள்ளது. ஜி.மொனிக்கா கண்டியில் தனது கல்லூரி படிப்பை முடித்த பின்னர் போதனாசிரியையாகக் கடமையாற்றினார். தற்போது கனடாவில் வாழ்ந்து வருகின்றார். இலங்கையிலும் தமிழ் அகதிகள் வாழும் ஏனைய நாடுகளிலும் வெளியிடப்படுகின்ற இதழ்களில் மொனிக்காவின் கவிதைகள் நிறையப் பிரசுரமாகியுள்ளன. இவரது கவிதைத் தொகுப்புகளான "நிஜத்தின் நிழல்கள்"(1989), "நிசப்த ராகங்கள்" (1990) ஆகியன சிங்கப்பூரில் பிரசுரமாகியுள்ளன.

* * *

"செல்வாக்குடன் இன்பமாக வாழுபவர்களை நான் நேசிக்கவில்லை. துயரத்திலும் வேதனையிலும் மரண விளிம்பிலும் இருளுக்குள்ளும் தடுமாறுகின்ற அப்பாவி ஜீவன்களையே என் எழுத்துகளில் முத்தமிடுகின்றேன்" எனத் தனது இரண்டாவது கவிதைத் தொகுப்பின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ள மொனிக்காவின் கவிதைகள் இருத்தலின் மீதான விசாரணைகள் சமாதானமான ஓர் மொழியில் செய்வதையே இலக்காகக் கொண்டுள்ளன. சமூக உறவுகளினது உணர்வுசார் பெறுமானங்களை இவரது கவிதைகள் வலியுறுத்துகின்றன. தான் பிரிந்து வந்த அனைத்திற்காகவும் இவர் தனது கவிதைகளில் இரங்குகின்றார்.

***"வீதியில் எத்தனையோ***
***பெண் மணிகள்!***
***என் அன்னையைப் போல்***
***ஒருத்தியாவது இருக்க***
***மாட்டாளா என***
***ஏக்கத்துடன் பார்க்கின்றேன்...***

(தாயகம் 25-12-1992)

இந்த ஏக்கம் பிரான்ஸின் மிகப்பெரும் இலக்கியவாதியான JEAN GENET இனது எழுத்துகளிலும் சித்தரிக்கப் பட்டுள்ளது. இவர் தனது LE JOURNAL DU VOLEUR (கள்வனின் டயறி) என்ற அற்புதமான நாவலில், தனது வாழ்வில் ஒரு போதுமே காணாத, தனது வீதித்தாயின் நிழல்கள் எங்காவது தென்படுகின்றதா எனத் தேடுகின்றார். துரத்தியடிக்கப பட்ட சமூகங்களிற்காகப் போராடியவர் JEAN GENET. எனவே தான் அவரது எழுத்து இயக்கத்துள் ஏக்கம் கொண்டுள்ள தாக்கம் இங்கு கட்டிக்காட்டப்படுகின்றது.

* * *

மொனிக்காவின் மொழி வாசிப்பவர்களை பயப்படுத்தும் ஒன்றோ அல்லது பரிசோதனை எத்தனங்களோ அல்ல. புகலிடப் பெண்களது இலக்கிய இயக்கத்துள் நிறைய எழுதி வருகின்றவர் ஜி.மொனிக்காவே. பிரான்ஸில் புகலிடப் பெண் கவிதைகள் "மறையாத மறுபாதி"க்கு இவர் ஏன் மறைந்து போனார் என்பது எனக்கு விளங்கவேயில்லை. இலகுவான மொழியில் இறுக்க விமர்சனங்களை கலந்து எழுதுகின்ற ஓர் ஆற்றல் மொனிக்காவிடம் உண்டு.

***"மாலை சுமந்து மேடையேறும்***
***தலைவருக்கு...***
***மூலையில் நிர்வாணமாய் நிற்கும்***
***சிறிசுகள தெரியாதுங்க...***
***வெட்டிப்பேச்சில் வெற்றிக்கொடி***
***நாட்டிப்புட்டு கைதட்டல்***
***வாங்கிருவாருங்க....***

(தாயகம் 13.08.1993)

இலங்கையில் வாழும் இந்தியத் தமிழர்களினது பேச்சுவழக்கு மொனிக்காவின் கவிதைகளில் மிகவும் நேர்த்தியாக வெளிக்கொணரப் படுகின்றது.

* * *

***"மகரந்தத்தை காவிச் செல்லும்***
***வண்டுகள் வேகமாய்***
***பறக்கின்றன***
***புதிய கண்ணகி யொருத்தியால்***
***இப்போது நாட்டை எரிக்க***
***முடியாது***
***எல்லாம் கொங்கிறீட்***
***கட்டிடங்களாய் இருக்கின்றன***
***எனச் சலித்துக்கொண்டாள்***

(தாயகம் 24.09.93)

நவயுகத்தில் கண்ணகி பிறந்தால் தனது "கற்பை" நிரூபிக்க எப்படித் துன்புறுவாள் என்கின்ற மொனிக்காவின் கற்பனை "கற்பை" வலியுறுத்துவது போன்ற ஓர் தொனியைக் கொண்டுள்ள போதும், இவர் ஆணாதிக்கத்தையே "கொங்கிறீட்கட்டிடங்களாக" உருவகப் படுத்தியுள்ளார். எனக் கொள்ளவும் ஓர் வாய்ப்புண்டு. மொனிக்கா தன்னை ஓர் பெண்ணிலைவாதி எனப் பிரகடனம் செய்து கொண்டவர் அல்ல. புகலிடத்துப் பெண்ணிலைவாத வெளியீடுகளில் இவரது தலையைக் காணவே முடியாது. ஆனால், ஜேர்மனியின் பெண்ணிலை வாத

## இருத்தலியல் விசாரணைகள்

எஸ் கௌந்தி

ஆர்ப்பாட்டத்தினது காத்திரமான வெளியீடாகவுள்ள 'பெண்கள் சந்திப்பு மலர்" (வெளியீடு 3,1993) சேர்த்துள்ள இவரது கவிதை சமாதானவாதிகளின் கரங்களுக்கு விலங்கு பூட்டப் பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

'சிறகொடிந்த பறவைகளையும்
சிதறுண்டு உடல்களையும்
ஓலமிடும் ஜீவன்களையும்
சிக்கித் தவிக்கும் கைதிகளையும்
விடுவிக்க முடியுமா என்ருல்?
'அகதி முகாமில் அழுகை
ஆரம்பமானதடி....
புகலிடத்தில் கொடி பிடித்து
கோஷம் போட்டவர்களிடம்
சத்தமிட்டுக் கூறினேனடி
அவர்களது சத்தத்தில் என்
தேசத்தை மறந்து போனேனடி."

தீர்வுத் திட்டங்களைச் சுருட்டிக் கமக்கட்டுக்குள் வைத்திருப்போர் இத்தகைய கவிதை வெளிப்பாடுகளைப் பார்த்து சாத்தானின் சூத்திரம் என்றே மொழிபெயர்ப்பர். தமிழில் எதையும் எழுதத் தெரியாதோரே புதுக்கவிதைகள் எழுதுகின்றனர் என ஒரு புத்திஜீவி எங்கோ எழுதியதாக நினைவு. படைப்பாளிகள் சிக்கலான வடிவங்களைத் தேர்வு செய்ய வேண்டும் என்ற விதி எங்கும் இல்லை. கல்வியை, கலாசாரத்தை இழந்து வந்து அந்நிய நாடுகளில் தஞ்சம் கேட்டுப்போயுள்ள எமது இளம் சமூகத்திடம் போய் தொல்காப்பியரைப் பற்றி ஓர் ஆய்வுக் கட்டுரை எழுதி வா எனக்கேட்கும் குருரமான புத்திஜீவிதப் போக்கு எனது இலக்கியதர்மம் சார்ந்ததல்ல என்ற கருத்தை மொனிக்கா மீது எழுதுகையில் தெரிவத்துக் கொள்கின்றேன்.

* * *

கவிதை தவிர்ந்து சிறுகதை, கட்டுரைகள் போன்ற எழுத்து முயற்சிகளில் செழுமையாகத் தன்னை இனங்காட்டும் ஜி. மொனிக்காவின் சமாதானத்திற்கான தேடல்களும், யாசிப்புகளும் புகலிடப் பெண்களது எழுத்து இயக்கத்திற்குப் புதிய பலம் சேர்க்கும் என நான் கருதுகின்றேன்.

# புலிகள் கைப்பற்றிய ரேடார்கள்

சமீபத்தில் பூனகரியில் நடந்த தாக்குதலின் போது புலிகள் முதலில் ரேடார் நிலையத்தை தாக்கி அழித்த பின்னரே தாக்குதலை மேற்கொண்டனர் என்று செய்திகள் வந்திருந்தன. இந்த ரேடார் மூலமாகத் தான் கிளாலிக்கடலில் செல்லும் படகுகளை கடற்படையினர் அவதானித்து தாக்குதல் நடத்தி வந்தனர். இந்த ரேடார் வழமையில் விமானப் போக்குவரத்தை அவதானிக்கவும் வீதிகளில் வேகமாகச் செல்லும் வாகனங்களில் வேகங்களை அளவிடவும் பயன்படுத்தப்படுகின்றன. மின்காந்த அலைகளை செலுத்தி அவை தெறித்து திரும்பி வரும் அலைகளை கிரகித்து அதன் மூலமாக விமானங்களின் நிலைகள், வேகங்கள் என்பன அறியப்படுகின்றன. வீதிகளில் பொலிசார் பயன்படுத்துவதும் இதே முறையைத் தான். எதிரி நாட்டு விமானங்கள் வான்வலயத்துக்குள் நுழைவதை கண்காணிக்கும் ரேடார்கள் வானில் இந்த அலைகளை செலுத்தியே பிரதேசத்தினுள் விமானம் நுழைந்ததை கண்டுபிடிக்கின்றன. ஆயினும் வேவு பார்க்கும் விமானங்கள் அதிஉயரத்தில் செல்லும் போது அவற்றை ரேடார்களால் கண்டுபிடிக்க முடியாது. இவ்வாறு ரஷ்யாவின் மேலாக அதி உயரத்தில் உளவு பார்த்துச் சென்ற அமெரிக்க பி 2 ரக விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. 19 வயதான ஜேர்மானிய இளைஞரான மத்தியாஸ் றஸ்ட் வயல்களின் மேலாக குறைந்த உயரத்தில் பறந்து சென்றே ரஷ்யாவினுள் நுழைந்து செஞ்சதுக்கத்தில் தனது சிறிய விமானத்தை இறக்கி பரபரப்பை ஏற்படுத்தியிருந்தார். எனவே சரியான உயரங்களில் பறப்பதன் மூலம் விமானங்கள் ரேடாரை ஏமாற்ற முடியும். இருப்பினும் கடற்போக்குவரத்தை கண்காணிக்கும் ரேடார்கள் மிகவும் குறைவான உயரத்திலேயே கண்காணிப்பு செய்கின்றன.

இதைப் போலத் தான் ஈராக்கிய ஏவுகணைகளை வரும் வழியில் தாக்கி அழித்த பேட்ரியட் ஏவுகணைகளும் ரேடார்களின் உதவியுடன் தான் ஏவுகணைகளின் பாதைகளை அறிந்து தாக்குதலில் ஈடுபட்டிருந்தன. இருப்பினும் ரேடார்களில் சில குறைபாடுகளும் உள்ளன. அனுப்பப்படும் ரேடார் அலைகளைக் கிரகிக்கக்கூடிய கருவிகள் வந்து விட்டன. இவற்றைத் தான் சில வாகனசாரதிகள் பயன்படுத்தி பொலிசார் அருகில் நிற்பதை உணர்கின்றனர். இந்தக் கருவிகள் கனடாவில் தடைசெய்யப்பட்ட போதிலும் அமெரிக்காவில் பயன்படுத்தப்பட முடியும். ஆயினும் இந்தக் கருவிகளை வெற்றி கொள்ளக் கூடிய கருவிகளை தற்போது பொலிசார் பயன்படுத்துகின்றனர். இதனால் ரேடார் அறியும் கருவிகளைக் கொண்டிருந்தாலும் அந்தச் சாரதிகளும் தடுத்து நிறுத்தப்படுகின்றனர்.

எதிரி விமானங்களும் தங்களை ரேடார்கள் கண்காணிக்கின்றன என்பதை உணரக்கூடியதாக இருக்கின்றது. இதை சமாளிக்க வல்லரசுகள் தங்கள் விமானங்களில் ரேடார் கதிர்களை தெறிக்காமல் உறுஞ்சக் கூடிய பிளாஸ்டிக் பூச்சொன்றைப் பூசுகின்றன. இதனால் இந்த விமானங்களின் நடமாட்டத்தை ரேடார் கருவிகளால் அறிய முடியாது.

அத்தோடு ரேடார் கருவிகள் பொருட்களுக்கு இடையிலான வித்தியாசத்தை கண்டுபிடிக்க முடியாதன. ஏதோ ஒரு பொருள் உலவுகின்றது என்று தான் கண்டுபிடிக்க முடியுமே தவிர அது எதுவென்று அறிய முடியாதன. உதாரணத்திற்கு ஒரு பறவைக்கூட்டம் நெருக்கமாகப் பறக்கும் பட்சத்தில் அதை ரேடார் கருவிகள் விமானம் என்றே தவருகக் கருதி விடக் கூடும். ரேடார் திரையில் வெறும் புள்ளி மட்டுமே தெரியும்.

இந்தச் சிக்கல்களால் பின்னர் infra red கதிர்களை பயன்படுத்தும் முறை தொடங்கியது. இது heat seeking முறையைப் பயன்படுத்துகிறது. இந்த கதிர்களைப் பொறுத்தவரை எந்தவொரு பொருளுக்கும் வெப்பம் உண்டு, அது பனிமலையாக இருந்தால் என்ன, பறவையாக இருந்தால் என்ன.. இந்த கதிர்களை அனுப்பும் போது அது அருகில் உள்ள இரு புள்ளிகளுக்கு இடையில் உள்ள வெப்பநிலை மாற்றத்தை உணர்கிறது. விமானம் பறக்கும் போது விமானத்தின் வெப்பநிலை, சூழ உள்ள வானத்தின் வெப்பநிலை என்பவற்றை உணர்ந்து கொள்கிறது. இதனால் திரையில் விமானம் ஒன்றின் உருவம் விழும்.


இந்த வெப்பம் உணரும் முறையினுல் தான் சில ஏவுகணைகள் இயங்குகின்றன. விமானம் ஒன்றைத் தாக்க வேண்டுமாயின், ஏவப்படுகின்ற ஏவுகணைகளின் முனையில் இருந்து அனுப்பப்படும் கதிர்கள் விமானத்தின் வெப்பநிலையை உணர்ந்து அதைத் தேடிச் செல்கிறது. எனவே விமானம் அசையும் பாதைகளில் அது தொடர்ந்து செல்கிறது. இதனால் இலக்குத் தவற மாட்டாது.

அத்துடன் இந்த கதிர்களில் உள்ள முக்கிய பயன் என்னவெனில் இவ்வாறு கண்காணிக்கப்படுவதை விமானத்தில் உள்ளவர் உணர முடியாது.

ரேடார்களை வைத்து புலிகள் என்ன செய்யப் போகிருர்கள் என்பது போகப் போகத் தான் தெரியும்.

**விஞ்ஞானப்பிரகாசன்**

# GOOD BYE BALDNESS



முடி உதிர்பவர்களுக்கு ஓர் நற்செய்தி

ஒரு சிறு குமிழ்
உங்கள் கேசத்தை வளரச்
செய்கிறது

பரிட்சித்துப்பாருங்கள்
**TRY FIRST**

பலர் இச்சிகிச்சை மூலம்
பயனடைந்துள்ளார்கள்

239 CARLTON STREET
TORONTO, ONTARIO
TEL: 922–0478

## Anita's Unisex

**239 Carlton St, West of Parliament**
**Tel:922 0478**

**Ladies' and Men's**
Specializing in Hair CutsPermanents, Tinting and BleachingHair Removal, Permanent Eyelashes Nails Facial Scalp Clinic
**Cure against Hair loss**
Foam, Spiral Perm, Custom Uniperm
Who specialize in hair cutting and long hair

**Perms $30 & up**
**Try One (1) Professional Skin Care Treatment For only $20.00***
*For New Clients Only *By Appointment only



An off centre and full neckline are the main features on this conservative, short precision scissor cut. May be blown on air dried



Prestige- a short cut featuring a perm Easy-to-look after Lamp or air dried

## SIA TRIANTOS

**Income Tax & Accounting Service**
**(416) 469-4906/ 922-0478**

**It's Tax Time!!**

We offer a professional, accurate and computerized service by competent tax planners. We help you lower your taxable income using tax plan strategies.
**We know how to best handle your changing income tax situation.**

We are government authorized **Electronic Filing (EFILE). EFILE** is a fast, accurate and paperless new system which enable us to transmit your tax return inexpensively directly to Revenue Canada. Your Return will be processed by Revenue Canada and You will receive your refund within 3-14 days.
**Income Tax By Phone** ™ Service is available again this year. Simply call and give us all your relevant tax information. Your computerized Income Tax return will be delivered to your door- with an extra copy for yourself.

Our prices are competetive... As low as $19.99
You will be satisfied with our service, price and professionalism.
Call to arrange an appointment at our office or in your home at your convenience.

**It is time to benefit from our personalized tax service. Don't forget. We also offer free pick up and delivery service.**

# பிரிவு+சந்திப்பு= அழுகை

## நிலா குகதாசன்

அந்த விமானநிலையம் இன்று வித்தியாசமாகத் தெரிந்தது... எத்தனையோமுறை நான் வந்துபோனாலும் கூட இன்றைய நாள் போல நான் EXCITEMENT ஆனதில்லை....

இந்தப் பரபரப்பையும், பரவசத்தையும் எப்போதாவதுதான் என் மனது அனுபவித்திருக்கிறது...

இன்று காலையிலிருந்தே என் இதயத்திலிருந்து ஏற்றுமதியாகும் இரத்தம் இருமடங்காக அதிகரித்திருந்தது...! எட்டு நீண்ட வருடங்களின் பின்னர் என்னைப் பெற்றவளையும், என்னோடு கூடிப் பிறந்தவர்களையும் காணப்போகிறேன்.

எப்போது காணப்போகிறோம் என்று கேட்ட கண்களுக்கு இப்போது... இன்னும் சிறிது நேரத்தில் என்று மனசு மலர்ச்சியோடு பதில் சொன்னது.

கறுப்பர், வெள்ளையர், சீனக்காரரென்று பல்லின மக்களும் அங்கே பரவலாகக் காணப்பட்டனர்.. எத்தனைபேர் தினமும் ஏறி இறங்கிக் கொண்டிருக்கிறார்கள்!.. நான் மட்டும் இறங்கியதுடன் சரி.. ஏறவேண்டி வராதா என மனசு ஏங்கியது.

சென்னையின் இனிப்புக் கடைகளில் மொய்க்கும் ஈக்களின் இரைச்சல் போல அந்த விமான நிலையத்தையும் இரைச்சல் சத்தம் மொத்தக் குத்தகைக்கு எடுத்திருந்தது..

என் குடும்பத்தினரை ஏற்றிவரும் விமானம் ரன்வேயில் பாதம் பதிக்க இன்னும் பத்து நிமிடங்கள் பாக்கியிருந்தன... இது வரையில் ஒளி வேகத்தில் ஓடிக்கொண்டிருந்த நேரம் இப்போது ஆமைவேகத்தில் அவசரமின்றி நகர்வதாகப்பட்டது....

என் குழந்தைக்கு இந்த இரைச்சல் சத்தம் எரிச்சலையூட்டியிருக்க வேண்டும் போலும்... அவ்வவ்போது குதலைமொழி பேசும் தன் குயில் குரலை கூக்குரலாக மாற்றினாள்... பக்கத்தில் நின்றிருந்த வெள்ளைகள் என்னைப் பார்வையால் எரித்தன..... கண்சிமிட்டும்கம்பியூட்டர் களையும், கட்டியணைத்து முத்தமிட்டு வழியனுப்பும் காதலர்களையும் காட்டி அவளைச் சமாதானப்படுத்தினேன்.... ARRIVAL என்ற தலைப்பின் கீழ் அணிவகுத்து நின்ற எழுத்துக்களில் ஒருவரி அவசரமாகக் கண்ணடித்தது....

ஆமாம்! "அந்த விமானம்" வந்தேவிட்டது.. என் இதயத்துடிப்பின் வேகம் SPEED LIMIT ஐத் தாண்டி இயங்கத் தொடங்கியது... அந்த விமானத்திலிருந்து வந்தவர்கள் தவணை முறையில் தலைகாட்டத்தொடங்கினார்கள்.

இங்கேயுள்ள என் ஏனைய உடன்பிறப்புக்களும் உறவினரும் வருபவர்களை வரவேற்கப் படிக்கட்டுகளில் பாய்ந்தோடிச் சென்றார்கள்... என் கண்களின் பாதைகளை மனம் படமாகப் பதிவு செய்து கொண்டிருந்தது...

அந்த அறுபதடிப் படிக்கட்டின் ஆரம்பத்தில் தெரிவது யார்? ஆமாம்! என் சின்னத்தங்கைதான்!..... ஊரில் நான் இருந்தவரை "உப்புமூட்டை" என்ற பெயரில் என் தோளில் ஏறி இறங்க அடம் பிடித்த என் தங்கை இன்று என் தோள்களுக்கு மேல் வளர்ந்திருந்தாள்...

என் கண்களில் கண்ணீர் அழையாமலே நுழைந்து விடுவதாக அடம் பிடித்தது... தொடர்ந்து ஏனைய தங்கைமார், தம்பி.. பயணக்களைப்பையும் மீறி ஊரின் பயங்கரங்கள் முகத்தைப் படம் பிடித்துக்காட்டின. நீரைக்காணாத கத்தரிப் பிஞ்சுகளாக, யூறியாவைக் காணாத நெற்பயிராக வாடிச் சோர்ந்திருந்தார்கள்.

வந்தவர்களை இங்கிருந்து சென்றவர்கள் வாரியணைத்து அழுது கொண்டிருந்தார்கள்..... என் அம்மாவைத் தேடி என் கண்கள் அலைந்து கொண்டிருந்தது.... தூரத்தே படிக்கட்டில் மெல்ல மெல்ல இறங்கி வரும் அந்த ஒல்லி உருவம் என் அம்மாவா?.. நம்ப முடியவில்லையென்று கண்கள் நடித்தாலும் இல்லை, அது என் அம்மாதான் என்று இதயம் துடித்தது...

அவரது தோற்றத்தில் மட்டுமல்ல. நடையிலும் மாற்றம் தெரிந்தது.. காலச்சக்கரத்தின் எச்சங்களாய் கண்கள் குழிவிழுந்து... என் தந்தை இறந்தபின் விதவைக்கோலத்திற்கு விளக்கம் சொல்வது போல் அவரது தலைமயிரும் வெளுத்திருந்தது.

என் கண்களில் உற்பத்தியான கங்கை பார்வையை மறைத்து நிறைத்திருந்தது.... தோளைக் கட்டிக்கொண்டிருந்த என் மகளை இறக்கிவிட்டு மனதில் பாசத்தை ஏற்றிக்கொண்டேன்...

என் தந்தையின் பிரிவை... அதன் சோகத்தை ....அந்த விமான நிலையத்தின் ஆரவாரத்தினிடையேயும் அழுது கரைத்தேன்.. இத்தனை பேரையும் பெற்றெடுத்து .....வளர்த்து....ஆளாக்க என் பெற்றோர் பட்ட துயரங்களை நினைத்தழுதேன்...

காலக்கண்ணாடி என்தாயில் பதித்த கோரவடுக்களை நினைத்தழுதேன்... நான் இழந்துபோன வசந்தங்களை என்னிடம் திருப்பித்தா இறைவா! என்று மனதுக்குள் நினைத்தழுதேன்....

"பிரிந்தவர் மீண்டும் சேர்ந்திடும்போது அழுதால் கொஞ்சம் நிம்மதி"... எத்தனை நிஜமானவரிகள்....! கவிஞரின் வரிகள் கற்பனையல்ல என்பதை மனசு நிரூபித்து கொண்டிருந்தது....

மங்கலாயிருந்த மனசு கண்ணீரால் கழுவப்பட்டு இப்போது மலர்வாயிருந்தது.. இந்த இனிமை தொடரவேண்டும் இறைவா.....!


# தமிழீழ தகவல் நடுவ
# தொலைபேசிச் செய்திச் சேவை
# 696 8885

தொடர்புகளுக்கு
P.O.Box 41558
1711, McGowan Road, Scarborough,
Ont, M1S 5G8

# மதம் வெறியானால் மனிதம் தொலைந்துவிடும்

அண்மையில் தாயகத்தில் மதம் மாற்றுவது சம்பந்தமான கட்டுரைகளை வாசித்தேன். அந்தக் கட்டுரைகளை வாசிக்கும் போது உண்மையிலேயே கட்டுரையாளர்களின் மன ஆதங்கத்தை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. மதங்கள் மனிதரை நல்வழிப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டனவேயன்றி ஒருவரை ஒருவர் இழிவு படுத்துவதற்காக அல்ல. உலகில் மனிதரை ஒழுக்கமாக வாழவைப்பதற்கு இரண்டு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஒன்று இறைவழிபாடு. இரண்டாவது அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட சட்ட ஒழுங்கு முறைகள் என்பனவாகும். பல ஆசிய நாடுகளில் இவ்வாறான சட்ட முறைகள் அவசியமற்றதாக இருப்பதன் காரணம் இந்நாடுகளில் வாழ்பவர்கள் பலர் தெய்வக் குற்றத்திற்கும், பழி பாவத்திற்கும் அஞ்சி ஒழுக்கமாக வாழ முயற்சி செய்பவர்களாக வாழ்கிறார்கள் என்பதே. இப்படியான வாழ்க்கை முறையில் வாழ்பவர்கள் மதத்தின் பெயரால் ஒருவரை ஒருவர் சொற்களால் காயப்படுத்துவது அவசியமா? கிறிஸ்தவ மதத்தை பரப்ப நினைப்பவர்கள் தங்கள் மதம் பற்றிய விஷயங்களை மாத்திரமே பேச வேண்டுமேயன்றி வேறு மதங்களனைத்தும் பொய்யானவையென்றும் அவைகளை பின்பற்ற வேண்டாம் என்றும் சொல்வது மிகத்தவறு. வேறு மதங்களைப்பற்றியும் அறிந்திருந்தால் நிச்சயமாக இப்படி பேசியிருக்கமாட்டார்கள் என்று எண்ணுகிறேன்.

"அன்பே சிவம்" என்கிறது இந்து மதம், "அகிம்சையே வாழும் வழி" என்கிறது பௌத்தம், "அயலானை நேசி" என்கிறது கிறிஸ்தவம் "மக்களிடம் கருணை காட்டாதவனுக்கு அல்லா பேரருள் புரிவதில்லை" என்கிறார் நபி. இவைகளெல்லாம் மனிதரிடையே ஒற்றுமையையும் ஒழுக்கத்தையும் வளர்ப்பதற்கு சொல்லப்பட்டவையே அன்றி மனித மனங்களில் வெறுப்பை வளர்ப்பதற்காக கூறியவையல்ல.

"உன்னைப் போல் அயலானையும் நேசி" என்ற பைபிளின் வாசகத்தை கிறிஸ்தவர்கள் எப்படி மறந்து போகலாம்? அந்த வாசகத்திலுள்ள புனிதமான கருத்தை உணராதவர்கள் எப்படி கிறிஸ்தவர்களாக வாழ முடியும்? இதே போல் "விக்கிரகங்களை வணங்காதே" என்று கிறிஸ்தவர்களுக்கு மாத்திரம் சொல்லப்பட்டதேயன்றி கிறிஸ்தவரல்லாதவர்களுக்கும் சொல்லப்பட்டதன்று, எப்பொழுதுமே மற்றவர்களை மதிக்கவேண்டும், நேசிக்கவேண்டும், மன்னிக்கவேண்டும் என்று போதிக்கும் ஒரு மதத்தைப் பின்பற்றுபவர்கள் எப்படி இன்னுமோர் மதத்தை இழிவுபடுத்த முற்படுகிறார்கள்? இத்தகைய மதமாற்றம் அவசியமா என தயவு செய்து சிந்தியுங்கள்.

நானும் கிறிஸ்தவ மதத்தை சார்ந்தவள் தான். என் மதத்தை நான் உண்மையிலேயே மதிக்கிறேன் நேசிக்கிறேன், கிறிஸ்தவ மதத்தை நான் விரும்பி ஏற்றேனே தவிர என்னை யாரும் வற்புறுத்தவில்லை. நான் நுவரெலியாவில் பிறந்து 7 வயது வரை அங்கு வளர்ந்தவள். அங்கு எங்களைச் சுற்றி பல மதத்தைச் சேர்ந்தவர்களும் வாழ்ந்தார்கள். இதன் காரணமாக என் பெற்றோர் கிறிஸ்தவ கோட்பாடுகளை என் மீது திணிக்கவில்லை. எந்த மதத்தை வேண்டுமானாலும் பின்பற்றலாம் என்ற உரிமையை குழந்தையிலிருந்தே பெற்றிருந்தேன். அதனால் பன்சலைக்கு செல்பவர்களுடன் சென்று புத்தம் சரணம் கச்சாமி என்ற பௌத்த ஸ்தோத்திரத்தை முழுமையாக சொல்லக்கற்றேன் இந்து கோயில்களுக்கு சென்று தேவாரங்கள் கற்றேன். ஞாயிறுதோறும் பெற்றோருடன் தேவாலயத்திற்கு சென்றேன். இஸ்லாமிய மதத்தை பற்றி மாத்திரம் அந்நாளில் அறிந்து கொள்ள முடியாமல் போய்விட்டது. இந்த ஆவல் 8 ஆண்டுகளுக்கு முன் மாலைதீவில் என் கணவரின் நிமித்தம் போயிருந்தபோது ஆங்கில மொழிப்பெயர்ப்பிலிருந்த "குர் ஆனை" வாசித்தபின் அடங்கியது.

வழிபாடுகளிலும் பங்குபற்றி அவற்றைப்பற்றி ஓரளவிற்கு தெரிந்து கொண்ட பின் எனக்கு கிறிஸ்தவ சமயத்தைப் பற்றி நிறைய தெரிவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. கிறிஸ்தவர்கள் தேவாலயத்தில் போதகம் செய்வதுடன் நின்றுவிடாமல் ஞாயிறு மாலைவேளைகளில் பைபிள் வகுப்புகள் வைத்து வேதத்தைப்பற்றி சொல்லிக் கொடுத்தார்கள். இதன் காரணமாக நான் 12 வயதாக இருக்கும் போது கிறிஸ்தவளாக வாழ விரும்பி 'ஞானஸ்நானம்' பெற்று கிறிஸ்தவளானேன்.

அன்றிலிருந்து இன்றுவரை கிறிஸ்தவ மதத்தின் எளிமையை நேசிக்கிறேன். அன்பின் மூலம் மனித சமுதாயம் உயர வழிசெய்யமுடியும் என வலியுறுத்தும் அந்த நம்பிக்கையை நேசிக்கிறேன். தவறு செய்வது மனித சுபாவம் என்பதால் தவறு செய்தவன் மனம் திருந்தினால் அவனை மன்னிக்கும் அதியுயர்ந்த பண்பை போதிக்கும் மதத்தை நேசிக்கிறேன் ஆனால் இன்று கூட நான் பௌத்த மத ஸ்தோத்திரத்தையோ அல்லது நான் கற்ற தேவாரங்களையோ மறக்கவில்லை. எந்த மதமாயிருந்தாலும் அவற்றை மதிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

இன்று இந்துக்களிடையே அவர்கள் மதத்தை தாழ்த்திப் பேசுவதன் மூலம் அவர்களை கிறிஸ்தவர்களாக்க முயலும் ஒரு சிலரது செயலைப் பார்த்து கிறிஸ்தவளாகிய நான் வேதனைப்படுகிறேன். தமது சொந்த விருப்பத்தின் பெயரில் ஒருவர் மதம் மாறுவது அவரது தனிப்பட்ட உரிமை. ஆனால் மூளைசலவை செய்து மதம் மாற்றுவது கண்டிக்கப்பட வேண்டிய விஷயம், நான் இந்தக்கட்டுரையை எழுதுவதனால் பல கிறிஸ்தவர்கள் என் மேல் கோபப்படலாம். ஆனால் நான் உண்மை என்று உணரும் எதையும் வெளிப்படையாகச் சொல்வதற்கு எனக்கும் உரிமை உண்டு என்று நினைக்கிறேன்.

இன்று தமிழினமே அழிந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் மதங்களின் பெயரால் ஒருவரை ஒருவர் தாக்கிப்பேசுவது வேதனைக்குரிய விஷயம் என்பது மட்டுமல்லாமது நாகரீகமற்ற செயலாகவும் இருப்பதால தான் நான் இந்தக்கட்டுரையை எழுத முற்பட்டேன். மதவெறி என்னும் நோய் மனிதரைப் பீடித்தால் மனிதத்தன்மையை வேரோடு அழிந்துவிடும் அபாயம் உண்டு.

**வசந்தா டானியல்**

# மக்களை நேசித்த தலைவர்

**19.11.93 அன்று பத்மநாபாவின் 42வது பிறந்த தினத்தை ஒட்டி சென்னையிலிருந்து மேதினி அனுப்பிய கட்டுரை இது**

**மேதினி**

இந்திய அரசினதும், தமிழ் நாட்டு மக்களினதும் ஆதரவும், ஒத்தாசையுமின்றி இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஒரு போதும் நிரந்தரத் தீர்வு காண முடியாதென்பதை நன்குணர்ந்து அவ்வழியில் இலங்கை-இந்திய அரசுகளுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சார்பில் பத்மநாபா அவர்கள் வரவேற்றார். ஒப்பந்தத்தின் நிறைவேற்றத்துக்காகவும், மாகாண அரசை ஏற்படுத்துவதற்காக அன்றைய கால கட்டத்தில் பல்வேறு நெருக்கடிகளை பயமுறுத்தல்கள் முதலானவற்றுக்கும் முகம் கொடுக்க வேண்டியேற்பட்டது. ஒரே சமயத்தில் மாகாண அரசுக்கான அதிகாரங்களை நிலை நிறுத்துவதில் இலங்கை அரசுடனும் அதே சமயம் அமைதியின்மையை ஏற்படுத்தி ஒப்பந்தத்தின் பலன்களை தமிழ்பேசும் மக்கள் அடைய முடியாதவாறு சீர்குலைக்க முற்பட்ட புலிகளை எதிர்த்தும் போராட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

தமிழரது பாரம்பரிய பிரதேசங்களான வடக்கையும், கிழக்கையும் இணைத்து மாகாண அரசை நிறுவுவதில் பத்மநாபா அவர்கள் வெற்றி கண்டார்.

திருகோணமலையில் மாகாண அரசின் தலைமைச் செயலகத்தை நிறுவுவதில் பத்மநாபா அவர்கள் வகித்த பங்கு மகத்தானது. கடந்த பல வருடங்களாக இம்மாகாணத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களின் வாயிலாக சிங்கள மக்களின் விகிதாசாரத்தை அதிகரிக்க அரசு முயன்று வந்துள்ளது. இதனைத் தடுத்து நிறுத்தும் நோக்குடனும் இப்பிரதேசத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டும் மாகாண அரசின் ஆட்சி நிர்வாகத்தை இங்கு நிறுவியது, பல்வேறு வகைகளிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

தமிழ் மாணவர் பேரவை தமிழ் இளைஞர் பேரவை போன்ற அமைப்புகளில் முக்கிய பங்கேற்று, அவற்றின் மூலமாக அரசியல் வாழ்வை ஆரம்பித்த பத்மநாபா தமிழ் பேசும் மக்கள் நீதியான நியாயமான கோரிக்கைகளுக்கான போராட்டத்தில் சிங்கள மக்கள் மத்தியிலும் மலையக மக்கள் மத்தியிலும் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டு அம்மக்கள் மத்தியில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் கொள்கைகளை அனுபவங்கள் அவரை ஓர் பண்பட்ட அரசியல் வாதியாக வளர்த்தது. சிங்கள மக்கள் மத்தியிலுள்ள முற்போக்குச் சக்திகளின் நம்பிக்கைக்குரிய நண்பனுகவும் முஸ்லீம் மக்களால் பெரிதும் நேசிக்கப்பட்ட தலைவராகவும் கடைசிவரை வாழ்ந்தார்.

இலங்கை அரசைக் கவிழ்க்கச் சதி செய்ததாக சோடிக்கப்பட்ட பிரசித்தி பெற்ற வழக்கில் பத்மநாபாவும் பல பிரபலமான சிங்கள அரசியல்வாதிகளும் எதிரிகளாக குற்றம் சாட்டப்பட்டனர். இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டதும் இவ் ஒப்பத்தத்தின் அடிப்படையில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுப்பு முகாம்களிலும், சிறைச் சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்ட பல நூறு தமிழ் இளைஞர்களையும், நீதிமன்றங்களில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்குட்பட்டிருந்த இளைஞர்களையும் பொது மன்னிப்பின் கீழ் இலங்கை அரசு விடுதலை செய்தது. ஆனால் பத்மநாபா அவர்களை மட்டும் இறுதிவரை இலங்கை அரசு விடுவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதே சமயம் இதற்காக பத்மநாபா அவர்களும் எக்காரணம் கொண்டும் இலங்கை அரசுடன் சமரசம் செய்ய முயன்றதில்லை. தமிழ் மக்களின் உரிமைகளுக்கான போராட்டத்தில் ஒவ்வொரு கட்டத்திலும் எதிரிகளையும், நண்பர்களையும் சரியாக மதிப்பீடு செய்து ஒரு போதும் எதிரியிடம் மண்டியிட்டு சமரசம் செய்து கொள்ளாத அரசியல்வாதியாக பத்மநாபா விளங்கினார்.

வடக்கு மாகாணமும், கிழக்கு மாகாணமும் இணைந்த மாகாண அரசின் எல்லைப்பரப்புக்குள்ளேயே சிங்கள முஸ்லீம் மக்களும் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் செறிந்து வாழ்ந்தார்கள். எண்ணிக்கையில் மிகக்குறைவாக இவர்கள் இருந்த போதிலும் அம் மக்களுக்கும் முழுமையான உரிமைகளை மாகாண அரசு வழங்கும் என்பதை பத்மநாபா அவர்கள் உறுதிப்படுத்தினர். மாகாண அரசின் மந்திரி சபையில் ஒரு சிங்களப் பிரமுகருக்கும், முஸ்லீம் தலைவருக்கும் இடமளித்ததின் மூலம் அம்மக்களை கௌரவித்ததுமல்லாமல். சிறுபான்மையின் மக்கள் பூரண உரிமைகளுடன் தமிழ் மக்களோடு இணைந்து அச்சமின்றிப் பாதுகாப்பாக வாழ முடியும் என்னும் நம்பிக்கையையும் ஏற்படுத்தினர். இந் நடவடிக்கையானது சிங்களம் பேரினவாத மனப்பான்மை கொண்ட அரசியல் வாதிகளையும், பாஸிஸ இனவெறி நடவடிக்கைகளில் ஈடுபடும் புலிகளையும் கூட வியக்க வைத்தது.

அப்பாவிச் சிங்கள மக்களையும், முஸ்லீம் மக்களையும் புலிகள் இயக்கம் குரோத மனப்பான்மையுடன் தமிழர் பகுதிகளில் இருந்து விரட்டியடித்தும், படு கொலை செய்தும் வரும் இந் நாட்களில், பத்மநாபாவின் அன்றைய நடவடிக்கையானது எல்லாராலும் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். இத்தகைய அவரது துணிச்சலான நேர்மையான நடவடிக்கைகள் தான் அவரது மேதாவிலாசத்தை வெளிப்படுத்தின.

ஈழ விடுதலைப் போராட்டக் களத்தில் தோன்றிய இயக்கங்களில் வர்க்க் கண்ணோட்டத்துடனும், ஒரு சோஸலிச சமூக அமைப்பைக் கட்டியெழுப்பும் இலட்சியத்துடனும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை ஸ்தாபிப்பதில் பத்மநாபா முக்கிய பங்காற்றினர். இயக்கத்தின் ஆரம்ப காலங்களில் ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட வறிய கூலி விவசாயிகள் மத்தியில் தொடர்புகளை ஏற்படுத்தி, அவர்கள் மத்தியில் ஸ்தாபன அமைப்பு வேலைகளில் ஈடுபட்டார். கிழக்கு மாகாணத்திலும் பத்மநாபா அபரிதமான செல்வாக்கும் பெற்றவராகவும் அம் மக்களினதும் இளைஞர்களினதும அபிமானத்துக்குரிய தலைவராக இன்றும் திகழ்கின்றார்.

பிரபுத்துவத்தின் மிச்ச சொச்சமான சாதி அமைப்பு முறைகளுக்கெதிராக வட பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஐக்கியப்பட்டு போராடிய சமயம் அவர்கள் மத்தியிலுள்ள கணிசமானவர்கள் அரசியல் ரீதியாகவும் வளர்ச்சி பெற்றிருந்தார்கள். இதனுல் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் கொள்கைகளை அம் மக்கள் விரைவாக ஏற்றுக் கொண்டனர். எனவே அம் மக்கள் மத்தியில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மிகவும் செல்வாக்குப் பெற்ற இயக்கமாக வளர்ந்தது. அம் மக்களின் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய தலைவராக பத்மநாபா விளங்கினர்.

சாதி மதம், இனம் என்ற பேதங்களுக்கு சற்றும் வளைந்து கொடுக்காமல், அல்லது சில அரசியல்வாதிகளைப் போன்று சந்தர்ப்பவாத நடை முறைகளை கைக்கொள்ளாமல் அம்மக்களோடு தன்னையும் பூரணமாக இணைத்துக் கொண்டு, அவர்களின் நலன்களுக்கும், மேம்பாட்டுக்காகவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மூலம் வெளிப்படுத்திய கொள்கைகளுக்கும் அவரது நடை முறைகளுக்கும் ஒரு போதும் இடை வெளி இருந்ததில்லை. வசதிகள் இல்லாத கஸ்டமான சூழ் நிலையிலும் சரி, வசதிகள் வந்த போதும் சரி எப்பொழுதும் தன்னை ஸ்தாபனத்தின் ஏனையவர்களில் ஒருவராக சாதாரண மனிதனுகவே வாழ்ந்தார். எந்த

**17ம் பக்கம் பார்க்க..**

# கரும்புலிகள்

தற்கொலை தாக்குதல்களில் ஈடுபடும் கரும்புலிப் படையினருக்கு நல்லூரில் உள்ள மிகவும் இரகசியமான முகாம் ஒன்றில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. லெபனானில் 1984இல் அமெரிக்க வீரர்கள் தங்கியிருந்த முகாமிற்கு தற்கொலைப் போராளி ஒருவன் சென்று தாக்குதல் நடத்தியதைப் பார்த்த பிரபாகரன் இவ்வாறான ஒரு அமைப்பை உருவாக்க திட்டமிட்டார். 1987 மே மாதம் இலங்கை இராணுவத்தின் தாக்குதல்களால் மேற்கொள்ளப்பட்ட அழுத்தம் காரணமாக பிரபாகரன் தற்கொலைப் படைத் தாக்குதல் ஒன்றை நடத்த திட்டமிட்டார்.

இளம் வயதில் அவர் கொல்வதற்கு முன்பெல்லாம் தெய்வங்களை வழிபடுவார். இதை பல புலித் தலைவர்கள் பின்பற்றினார்கள். யாழ்.பொலிஸ் நிலையத்தை தாக்குவதற்கு முன்னர் தாக்குதல் குழு நல்லூர் கோவிலில் வழிபட்டனர். ஒரு மனிதனின் மரணத்துடன் அவன் வாழ்வு முடிந்து விடுவதில்லை என்று பிரபாகரன் நம்பினார். இதனால் தான் சமீபத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் 'நாங்கள் தமிழீழத்தை அடையாவிட்டால் தியாகிகளின் ஆவி எங்களை சும்மா விடாது' என்றுகூறினார்.

கரும்புலி அமைப்பின் சக்தி உத்வேகம், பயிற்சி- ஒரு மனிதனின் அடையாளத்தை அழித்தல், கடுமையான பயிற்சி, தன் முக்கியத்துவத்தை உணரச் செய்தல், போராட்டத்திற்கான முக்கியத்தும் வாய்ந்த தாக்குதலுக்கு அனுப்புதல் என்பதில் அடங்கியுள்ளது.

1982 இல் சயனைட் வில்லையை பிரபாகரன் அறிமுகப்படுத்தியது அது உயர்ந்த சாதனை என்று காட்டவே. இதனால் தான் மில்லர் முதலாவது கரும்புலியானார். 1966 இல் பிறந்த வசந்தன் என்ற ஹாட்லிக் கல்லூரி மாணவன் 87 யூன் 5ம்திகதி நெல்லியடி மகாவித்தியாலயத்தில் இருந்த இராணுவத்தினரைத் தாக்க வெடிமருந்து கொண்ட வண்டியைச் செலுத்திச் சென்று நூறுக்கு மேற்பட்ட இராணுவத்தினரைக் கொன்றார். இறந்த பின்னர் இவர் கப்டன் தரத்துக்கு உயர்த்தப்பட்டார். முதலில் இவரது தாயார் கவலைப்பட்ட போதும் பின்னர் தனது மகன் தமிழீழத்தின் முதல் ஹீரோ என்றுபெருமைப்படுகிறார். நெதர்லாந்து ரேடியோ, பிபிசி போன்றவற்றுக்கு பேட்டியளிக்கும் போதும் புலிகள் எதைக் கேட்க விரும்பினார்களோ அதையே அந்த தாயார் சொன்னார். 'எனது மகன் தமிழீழத்திற்காக இறந்தான், அவனையிட்டு நான் பெருமைப்படுகிறேன்'.

பிரபாகரன் இதை வைத்து மற்றவர்களை ஊக்குவித்தார். முதல் தாக்குதலின் வெற்றியால் இவர் கரும்புலிகளுக்கான பயிற்சி முகாமை ஆரம்பித்தார். ஆரம்பத்தில் கிடைத்த ஆதரவு ஊக்கம் தந்தது. பின்னர் லொத்தர் போட்டே ஆட்களை தெரிவு செய்யும் அளவுக்கு நிலை வந்தது. பயிற்சி முடிந்தவர்கள் தலைமையைப் பாதுகாக்கவும் முக்கிய தாக்குதல்களுக்கும் அனுப்பப் படுகிறார்கள்.

யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு மூலையிலும் மில்லரின் படங்கள் சுவரொட்டிகளாகின. தாக்குதல்களில் இறந்தவர்களின் குடும்ப இளைஞர்கள் இலகுவாகச் சேர்ந்து கொண்டனர். இவர்களில் பலர் கைது செய்யப்பட்டு பொலிசாரால் கொல்லப்படுகிறார்கள். இவர்கள் கொல்லப்படுவது தலைமைக்கும் தெரியாது. கைது செய்யப்பட்டவர்கள் சட்ட உதவியுடன் தப்பித்துக் கொள்ளலாம், அல்லது சிறைக்குள்ளால் தப்ப முயலலாம் என்ற அச்சத்தில் பொலிசார் இவர்களைக் கொன்று விடுகின்றனர்.

இந்திய இராணுவம் வந்த பின்னரும் கரும்புலி நடவடிக்கைகள் தொடர்ந்தன. மோட்டார் சைக்கிள், வள்ளம், ட்ரக் என்பன செலுத்தும் பயிற்சி, கண் கட்டப்பட்ட நிலையில் சுடுதல், பல்வேறு ஆயுதங்களின் பயிற்சி என்பன இவர்களுக்கு வழங்கப்படுகின்றன. நல்லூர் முகாமிற்கு பொட்டு அம்மான், அவரது உதவியாளான கபில் அம்மான், பெண்களின் உளவுப்படைத் தலைவி அகிலா, சர்வதேச உளவுப் பிரிவின் சுசிலன், கொழும்பு உளவுப் பிரிவின் தலைவர் பொஸ்கோ, இராணுவ தளபதி பால்ராஜ், கடற்புலித் தலைவர் சூசை, இராணுவ ஆலோசகர் சங்கர் மட்டுமே செல்ல முடியும். பிரபாகரன் நேரடியாகச் சென்று அவர்களை ஊக்குவிக்கிறார்.

மாத்தயாவோ, யோகியோ, பாலசிங்கமோ இங்கு செல்ல முடியாது. மாத்தயா தற்போது வீட்டுக்காவலில் உள்ளார். யோகி சஞ்சிகை ஒன்றுக்கு ஆசிரியராக உள்ளார். பாலசிங்கத்தின் இடத்தை இப்போது தமிழ் செல்வம் பெற்றிருக்கிறார். இது பிரபாகரன் தனது பழைய தலைவர்களை நம்பாது புதிய ஒரு கூட்டத்தினரை நம்புகிறார் என்பதைக் காட்டுகிறது.

பின்னர் மாங்குளம் தாக்குதலின் போது நவம்பர் 11, 1990 இல் செம்மாமடுவைச் சேர்ந்த அரசரத்தினம் என்ற லெப்டினனட் கேணல் போர்க் தற்கொலைத்தாக்குதல் நடத்தினார். இவர் 1983 இல் இயக்கத்தில் சேர்ந்து முல்லைத்தீவு, வவுனியா பொறுப்பாளராக இருந்தவர். கொக்காவில் தாக்குதலிலும் இவர் பங்குபற்றினார். இவரது திறமையைக் கண்ட உள்ளூர் தளபதி இவரை யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப அங்கு அவர் தானாகவே கரும்புலியில் சேர்ந்து கொண்டார்.

முழங்காவிலைச் சேர்ந்த தயாபரன் என்ற மேஜர் தம்பு 91 மார்ச் 19 இல் சிலாவத்துறையில் தாக்குதலை மேற்கொண்டார். இவர் 86 இல் இயக்கத்தில் சேர்ந்து மன்னாரில் செயற்பட்டார். கடற்கரும்புலிகள் மேஜர் காந்தருபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத் 90 யூலை 11 இல் கடற்படைக் கப்பலை தாக்கினர். இதுதான் கடற்புலிகளின் முதல் தாக்குதல். வல்வெட்டித்துறையைச் சேர்ந்த காந்தருபன் 70ம் ஆண்டு பிறந்தவர். 69இல் பிறந்த கொலின்ஸ் மன்னாரைச் சேர்ந்தவர். 1970 இல் பிறந்த வினோத் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த

கப்டன் ஜெயந்தனும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சிதம்பரமும் 91 மே 4ம் திகதி பருத்தித்துறையில் கடற்படைக் கப்பலைத் தாக்கினர். சேதமும் கப்பலுக்கு குறைவாயினும் இவர்கள் இருவரும் இறந்தனர். தற்கொலைத் தாக்குதலில் பங்குபற்றுவோர் ஒரு நாள் முழுவதும் பிரபாகரனுடன் கழித்த பின்பே தாக்குதலுக்குச் செல்கின்றனர்.

மாதன், நிலவன் என்ற 15,17 வயதானோர் கடலேரியில் கடற்படைக் கப்பலைத் தாக்கி இறந்தனர். புகழரசன், மணியரசன் என்ற 16,14 வயதானோர் மீண்டும் கடற்படைக் கப்பலை கடலேரியில் தாக்கி இறந்தனர். இந்த தாக்குதலில் வலது குறைந்த ஒருவரும் இருந்தார். தற்போது கைது செய்யப்பட்டு காவலில் உள்ள பயிற்சியாளர் ஒருவரின் கருத்துப்படி உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் வலது குறைந்தவர்களை இலகுவாக தற்கொலை முயற்சிக்கு அனுப்பலாம் என்று கூறியுள்ளார்.

ராஜீவ், ரஞ்சன், கடற்படைத் தளபதி கிளன்சி பெருண்டோ, லலித் ஆகியோரின் கொலைக்கு கரும்புலிகளே காரணம். பிரபாகரனின் மெய்க்காப்பாளராக இருந்து சமீபத்தில் கைது செய்யப்பட்ட ஒருவரின் தகவல்படி 93 யூலை 5ம் திகதி நல்லூரில் நடந்த வைபவம் ஒன்றில் அகிலா, பொட்டு அம்மான், பிரபாகரன் ஆகியோர் இலங்கைத் தலைவர்களைக் கொன்ற நால்வரின் படங்களுக்கு மலர் மாலை அணிவித்திருக்கிருர்கள். அத்துடன் ராஜீவ் கொலை சம்பந்தமாக தேடப்பட்ட போது தற்கொலை செய்து கொண்டவர்களையும் கௌரவித்திருக்கிருர்கள்.

ராஜீவ், பிரேமதாசா, ரஞ்சன், லலித் ஆகியோரைக் கொன்றவர்களில் ஒருவர் அனாதையாவர். இவர் புலிகளால் நடத்தப்படும் அனாதை இல்லத்தில் வளர்க்கப்பட்டவர்.

கிளிநொச்சியில் உள்ள அனாதை இல்லத்தில் மாத்தயா ஈடுபாடு காட்டியதில் இருந்து புலிகள் இரண்டு அனாதை இல்லங்களை நடத்துகின்றனர். யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் இரண்டு அனாதை இல்லங்கள் உள்ளன. அதில் உள்ளவர்கள் பதினாலு வயதானதும் இயக்கத்தில் சேர்க்கப்படுகின்றனர்.

கடந்த யூலை 5ம் திகதி நெல்லியடியில் கரும்புலிகள் தினம் நடத்தப்பட்டது. இதில் மில்லர், காந்தருபன், சிதம்பரம், விநோத் ஆகியோரின் படங்களுக்கு அவர்களின் பெற்றோர் மலர் மாலை சூட்டினர்.

கரும்புலிகளின் கூட்டங்கள் மீசாலை, மானிப்பாய், கிளிநொச்சி, மடு, தொப்பிகல ஆகிய இடங்களில் நடைபெறுகின்றன.

சமீபத்தில் கைது செய்யப்பட்ட கரும்புலி ஒருவரின் தகவல்படி ஜனாதிபதி பயங்கரவாதப் பிரச்சனை பற்றி பேசுவதால் அவரைக் கொல்லும்படி தகவல் வந்ததாகவும் பின்னர் யாழ்தேவி தாக்குதலின் பின்னர் இராணுவத் தளபதியைக் கொல்லும்படி தகவல் வந்ததாகவும் கூறினர்.

பெய்ருட் முகாமில் உள்ள உளவுப் பிரிவின் பொறுப்பும் கைமாறிவிட்டது. முன்பு கிழக்கில் உளவுப் பிரிவிற்கு பொறுப்பாக இருந்த நியூட்டன் யாழ்ப்பாணத்தில் முக்கிய சோதனை முகாமில் செயற்பட அனுப்பப்பட்டதால், உத்தரா மாஸ்டர் பதவியேற்றார். பின்னர் அவரும் நூறு உளவுப் பிரிவாளர்களும் ஐநூறு போராளிகளும் யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டனர். இருமாதங்களுக்கு முன்னர் உத்தராவிற்கு யாழ்ப்பாணத்தில் இருந்து உத்தரவு வந்தது, இரண்டு முக்கியஸ்தர்களைக் கொல்லும்படி. இதில் ஒருவர் முனாஸ், மற்றவர் ஜனா என்ற டெலோ பாராளுமன்ற உறுப்பினர்.

(ஐலண்ட் பத்திரிகையில் ராவணா என்ற பெயரில் ஒருவர் எழுதிய கட்டுரையில் இருந்து சில பகுதிகளே இவை),

## மக்களை நேசித்த...

வித ஆடம்பரமும் படாடோபமும் இன்றி மிகவும் எளிமையான வாழ்வை மேற்கொண்டார்.

இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை முறியடிக்கவும் அதன் நிறைவேற்றத்துக்காக இலங்கை வந்த இந்திய அமைதிப் படையை வெளியேற்றவும் அதன் மூலம் மாகாண அரசைச் சிதைக்கவும் நயவஞ்சக நோக்குடன் புலிகள் இயக்கம் இலங்கை அரசுடன் சமரசம் செய்து கொண்டது. அத்துடன் இலங்கை அரசினால் வழங்கப்பட்ட ஆயுதங்கள், வெடி மருந்துகள், பணம் முதலானவற்றைப் பெற்றுக் கொண்ட புலிகள், அரசபடைகளோடு இணைந்தது. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கும், தமிழ் பேசும் மக்களுக்கும் எதிராக தாக்குதல் தொடுத்தார்கள்.

"தமிழர்களைக் கொண்டே தமிழர்களை அழிக்கும்" தந்திரத்தில் எப்பொழுதும் விழிப்பாக சிங்கள பேரினவாத அரசு இச் சந்தர்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டது. தமிழ் பேசும் மக்களின் நலன்களுக்கும் மேலாக அதிகார வெறியில் இருந்த புலிகள் அரசின் ஏவலர்களாக செயற்பட்டார்கள். அச்சமயத்தில் பத்மநாபா அவர்கள் புலிகளின் இச் செயல் 'தமது கண்களை தமது கரங்களால் குத்திக் கொள்வதற்கு ஒப்பாகும்' எனக் கூறினர். இன்றுவரை தமிழ் பேசும் மக்கள் அனுபவிக்கும் சொல்லொணாத் துன்ப, துயரங்கள் அவரது அன்றைய கூற்று எத்தகைய தீர்க்க தரிசனம் வாய்ந்தது. என்பதை அனைத்துத் தரப்பினரும் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

வடக்கு, கிழக்கில் வாழும் மக்கள் உண்ணப் போதிய உணவின்றி பசிக்கும் பட்டினிக்குமுள்ளாகி வாழ்வுக்கும், சாவுக்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருக்கின்றனர். போஷாக்கான உணவு இல்லாமையாலும், போதிய மருத்துவ வசதிகள் இல்லாமையாலும் முதியோர், குழந்தைகள் கர்ப்பிணிகள் எனப் பலதரப்பினரும் மீள முடியாத நோய்களுக்குள்ளாகி அல்லல்படுகின்றனர். இந்நிலையை பல சர்வதேச சமூக சேவை ஸ்தாபனங்களும் புள்ளிவிபரங்களோடு அம்பலப்படுத்துகின்றன.

சோமாலியா நாட்டில் நிலவுவது போன்ற ஒரு சூழ்நிலையை நோக்கி தமிழர் பிரதேசங்கள் வெகு வேகமாகச் சென்று கொண்டிருக்கின்றது.

தலைவர் பத்மநாபா முழு பக்கங்களையும் நேசித்த ஒரு மாபெரும் தலைவர். மக்கள் நேசித்த ஒரு மாபெரும் தலைவர். மக்கள் இல்லாத மண்ணை நாம் ஒரு போதும் நேசிக்கவில்லை என்பதை பல்வேறு சந்தர்ப்பங்களிலும் மக்கள் முன் எடுத்துக் கூறினர். அதே வேளை தனது இயக்கத் தோழர்கள் மத்தியில் "நாம் மக்களுக்காகப் போராடுவது என்பது எம் மீது சுமத்தப்பட்டுள்ள கடமையே தவிர எமக்கு வழங்கப்பட்ட அதிகாரமல்ல" என்பதை எப்பொழுதும் வலியுறுத்தி வந்தார்.

அவர் ஒரு குறுகிய வட்டத்துள் நிற்காமல் இன, மத, சாதி பேதங்களுக்கு அப்பால் நின்று முழு மக்களையும் நேசித்த ஒரு மனிதர் அவரது அமைதியான தோற்றமும், எளிமையான பேச்சும், தூய்மையான பொதுவாழ்வும் தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுடன் எப்பொழுதும் இரண்டாகக் கலந்து நிற்கும்.

# நைஜீரியாவில் இராணுவ எதிர்ப்பு அலைகள்!

உலக வரைபடத்தில் கொதிக்கும் மையங்களில் இப்போது நைஜீரியாவும் ஒன்று. மீண்டும் ஒரு முறை நைஜீரிய வரலாற்றில் இராணுவம் தனது பலத்தை வெளிப்படுத்த முயன்றதால் நைஜீரியா மீண்டும் ஒரு மோசமான அரசியல், பொருளாதார பிரச்சனைகளை மாத்திரமல்ல அங்கு வாழும் முக்கிய இரு இனங்களுக்கிடையிலான இனமோதல்களையும் எதிர்கொள்ளவேண்டிய சூழ்நிலை எழுந்துள்ளது.

நைஜீரிய அரசியலில் ஆளுமை செலுத்தும் ஹோசாஸ் இனம் நாட்டின் வடபகுதியிலே பெரும்பான்மையாக வாழ்கின்றது. அதேசமயம் போர்க்குணம் கொண்ட யோர்பாஸ் இனம் தென்மேற்குப் பகுதியில் பெரும்பான்மையாகவாழ்கிறது. 1967ம் ஆண்டில் நைஜீரியாவின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்த பயஃபரா இனம் பிரிந்து போகமுற்பட்டபோது மிக மோசமாக இராணுவக்கால்களால் மிதிக்கப்பட்டது. மூன்று வருட உள்ளநாட்டு யுத்தத்தில் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர்.

தற்போது எழுந்துள்ள சூழ்நிலை 1967ம் ஆண்டைவிட ஒரு மோசமான நிலைக்கு நைஜீரியாவைக் கொண்டு போகலாம் என முன்னணி நைஜீரியப் பிரஜைகளும், ராஜதந்திரிகளும், வெளிநாட்டு ஆய்வாளர்களும் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

தற்போதைய பிரச்சனைகள் ஏற்படுவதற்கான காரணம் நைஜீரியாவின் இராணுவ ஆட்சியாளர்களே. ஆறு வருடங்களின் பின்னர் மக்களால் தெரிவு செய்யப்படும் அரசிடம் பதவியை ஒப்படைப்போம் எனக்கூறி பதவிக்கு வந்த இராணுவ அரசு கடந்த யூன் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை ஏற்க மறுத்தது மாத்திரமல்ல வெளியிடவும் மறுத்தது. மக்களின் எதிர்ப்பினாலும், வீதி ஆர்ப்பாட்டங்களினாலும் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் இப்ராகிம் பபாங்கிடா ஆட்சிமாற்றம் என்ற பெயரில் ஏர்னஸ்ற் ஹொனேகன் என்ற தொழிலதிபரின் தலைமையில் அமைத்தார்.

அதற்குப் பின்னர் கடந்த வாரம் இன்னுமொரு ஆட்சிமாற்றம் நைஜீரியாவில் ஏற்பட்டுள்ளது. இதனை ஒரு ஆட்சிக் கவிழ்ப்பு என எதிர்ப்பாளர்கள் வர்ணிக்கிறார்கள். கடந்த புதன்கிழமை (17-11-93) நைஜீரிய இராணுவத்தில் அதிக ஆளுமைகொண்டவரான ஜெனரல் சனி அபாச்சா தன்னை நைஜீரிய அரச தலைவராக அறிவித்துக் கொண்டார். 1960ம் ஆண்டு நைஜீரியா பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்ற பின்னர் ஆட்சிக்கு வரும் ஏழாவது இராணுவத் தலைவர் இவர். அதுமட்டுமல்ல பதவியேற்றவுடன் நைஜீரியாவில் இயங்கிவந்த அனைத்து ஜனநாயக அமைப்புக்களையும் கலைப்பதாக அறிவித்தார். தேசிய சபை, மாநில சட்டசபைகள், இரு அரசியல் கட்சிகள் ஆகியன கலைக்கப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்பட்ட மாநில ஆளுநர்கள் கூட பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். அரசியல் கூட்டங்களும் மக்கள் ஒன்றுகூடுதலும் தடைசெய்யப்பட்டுள்ளது.

புதன்கிழமை பதவியேற்ற பின் வியாழக்கிழமை ஜெனரல் அபாசா நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் 'நாட்டில் ஒழுங்கீனத்தை தான் பொறுத்துக் கொள்ள மாட்டேன்' எனவும் 'தனது பலத்தை பரிசோதிக்க முயலும் எந்த முயற்சிக்கும் தாம் அதே வழியிலேயே பதில் சொல்வேன்" எனவும் எச்சரித்துள்ளார்.

ஆனால் நாட்டின் எதிர்காலம் குறித்தோ அல்லது தனது எதிர்கால நடவடிக்கைகள் குறித்தோ அவர் எதுவும் கூறவில்லை. எதிர்காலத்தில் நைஜீரியாவின் அரசியல் சாசனத்தை திருத்துவதற்காக கூட்டம் ஒன்றை ஒழுங்குபடுத்தப் போவதாக கூறியிருக்கும் ஜெனரல் அபாசா, மக்களால் தெரிவு செய்யப்படும் அரசிடம் தாம் எப்போ ஆட்சி அதிகாரத்தை கையளிப்பேன் என்பது பற்றி எதுவுமே கூறவில்லை.

50 வயதுடைய ஜெனரல் அபாசா நைஜீரியாவில் மிகவும் பிரபலமானவர். பாதுகாப்பமைச்சர், இராணுவத் தலைவர் போன்ற பதவிகளை வகித்த அவர் அரசியலில் பெரும் பங்கு வகிக்கும் நைஜீரிய இராணுவத்தில் முக்கியமானவர். 1983ம் ஆண்டு நைஜீரியாவின் இறுதியான மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தை பதவியிலிருந்து கவிழ்ப்பதில் முக்கிய பங்கு வகித்தவர், அதுமட்டுமல்ல அதன்பின் 1985இல் நடந்த ஆட்சிக் கவிழ்ப்பிலும் பின்னர் ஜெனரல் பபங்கிடாவை பதவிக்கு கொண்டு வந்ததிலும் இவரது பங்கு முக்கியமானது.

கடந்த ஆகஸ்ட் மாதம் ஜெனரல் பபங்கிடா அதிகாரத்திலிருந்து விலகி நின்று ஓர்னெஸ்ற் சொனெக்காவின் தலைமையில் ஒரு தற்காலிக அரசிடம் ஆட்சியை ஒப்படைத்த போதும் திரைமறைவில் உண்மையான அதிகாரம் ஜெனரல் அபாசாவிடமே இருந்தது எனக் கூறப்படுகிறது. சில ராஜதந்திரிகளின் கருத்துப்படி ஜெனரல் பபாங்கிடாவிற்கும் ஜெனரல் அபாசாவிற்குமிடையில் முரண்பாடுகள் எழுந்துள்ளதெனவும் சொனேக்கா வின் குறுகிய ஆட்சிக்காலத்தில் ஜெனரல் அபாசா, ஜெனரல் பபாங்கிடாவினால் முக்கிய பதவிகளில் நியமிக்கப்பட்ட இராணுவத் தளபதிகளை அப்பதவிகளிலிருந்து விலக்கினார் எனவும் கூறப்படுகிறது. ஆனால் இன்னும் சிலரோ இது ஒரு மிகைப்படுத்தப்பட்ட தகவல் எனவும் ஜெனரல் பபாங்கிடாவின் அரசியல் நாடகமே இது என இந்த ஆட்சிமாற்றத்தை குறிப்பிடுகிறார்கள். ஒரு அரசியல் நிபுணரின் கருத்தின்படி பபாங்கிடாவின் நீண்டகால

## சுழலும் உலகம்



**தி. உமாகாந்தன்**

திட்டத்தின்படி அபாசாவினால் நடத்தப்படும் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக பபாங்கா அறிவிக்கப்படலாம் எனப்படுகிறது. ஆனால் இன்னும் சிலரோ பபாங்கிடாவின் அதிகாரமும் அரசியல் எதிர்காலமும் முடித்துவிட்டது எனவே கருதுகிறார்கள்.

ஜெனரல் பபாங்கிடாவும், ஜெனரல் அபாசாவும் முஸ்லீம்கள். ஹோசா மொழி பேசும் வட பகுதியை சேர்ந்தவர்கள். இப்பகுதியைச் சேர்ந்தவர்களே இராணுவத்தில் முக்கிய பதவிகளை வகிக்கிறார்கள். அதுமட்டுமல்ல 90 மில்லியன் மக்கள் தொகை கொண்ட நைஜீரிய அரசியலில் ஆளுமை செலுத்துவது இப்பகுதியே. இதற்கு எதிராக நடந்த கடந்த யூன் மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றவராகக் கருதப்படும் மொசூட் அபியோலா முஸ்லிமாக இருந்தபோதும் தென் பகுதியைச் சேர்ந்த யோர்பா இனத்தவர். அதேசமயம் இடைக்கால அரசின் தலைவராக இருந்த சொனேக்கனும் யோர்பா இனத்தவரே.

அரசியலிலும் பொருளாதாரத்திலும் தாம் புறக்கணிக்கப்படுவதாக யோர்பா இனத்தவர்கள் எண்ணுகிறார்கள். வடக்கு எப்போதுமே தெற்கை நசுக்குவதாக மக்களிடையே எண்ணம் நிலவுகிறது. அதேசமயம் இந்நாட்டில் மூன்றாவது பெரும்பான்மையாக இன்னுமொரு இனமும் உள்ளது. நாட்டின் கிழக்குப் பகுதியிலே வாழும் இபோஸ் இனமே அது. நைஜீரியாவின் 95% ஏற்றுமதிவருமானத்தை தரும் எண்ணெய் இப்பகுதியிலே உற்பத்தியாகிறது. ஆனால் உள்நாட்டு யுத்தத்தில் ஏற்பட்ட இழப்பின் பின்னர் நாட்டின் தேசிய நடவடிக்கைகளிலோ, அரசியலிலோ இந்த இனத்தினால் ஆளுமை செலுத்த முடியவில்லை.

யூன் மாத தேர்தல் முடிவுகளை அரசு இரத்துச் செய்ததன் பின்னர் நடந்த வேலைநிறுத்தங்களும் ஆர்ப்பாட்டங்களும் பெருமளவில் தென்மேற்குப் பகுதியிலேயே நடைபெற்றன. சமீபத்தில் நைஜீரிய உயர் நீதிமன்றம் ஜெனரல் பபாங்கிடாவிற்கு ஒரு இடைக்கால அரசை நிறுவும் எந்த அதிகாரமும் இல்லை என தீர்ப்பு வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சியாக நைஜீரியாவில் அன்றாட வாழ்வு சீர்குலைந்துள்ளது. வங்கிகள், முக்கிய கடைகள், தொழிற்சாலைகள் மூடப்பட்டே உள்ளன. தென்மேற்கு நகரங்களான அபியோருத்த, அக்குயரே, இலோரின் போன்றவற்றில் ஆர்ப்பாட்டக்காரருக்கும் பொலிசாருக்கும் கடும் மோதல்கள் ஏற்பட்டுள்ளன. எரிபொருளின் விலையை பலமடங்காக இடைக்கால அரசு அதிகரித்தும் மக்களின் சீற்றத்தை தூண்டியுள்ளது.

எண்ணெய் ஏற்றுமதியைத் தவிர்ந்த இதர துறைகளில் நைஜீரியப் பொருளாதாரம் மிகுந்த நெருக்கடிக்குள் உள்ளது. ஜெனரல் அபாச்சாவின் அரசுக்கு எந்தவிதமான பொருளாதார சீர்திருத்த திட்டங்களையும் அமுல் நடத்தும் உத்தேசம் கிடையாது என பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். நைஜீரியாவின் தற்போதைய வெளிநாட்டுக்கடன் 30 மில்லியன் டொலர்கள், இதற்கான வட்டித்தொகையான 5 பில்லியன் டொலர்கள் இன்னும் கொடுக்கப்படாமல் உள்ளது.

இவைமட்டுமல்ல அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் ஜெனரல் அபாசா அதிகாரத்தை கைப்பற்றியதைக் கண்டித்துள்ளன. அதுமட்டுமல்ல நைஜீரியாவுக்கெதிராக பொருளாதாரத் தடையை அறிவிக்குமாறு சர்வதேச சமூகத்திடம் கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது. நைஜீரியாவின் மனித உரிமை அமைப்புக்களும், ஜனநாயகம் காக்கும் அமைப்புக்களும் கூட அபாசா பதவிக்கு வந்ததை கண்டிக்கின்றன. "சுதந்திரமான நைஜீரிய மக்களை தமது சொந்த தேசத்திலேயே அடிமைகளாக்க முனையும் அதிகார வெறி கொண்ட இராணுவத்தை நிராகரிப்போம்" என இவ்வமைப்புக்கள் மக்களை கோரியுள்ளன நைஜீரியாவின் எதிர்வரும் நாட்கள் கடுமையானவை.

## மாத்தயா..

மாத்தயா ஓரம் கட்டப்பட்டார். வேண்டத்தகாதவர்களை ஒதுக்குகின்ற வழமையான புலிகளின் பாணி இதிலும் கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது. முதலில் ஒதுக்குவது, ஊகங்களுக்கு இடம் கொடுப்பது, பின்னர் வதந்திகளைக் கிளப்பி விடுவது, பின்னர் நீண்ட காலத்திற்கு இழுத்தடிப்பது, இப்படி படிப்படியாக மறக்கப்படும் சூழ்நிலை உருவான பின்னர் உண்மையை வெளிவிடுவது.. இது தாக்கத்தை ஏற்படுத்தாது.

இது மாத்தயா விடயத்திலும் வெற்றி அளித்திருக்கிறது. புலிகளில் இதற்கான எதிர்ப்பு உணர்வு பிறக்கவில்லை. மாத்தயாவின் 'தியாகங்கள்' எல்லாம் கணப்பொழுதிலேயே மறக்கப்பட்டு இன்று அவர் துரோகியாக்கப்பட்டிருக்கிறார்.

மாத்தயா இந்த நிலைக்கு வந்ததால் அவர் மீது இரக்கம் ஏற்பட்டாலும் அவர் நடந்து கொண்ட முறைகள் சாதாரணமானவை அல்ல. துரோகிகள் என்று கூறி பகிரங்கமாக சுட்டுக்கொன்று தலைகளை வெட்டி பெண் ஒருவர் மூலமாக தாண்டிக்குள இராணுவத்திடம் அனுப்பிய சங்கதிகள் எல்லாம் மாத்தயாவின் கைங்கர்யம் தான். துணுக்காய் முகாம்களின் சித்திரவதைகளில் மாத்தயாவிற்கு பெரும் பங்கிருக்கிறது. இலங்கை இராணுவத்தினரால் புலேந்திரன், குமரப்பா போன்றோர் பிடிக்கப்பட்ட போது அவர்களுக்கு சயனைட் கொடுத்து அவர்கள் தற்கொலை செய்யக் காரணமாயிருந்தவர் மாத்தயா.

ஒரு காலத்தில் ஓகோ என்று உச்சத்திலிருந்த மாத்தயா இன்று சித்திரவதைக்குள்ளாகின்றார், தாக்கப்பட்டார், சிறையில் உள்ளார் என்று செய்தி வரும் போது சில விடயங்கள் விளங்குகின்றன. அதிகாரத்திலிருப்போர் என்றைக்குமே அதிகாரத்துடன் அப்பாவிகளின் வாழ்வில் விளையாடும் போது அது நிரந்தரமானதல்ல. அவர்களும் அந்தக் கதிக்கே ஆளாகின்றார்கள். அது மாத்தயாவிற்கு மட்டும் அல்ல, தலைமைக்கும் பொருந்தக் கூடும்.

ஆனால் புலிகளின் ஆதரவாளர்கள் ஒன்றை மட்டும் விளங்கிக் கொள்ள வேண்டும். மாத்தயாவைப் பற்றி கதைப்பதற்கே பலர் பயப்படுகிறார்கள். மாத்தயாவிற்கே இந்தக் கதி என்றால், சாதாரண தமிழ் மக்களின் நிலை என்ன? என்பதை மட்டும் விளங்கிக் கொண்டால் தொடர்ந்தும் புலிகளை அவர்கள் ஆதரிக்க மாட்டார்கள்.

# மாத்தயா எங்கே?

## தமிழ் நேசன்

தற்போது புலி ஆதரவாளர்கள் கூட பகிரங்கமாக கேட்க மறுத்தாலும் நெஞ்சுக்குள்ளே குடைந்து கொண்டிருக்கும் கேள்வி ஒன்றுண்டு. மாத்தயா எங்கே என்ற கேள்விதான் அது. ஒரு காலத்தில் பிரபாகரனை மாத்தயா கொன்று விட்டார் என்று வதந்தி பரவிய நிலை இருந்தது. இப்போது மாத்தயாவின் நிலை கேள்விக்குறியாக உள்ளது. மாத்தயா மாவீரராகி விட்டிருந்தால் கிட்டு போன்ற மரியாதை இருந்திருக்கலாம். ஆனால் மாத்தயா இன்று துரோகியாக அல்லவா காட்டப்படுகிறார்.

ஒரு காலத்தில் இயக்கத்தில் இருந்து வெளியேறிய ஒருவருக்கு மாத்தயா 'சுடும், புலி சுடும்' என்று சொல்லி அனுப்பியிருந்தாராம். அதே மாத்தயாவை இன்று 'சுடும், புலி சுடும்' என்ற நிலை தான் இருக்கிறது. உலகத்தமிழர் கூட ஒரு காலத்தில் மாத்தயா மட்டுமே தலைவர் என்ற ரீதியில் நடந்து கொண்டார்கள். இப்போது உலகத்தமிழர் சஞ்சிகையில் மாத்தயா பற்றி எதுவுமே இல்லை. இவர்களைப் பொறுத்தவரை அங்கு யார் அதிகாரத்தில் உள்ளார்களோ அவர்களை ஆதரிக்கப் பழகிக் கொண்டவர்கள்.

வன்னிப் பகுதியில் தளபதியாக இருந்த காலத்தில் மாத்தயாவிற்கு யாழ். பகுதியில் கிட்டு செல்வாக்காக இருந்த விடயம் கிட்டத்தட்ட எரிச்சலையே தந்திருந்தது. தான் காட்டுப் பகுதியில் கஷ்டப்படும் போது கிட்டு யாழ்ப்பாணத்தில் சுகமாக வாழ்வது போன்ற பிரமை மாத்தயாவிற்கு இருந்தது. கிட்டுவிற்கு கால் போனதில் புலிகளின் மேலிடத்திற்கு தொடர்புகள் இருந்ததான வதந்திகளில் உண்மையும் இருக்கலாம். பின்னர் மாத்தயா யாழ்ப்பாணம் வந்ததிலிருந்து மாத்தயாவிற்கு வெள்ளி திசை.. எங்கு பார்த்தாலும் மாத்தயா.. பிரேமதாசாவுடன் பேசினாலும் அவர்தான். இந்திய இராணுவம் வெளியேறிய இடங்களை கைக்குள் கொண்டு வந்த போதும் முன்னணியில் இருந்தது அவர் தான். இந்த நிலையில் மாத்தயா பிரபாகரனைக் கொன்று விட்டார் என்ற வதந்தி பரவியது. அந்தளவுக்கு மாத்தயாவே வெளியாக தெரிந்தார்.

புலிகளின் பிரதித்தலைவர் என்ற பெயர் மாத்தயாவிற்கு புலிகளால் வழங்கப்பட்டது. உலகத்தமிழர் உட்பட புலிகளின் வெளியீடுகளில் மாத்தயா பிரதித்தலைவர் என்றே குறிப்பிடப்பட்டார். இன்று மாத்தயாவின் நிலை? யாருக்குமே தெரியாது.

இந்திய இராணுவத்தின் நெருக்கடி காரணமாக பிரேமதாசாவுடன் உறவாட வேண்டிய நிலையில் மாத்தயா பிரபாகரனால் பயன்படுத்தப்பட்டார். தான் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தினால் அதனால் வரக் கூடிய சிக்கல்களை உணர்ந்த தலைவர் கட்சியை உருவாக்கி மாத்தயாவை அதற்கு தலைவராக்கினார். பிரேமதாசாவுடனான பேச்சுவார்த்தையில் மாத்தயா கலந்து கொண்டார். இறுதியில் பேச்சுவார்த்தை முறிந்து கொண்டது.

பின்னர் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் குண்டுவெடிப்பு நடந்ததாக செய்தி வந்தது. இது மாத்தயா பொட்டம்மான் அணிக்கு இடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக என்று சொல்லப்பட்டது. பின்னர் கோப்பாயில் பொட்டம்மான் சென்ற ஜீப்பிற்கு குண்டு வீசப்பட்டது.

பொட்டம்மானின் தலைவர் மீதான விசுவாசம் காரணமாக மாத்தயா படிப்படியாக ஒதுக்கப்பட்டார். இறுதியாக மாத்தயா பொதுவாழ்விலிருந்து மறைந்து போனார். பாலசிங்கமும் இயக்கத்தில் பிரதித்தலைவர் என்ற பதவி இருந்ததேயில்லை என்று முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைத்தார். அத்தோடு கிட்டு வருவதை இந்தியாவிற்கு காட்டிக் கொடுத்ததால் மரணதண்டனை விதிக்கப்பட்டது என்று இந்திய 'திகில்' சஞ்சிகை ஒன்று தெரிவித்திருந்தது. மாத்தயா ஒதுக்கப்பட்டு புனர்வாழ்வு அலுவல்களைக் கவனிக்கிறார் என்று இன்னொரு தகவல். ஆனையிறவு யுத்தத்திலும் மாத்தயா காணப்படவில்லை.

ஆனால் உச்சத்தில் இருந்த மாத்தயாவுக்கு ஏன் இந்த நிலை என்று யாரும் கேள்வி எழுப்பவில்லை. இதற்கு அடிப்படை உண்டு. தலைவருக்கு எப்போதுமே தனது தலைமைப்பதவிக்கு வேட்டு வைக்கக் கூடிய போட்டியாளர்கள் எவரையும் விட்டு வைக்கும் இயல்பு இருந்ததில்லை. கிட்டுவின் நிலை உச்சமடைந்த நிலையில் தான் இந்தியாவில் அஞ்ஞாதவாசத்தை முடித்துக் கொண்டு தலைவர் வந்து சேர்ந்தார். கிட்டு ஒதுக்கப்பட்டார். இதே நிலை மாத்தயாவிற்கும் வந்திருக்கக் கூடும். தனக்கு ஆபத்தான யாரையும் அருகில் வைக்காத காரணத்தால் இன்று முன்பின் தெரியாத பலர் தளபதிகளாக இருக்கின்றனர். பால்ராஜ், தமிழ் செல்வம் என்று பல புதிய தலைமுறையினர் இன்று இருக்கின்றனர். இயக்கத்திற்கு புதிய இரத்தம் சேர்த்து உத்வேகம் சேர்ப்பதற்காக அல்ல, மாறாக தலைமைப்பதவிக்கு வரும் எண்ணம் இவர்களுக்கு இருக்காது என்ற எண்ணத்திலேயே இவர்கள் இப்பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களில் பலரை புலிகளின் ஆதரவாளர்களுக்கே தெரியாது. அவர்களின் படங்கள் வெளியில் வந்ததும் கிடையாது. இன்றைய இயக்கத்தில் தலைவருக்கு அடுத்ததாக இருக்கும் யாருக்கும் பெரிதாக விளம்பரங்கள் கிடையாது. பேபி சுப்பிரமணியம், யோகி என்று எல்லாராலும் அறியப்பட்ட பலர் பற்றி செய்தியே இல்லை.

கிட்டு செயலிழந்த போது கிட்டுவின் ஆதரவாளர்கள் பலர் ஒதுக்கப்பட்டனர். வெளியேற்றப் பட்டனர். இதைப் போல மாத்தயா தனிமைப்படுத்தப்பட்டு அவரது ஆதரவாளர்கள் பலர் சிறையிடப்பட்டனர்.

இப்படியான நிலையில் தான்

**19ம் பக்கம் பார்க்க..**

# பேதம்

**அருண்**

இது
பத்தாவது மாடி

நான்
என் மனைவி
என் மகள்
ஒரு
காவு கூண்டுக்காக(லிப்ட்)
காத்து நிற்கிறோம்

நாம்
தரைக்குச்
செல்ல வேண்டியிருக்கிறது

அங்கே
ஒரு வெள்ளை" வருகிறது

மகள்
புன்முறுவல் தெளிக்கிறாள்
புன்முறுவலுடன்
அன்பான பதில்

நானும் மனைவியும்
பார்த்துக் கொள்கிறோம்
ஒருவரை ஒருவர்

காவுகூண்டும்
வந்தது
உள்ளே
ஒரு "இலங்கை"
மகள் புன்னகைத்ததும்
அது
முகட்டை வெறித்தபடி

கதவு மூடி
பதிகிறோம்

ஒரு தரிப்பு

ஒரு "சப்பட்டை"
ஏறுகிறது உள்ளே
மகள்
இங்கும் புன்னகைக்க
"சப்பட்டையும்"
கண்ணால் சிரித்து
கையால் பேசிக்
கொள்ளுது
மகளை நோக்கி

நானும் மனைவியும்
பார்த்துக் கொள்கிறோம்
ஒருவரை ஒருவர்

கதவும் மூட...
இன்னும்
ஏழு மாடி இருக்கிறது

மீண்டும்
ஒரு தரிப்பு!

இருண்ட "கறுவல்கள்"
உட்கிரகிக்கப்பட
அவர்களை நோக்கியும்
மகள் புன்னகைக்க
பதிலாய் அவர்கள்
பல்லையும் காட்டி
கண்ணையும் சிமிட்டி

நாங்கள்
ஒருவரை ஒருவர்
பார்த்துக் கொள்கிறோம்.

இன்னும்
மூன்றே மாடி

கூண்டு
எல்லோரையும்
கொட்டிக் கொள்கிறது

"இவள்"
ஆரைக் கண்டாலும்
சிரிப்பாள்!
எம் குமைச்சல்
இரண்டு கால்கள்
இரண்டு கைகள்
இரு தலை
இரண்டு காதுகள்
ஒரு
மூக்கு
இருந்தால் மனிதன்

இதுதான்
எம் மகளின்
முடிவாய் இருக்கக்கூடும்

எங்கள் முடிவுகளோ வேறு
அவற்றை
எம்மிடமிருந்து கற்க
வயது இருக்கிறது
அவளுக்கு
இப்போதுதானே ஒன்று

# குற்றம் குற்றமே!

பொருத்தம் பேசி அருவி வெட்டித் தந்த
அகமது காக்கா ஒரு போதும்
தொப்பி பிரட்டியதில்லை

சட்டை தைத்துத் தந்த
சையது தம்பியின் நாவில்
பொய்யெதும் இல்லை

முக்காடிட்ட மௌனத் தாய்களின் மனதில்
வஞ்சனையேதுமில்லை.

மண்ணோடு மண்ணாகப் பிறந்தவர்கள்
அந்த மண்ணை விளைவித்துண்டவர்கள்

கீரிமலையில் வாழ்ந்தாலும் கிரிந்தையில் வாழ்ந்தாலும்
தப்பித் தவறியும் தமிழை மறக்காதவர்கள்

அல்லாவைத் தொழுதது குற்றமா?

தமிழ்த்தாய் பெற்றெடுத்த இஸ்லாமியக் குழந்தைகள்
குடியுரிமை இழப்பதற்கு குற்றமென்ன செய்தார்?

தாய்ப்பாலோடு சேர்த்து தமிழமையும்
உமிழ்ந்தது குற்றமா?

புறமுதுகு காட்டாத புனிதப் போராளிகளின் மேல்
சவாரி விடுபவர்களே சொல்லுங்கள்?

என்ன குற்றம் கண்டீர் எமது சகோதரர் மீது

**விதுரன்**

# எந்த வேடம்?

ஆறாண்டுகள் முஸ்லீம்
கல்லூரியிலே கல்வி பயின்றேனா
ஆறும் வகுப்பிலே பாதிநேரத்துடன்
வீட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டேனா
அம்மா ஏன் என கேட்டாளா?
பாதிசட்டையுடன் கல்லூரிக்கு
வரவேண்டாமாம்...சிணுங்கினேனா.
பாய்சூட்டும், சட்டையும் முந்தானியும்
போட்டு வரட்டுமாம்... என்றேனா!
முகம் சுளித்த அம்மா !
பொய் சமாதானம் செய்து
மீண்டும் கல்லூரிக்கு
அனுப்பிவைத்தாளா?
அடுத்த நாளும் திருப்பி
அனுப்பப்பட்டேனா?

கோப்பரேட்டிவ் கடையினிலே
வெள்ளை துணி வாங்கி
முகமது டெய்லரிடம் கொடுத்து
பாய்சூட் தைத்து தந்தாளா
வெட்கத்துடன் மாட்டிக்கொண்டு
வகுப்புக்கு போனேனா
முன்பியாவும், சியானாவும்
யா அல்லா
பசுந்தாயிருக்குதடி(அழகாக)
என்றார்களா!

இப்போதெல்லாம் காதர் டீச்சர்
சொணங்கி போனாலும் பேசமாட்டாளா
காலைக்கூட்டத்தில் தொழும் போது
நானும் முக்காடிட்டுக் கொள்வேனா
தொழுகை முடிய
சதக்கல்லாவு மௌலானா அலீம்
என்பேனா
நண்பிகள் ஓரக் கண்ணால்
கண்சிமிட்டுவாள்களா

வீட்டினிலே பாய் பாய் என
கேலி செய்வாளா என் அக்கா
ஒரு நாள் பஸ்சினில் வரும் போது
பஸ்சுக்குள்ளிருந்து தெமலு தெமலு
என இழுத்து வெளியே தள்ளி
உதைத்தார்களா
நான் மட்டும் ஒரு தெசிமாவாக
முக்காடிட்டு நின்றேனா
என்னைக் கடந்து அவர்கள் சென்றார்களா

சில நாட்களின் பின்
அக்காவும் பாய் சூட் அணிந்து
என்னுடன் கல்லூரிக்கு வர
பழகிக்கொண்டாளா
முஸ்லீம்களை போல் வேடம்
போட்டு எம்மை காப்பாற்றி கொண்டோமா
அவர்களே வடக்கிலிருந்து
துரத்தியடிக்கப்பட்டார்களா
அவர்கள் எந்த வேடத்தை போட்டு
வாழ முடியும்........

**ஜி. மொனிக்கா**

## மணி விழா வாழ்த்து

இருவரியில் கவி எழுதி இதயத்தில் இடம்பிடிக்கும்
அரியபல கருத்துக்களை அள்ளித்தந்த- பெரியகவி
கந்தவனமென்பான் காணும் மணிவிழாவெம்
சொந்தவிழா என்றே சொல்

**நிலா குகதாசன்**

# மடுதேவாலயத்தின் அகதி முகாம்

## 'ராவய' ஆசிரியர் குழுவின் யாழ் பயணக் குறிப்புகள்4

**நந்தன வீரரத்ன**

**தமிழாக்கம்: செ, லோகநாதன்**
**(நன்றி ராவய 1993 நவம்பர் 14)**

பிரசித்தி பெற்ற கத்தோலிக்க தேவாலயம் அமைந்துள்ள காரணத்தால் கடந்த காலங்களில் மடு கிராமம் பலரும் அறியப்பட்ட ஒன்ருக திகழ்ந்தது. பல்வேறு மதத்தையும் சார்ந்த பக்தர்கள் மடு தேவமாதா குடிகொண்டுள்ள இத்தேவாலயத்திற்கு பூசைகளுக்காகச் சென்றனர். ஜனவரி மாதமும் ஏப்பிரல் மாதமும் தவிர வருடத்தின் ஏனைய சகல மாதங்களிலும் அங்கு நடைபெறும் திருநாட்களுக்காக இலங்கையின் பல்வேறு பகுதியிலிருந்தும் பக்தர்கள் சென்றனர். கோவில் வீதிகளில் கூடாரம் அடித்து பல நாட்கள், பல வாரங்கள் தங்கியிருக்கும் இவர்கள் இந்நாட்களை பக்தியோடும் ஓய்வாகவும் மகிழ்ச்சியுடன் கழித்தனர்.

ஆனுல் இப்பெரும் கோவில் தலம் அங்குள்ள அகதி முகாம் காரணமாக இன்று உலகப் பிரசித்தி பெற்றுள்ளது. 32,000 அகதிகள் வாழ்கின்ற இவ் அகதி முகாம் இலங்கையிலுள்ள மிகப் பெரிய அகதி முகாமாகும். இங்கு அகதிகளாக வாழும் அனைவரும் தமிழர்கள். கத்தோலிக்க இந்து மதத்தைச் சார்ந்த இவர்கள் மதவேறுபாடுகள் இன்றி மடுகோவிலைச் சுற்றி குடிசைகளை அமைத்துக் கொண்டு வாழ்கின்றனர். அகதி முகாமை அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயம் நிருவாகம் செய்து வருகிறது. இலங்கையின் இன்றைய யுத்த அரசியலின் முக்கிய தலையங்கமாக இவ் அகதி முகாம் மாறியுள்ளது.

எமது யாழ் பயணத்தின்போது நாம் போனதும் வந்ததும் இம் முகாமுக்கு ஊடாகவேயாகும். வவுனியாவிலிருந்து 22 மைல் தூரத்துக்கு அப்பால் இருக்கும் இம்முகாம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்திலேயே அமைந்துள்ளது. காட்டுக்குள் அமைந்துள்ள இம் முகாமில் எல்லைப் புற கிராமங்களைச் சார்ந்த அகதிகளே வாழ்கின்றனர்.

யுத்தத்திற்கு முன்னர் பல்வேறு வழிகளில் தமது சீவியத்தை கழித்த இம் மக்கள் இன்று அகதிகளுக்காக வழங்கப்படும் நிவாரண உதவியில் மட்டுமே தங்கி வாழும் மனிதர்களாக மாறியுள்ளனர். 10,000 க்கு குறையாத உழைப்பாளிகளின் உழைப்பு இன்று நாட்டிற்கு எவ்விதமான பிரயோசனமுமின்றி விரயமாகிக் கொண்டிருக்கிறது.

"முன்னர் நடைபெற்ற சகல திருநாட்களுக்கும் ஆயிரக்கணக்கில் மக்கள் வந்தனர். 1983 க்குப் பின்னர் அந் நிலமை மாறியது. தற்போது வெளி ஊர்களிலிருந்து எவரும் வருவதில்லை. அயல் கிராமங்களில் உள்ள கொஞ்சப் பேர் ஒன்று கூடி கோவில் திரு நாட்களை கொண்டாடுகின்றனர். இப்பொழுது எமது காலத்தில் பெரும் பகுதி அகதிகளுக்கு சேவை செய்வதிலேயே கழிகிறது. மதவேறுபாடுகள் எதுவுமின்றி எம்மால் இயன்ற வரை நாம் இவ் அப்பாவி மக்களுக்குச் சேவை செய்கிரேம்" மடு தேவாலயத்தின் பிரதம குருவானவர் வண பிதா. யேசுராசா மடு அகதிகள் தொடர்பாக எமது மனதுள் பதியவைத்த முதலாவது சித்திரம் இதுவாகும்.

மடு தேவாலயத்தினுள் கத்தோலிக்க வண. பிதாக்களின் இன்றைய பிரதான வேலை அகதிகளுக்குச் சேவை செய்தலாகும். கொழும்பிலுள்ள செடெக் அமைப்பின் உதவியுடனேயே இவர்கள் இச் சேவையில் ஈடுபட்டுள்ளனர். இப் பாரிய அகதிமுகாம் அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயத்தால் (UNHCR) பரிபாலனம் செய்யப்பட்டு வருகிறது. இவை தவிர சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், பிரான்ஸ் நாட்டு வைத்திய சேவை நிறுவனம் ஆகியவை இங்கு சேவையில் ஈடுபட்டுள்ளன

"நாம் யுத்த மாபியா இரண்டுக்கு இடையில் அகப்பட்டுக்கொண்டே இச் சேவையில் ஈடுபடுகிரேம். இது மிகவும் கஷ்டமான வேலையாகும். மாபியா இரண்டிலும் ஒரு பக்கத்திலிருந்தும் நாம் தப்பித்துக்கொள்ள முடியாது. இது தவிர நாம் நிதமும் பலவிதமான துன்பங்களுக்கு உள்ளாகியுள்ளோம். யுத்தத்தின் போது நடுநிலைமையிலிருந்து சேவையாற்றுவது கடினமான காரியம் என்பதையும் நாம் அறிவோம். ஆனுலும். ... நாமும் மனிதன் என்ற ரீதியிலான எமது கடமைகளை இயலுமான காலத்துக்கு இவ்வாறு செய்வோம்" என பெயரை வெளிப்படுத்த விரும்பாத வெளிநாட்டு தொண்டர் ஒருவர் கூறினுர். அவர் யுத்த மாபியா இரண்டு எனக் குறிப்பிட்டது ஒன்று விடுதலைப் புலிகளை மற்றது கொழும்பு அரசாங்கத்தையாகும்.

எவ்வித அடிப்படை வசதிகளும் அற்ற துன்பம் நிறைந்த இப்பிரதேசத்தில் தொண்டர்களாக பணிபுரியும் அனேக வெளிநாட்ட வர்கள் தற்போது மிகுந்த விரக்தியுடனேயே இருக்கின்றனர். நீர் பற்ருக்குறை, நுளம்புக்கடி ஆகியவற்றை தாங்கிக் கொள்ள முடியாத இவர்கள் இன்னும் எவ்வளவு காலம் இவ்வாறு தமது சேவைகளை வழங்குவர் என்பது சந்தேகத்துக்குரியதாகும்.

இவ்வளவு பெரும் தொகையான அகதிகள் உணவு, மருந்து, நீர், இருப்பிடம் ஆகிய பிரச்சனைகளால் நசுக்கப்பட்டுள்ள போதிலும் அரசியல் கயிருக மாறியுள்ளனர். மடு கோவிலை நோக்கி நாம் புறப்படும்போது வவுனியா இராணுவ முகாம் கேணல் குலதுங்க கூறியதை இங்கு குறிப்பிடுவது நியாயமானது என்றே எண்ணுகிறேன்.

"இம் மனிதர்கள் வவுனியாவுக்கு வந்து குடியிருக்க புலிகள் இடமளிப்பதில்லை. மடுவிலுள்ள அகதிமுகாமில் பலவந்தமாகவே இவர்களை தடுத்து வைத்துள்ளனர். இங்கு குடியிருக்க வருபவர்களுக்கு மட்டுமே நாம் எதிர்காலத்தில் நிவாரண உதவிகளை வழங்குவோம். மடு அகதி முகாமில் உள்ளவர்களில் ஒரு பகுதியினரை குடியமர்த்துவதற்காக பல கிராமங்களிலும் சுமார் 1000 வீடுகளை நாம் ஏற்கனவே கட்டியுள்ளோம். ஆனுல் புலிகள் இடமளிக்காததால் அவர்கள் இங்கு வரமுடியாமல் உள்ளனர். புலிகளுக்கு தெரியாமல் கள்ளத் தனமாக இரண்டு மூன்று குடும்பங்கள் காட்டுப்பாதையால் இருந்தாற்போல் ஒருக்கால் இங்கு வருவார்கள்."

வவுனியா எல்லையைச் சார்ந்த தமிழர்களின் விவகாரங்களைக் கவனிக்கும் கேணல் குலதுங்க அவ்வாறு கூறினுலும் மன்னுர் விடுதலைப் புலிகளின் தலைவர்

கணேஷ் கூறிய கதை இதற்கு முரணானது.

"இலங்கை இராணுவம் இழைத்த துன்பங்களாலேயே இம்மனிதர்கள் அகதிகளாயினர். முன்னர் இவர்கள் தமது பிரயாசத்தாலேயே சீவியத்தை நடத்தினார்கள். ஆனால் அரசாங்கம் அரசியல் இலாபம் பெறுவதற்காக இவ் அப்பாவி மனிதர்களை பாவிக்கிறது. இவர்களுக்கு நிவாரணம் தேவையானால் வவுனியாவுக்கு அங்கால வந்து குடியிருக்க சொல்கிறார்கள். ஆனால் கரைச்சல் வரலாம் என்ற பயத்தால் இம் மனிதர்கள் அங்கு குடியிருக்க போகவில்லை."

இவற்றில் உண்மையைக் கூறுவது யார் என தீர்மானிப்பது கடினமானது. எவ்வாருயினும் மடு அகதி முகாம் பூராவும் விடுதலைப் புலிகளின் நிருவாக இயந்திரம் நன்ருக செயல்படுகிறது என்பதை காணமுடிகிறது. இதனாலேயே முகாமுக்குச் செல்லும் எந்த தொடர்பு சாதனத்தைச் சார்ந்தவாரானாலும் அவர்களால் காட்டப்படுகின்ற அகதிகளுடன் மட்டும் தான் பேசமுடிகிறது. அக்டோபர் 7ம் திகதி இலங்கை இராணுவம் விமானத்திலிருந்து துண்டுப் பிரசுரங்களை மடு அகதி முகாமுக்குள் போட்டனர். தமிழில் எழுதப்பட்ட அத் துண்டுப் பிரசுரத்தில் நிவாரணமும் வீடும் வழங்கப்படும் வவுனியாவுக்கு வாருங்கள் எனக் கோரப்பட்டிருந்தது.

அகதிகள் என்னும் இக்கயிற்றின் ஒரு தொங்கலை இராணுவம் பிடித்துக் கொண்டு தெற்குக்கு இழுக்கும் போது விடுதலைப் புலிகள் தமது அதிகாரத்தைப் பாவித்து அக்கயிற்றின் மறு தொங்கலை வடக்குக்கு இழுக்கின்றனர். அகதிகள் கூத்தின் கயிருக மாறியுள்ள அல்லற்படும் இவ் 32000 மக்களும் மேலும் கசக்கிப் பிழியப்பட்டு இருபக்கத்துக்கும் இழுக்கப் படுகின்றனர்.

ஐந்து பேரைக் கொண்ட குடும்பமொன்றுக்கென வழங்கப்படும் ரூபா 350/= உலர்ந்த உணவு பங்கீட்டுப் பொருட்களைக் கொண்டு ஒரு மாத சாப்பாட்டை எவ்விதத்திலும் சமாளிக்க முடியாது. அகதி நிலமையால் மனித இயல்புகள் அற்றுப்போவதற்கு உணவு பற்ருக்குறை, வதிவிடப் பிரச்சனை, நீர்ப்பிரச்சனை நோய் நொடிகள் என்பவை மட்டும் காரணம் அல்ல. அடிப்படை மனிதப் பண்புகள் தகர்தல், சமூகத் தொடர்புகள், கலாச்சார உரிமைகளை இழந்து போகுதல் ஆகிய நெருக்கடிகளும் காரணமாகும். 20-30 சதுர அடி பரப்பளவைக் கொண்ட சுமார் 5000 குடிசைகள் இவ் அகதிமுகாமில் அமைக்கப்பட்டுள்ளன.

ஒரு அறையை மட்டும் கொண்டுள்ள இக் குடிசைகளில் குழந்தைகளும் பெரியவர்களும் செல்லமாக வளர்க்கப்படும் பிராணிகளும் ஒன்ருகவே வசிக்கின்றனர். அனேகமாக சமையலும் இவ் அறையிலேயே நடைபெறுகிறது. துன்பம் நிறைந்த இவ் வாழ்க்கையினால் வளரும் குழந்தைகளுக்கும் இளம்பெற்ரோர்களது வாழ்க்கைக்கும் இடையேயான இரகசியங்கள் இல்லாமல் போகின்றன. இதனால் பரம்பரையாக கடைப் படிக்கப்பட்டு வந்த பாலியல் தடைகள் அந்தக்குடும்பங்களில் மட்டுமன்றி முகாம் பூராவுமே தகர்ந்து போகும் நிலைமை தோன்றியுள்ளது.

"தண்ணீர் எடுக்கச் சென்ருலும் சண்டை, பங்கீட்டு பொருட்களைப் பெறச் சென்ருலும் சண்டை, மருந்து வாங்கப் போனாலும் சண்டை இதனால் நாம் எமக்குள்ளேயே சச்சரவுகளை வளர்த்துக் கொள்கிரேம். விடுதலைப் புலிகளின் பொலீஸ் பிரிவும் இங்கில்லாததால் இச் சச்சரவுகளை தீர்க்கவும் வழியில்லை. இச் சண்டை சச்சரவுகளை நிறுத்த முடியாது. முன்பு நாம் இப்படி அக்கம் பக்கத்தவர்களுடன் சச்சரவுகளுக்கு போன மனிதர்கள் அல்ல" 48 வயதுடைய சிங்கராசா முகாமில் ஏற்படும் சிறிய சண்டை சச்சரவுகள் குறித்து வேதனையுடன் இவ்வாறு கூறினர்.

கடந்த அக்டோபர் 7ம் திகதி பின்னேரம் நாம் மடுமுகாமைச் சுற்றி உலாவச் சென்ரேம். மடுதேவாலயத்தின் ஓய்வு விடுதியிலேயே நாம் அன்றிரவு தங்குவதாக இருந்ததால் இவ்வாறு உலாவுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த துன்பமான இரவை இனிமையாக கழிப்பதற்கு தேவையான ஏதாவது பானத்தை தேடுவதே உலாவின் இலக்காகும்.

"பிள்ளைகளே, நீங்கள் வேண்டுமானல் எனக்கு அடியுங்கள். என்னுல் இந்த ஊத்தை வேலையை செய்யாமல் இருக்க முடியாது. நாசமாகப் போன இந்த வாழ்க்கையை கொஞ்சம் கசிப்பைக் கூட குடிக்காமல் கழிக்க முடியுமா? நீங்கள் வேணுமானுல் எனக்கு அடியுங்கள்" வயதான ஒருவர் தமிழில் இவ்வாறு கூறிய குரலைக் கேட்டவுடன் நான் சுற்றிப் பார்த்தேன். அவர் தனது குடிபோதையைப் பற்றி இரு இளைஞர்களிடம் பாவமன்னிப்புக் கேட்டு கொண்டிருந்தார். நாம் சிறிது நேரம் அக்காட்சியை பார்த்துக் கொண்டிருக்கும்போது இரு இளைஞர்களும் அந்த வயதான மனிதரை கூட்டிக்கொண்டு இருளான இடத்துக்குச் சென்றனர். இது பற்றி நாம் விசாரித்த போது அவ்விடத்தில் இருந்த வியாபாரி ஒருவர் எமக்கு இவ்வாறு கூறினர்.


"இவற்றை நிறுத்த முடியாது. புலிகள் எவ்வளவு தான் தடை விதித்தாலும் இந்த மனுஷர்கள் கசிப்பு வடிக்கத்தான் செய்வார்கள். கசிப்பு குடிப்பார்கள். கசிப்பு வடித்து அகப்பட்டால் பிடித்துக்கொண்டுபோய் சிறையில் போடுவார்கள். பாதை வெட்டச் சொல்லுவார்கள். கசிப்புக்கு பிடிபட்டால் 10 மாதம் சிறை. அங்கு போய் வந்தப் பிறகும் அதே வேலையைத்தான் திரும்பவும் இவர்கள் செய்வார்கள்."

விநோதமும், மகிழ்ச்சியும் அற்ற அகதிவாழ்விற்கான தீர்வு அகதிகளை அந்நிலையிலிருந்து விடுவிப்பதிலேயே தங்கியுள்ளது. அகதி நிலையானது ஒரு மனிதனின் ஆளுமை, ஆத்துமம், சரீரம் ஆகிய மூன்றையும் அடிப்படையிலேயே அழித்து விடுகிறது. உழைத்து சாப்பிட்ட மனிதனை பிச்சை ஏந்தச் செய்கின்ற காரணத்தினாலேயே இந்நிலைமை தோன்றுகிறது. பொதுவாக வடக்கில் உள்ள சுமார் மூன்று இலட்சம் அகதிகளில் வயதில் பெரிய பரம்பரையினர் வாழ்க்கையை ஒருவாறு நகர்த்த முயற்சிக்கும்போது சிறுவர் சமுதாயம் இளைஞர் பரம்பரையும் வேறுநோக்குடன் உள்ளனர். தமது கல்வியையும் இளமைத் துடிப்பையும் இல்லாதொழித்த அகதிவாழ்விலிருந்து வெற்றி பெறுவதற்காக புலி இயக்கத்தில் சேர்கின்றனர். புலி முகாம்களில் இவர்களுக்கு வயிறு நிரம்ப ஆகாரமும், அழிந்த ஆளுமையை மீண்டும் அடைவதற்கு துப்பாக்கியும், கந்தல் ஆடைகளுக்குப் பதிலாக காற்சட்டையும் சேட்டும் கிடைக்கின்றன. நிதமும் இடம் பெறும் உயிர் இழப்புகளால் ஆட்பலம் குறையும் போது இச்

**29ம் பக்கம் பார்க்க..**

# குறுநாவல்

# வன்னி மண்



**வ.ந. கிரிதரன்**

காடு ஆரம்பமாகும் இடம் வந்தது. ஒற்றையடிப் பாதை தெரிந்தது குமரன் 'பகிடி'யாகக் கூறினான்.

"டே ராகவா.... நல்லா ஒருக்கா ஆசை தீரத் திரும்பிப் பார்த்துக்கோ.... காட்டுக்குள்ளை போனால்... வரும் வரைக்கும் ஊரையோ மனிசங்களையோ பார்க்க முடியாது"

ஒருமுறை திரும்பிப் பார்த்துக் கொண்டேன். அப்பொழுதுதான் முதன் முறையாக ஒருவித திகில் படர்ந்த உணர்வு நெஞ்சை வெட்டியோடியது. பயணத்தின் யதார்த்தம் புரிந்தது. காடு பயங்கரமான மிருகங்கள் வசிக்கும் காடு! எந்தவிதப் பாதுகாப்புமில்லாமல் செல்கின்றோம். திரும்பி வருவோமா..... ஒரு கணம் தான்! மறுகணமே நெஞ்சில் ஆர்வம் குடிகொண்டுவிட்டது. புதியனவற்றைப் பார்க்கப் போகின்றோமே என்று சந்தோஷம் பரவியது. ஒருவித எதிர்பார்ப்புடன், ஒருவித களிப்புடன் விரிந்திருந்த காட்டை ஊடறுத்த ஒற்றையடிப் பாதையினுள் காலடியெடுத்து வைத்தோம். மனித சஞ்சாரமேயற்ற புதியதோருலகினுள் மெல்ல நுழைந்து கொண்டோம்.

திரும்பின பக்கமெல்லாம் மரங்கள் பெரிய சிறிய, ஓங்கிய, வீங்கிய, மரங்கள். "மிக்க நலமுடைய மரங்கள். பல விந்தைச் சுவையுடைய கனிகள்... நெஞ்சிற் கனல் மணக்கும் பூக்கள்.... மதி வஞ்சித்திடு மகழிச் சுனைகள்..... முட்கள் மண்டித் துயர் கொடுக்கும் புதர்கள்" மலிந்த திக்குத் தெரியாத காடு. காலையிளஞ் சூரிய ஒளியினை பெருவிருட்சங்கள் மறைத்து விட்டன. இலேசாகத் தென்றல் வீசிக் கொண்டிருந்தது. பல்வேறு விதமான பறவைகளின் கீச்சொலிகள்... இடையிடையே காற்றிலசையும் இலைகளின் ஓசைகள்..... தொலைவிலெங்கோ தாவிய மந்திகளின் ஒலிகள்...... இவை தவிர ஒருவிதமான மோன அமைதியெங்கும் பரவிக்கிடந்தது.

குமரனின் மாமாவும் நண்பனும் சிரிக்கச் சிரிக்கச் கதைத்தபடி சென்று கொண்டிருந்தார்கள். பின்னால் நானும் குமரனும் எங்களிற்குள் கதைத்தபடி சென்று கொண்டிருந்தோம். செல்லும் வழியெங்கும் விரிந்து கொண்டிருந்த காட்சிகளை வியப்புடன் பார்த்தபடி குமரனுடனும் கதைத்தபடி சென்று கொண்டிருந்த நெஞ்சில் உற்சாகம் பொங்கிக் கொண்டிருந்தது. களிப்பு துள்ளியோடியது. நேரம் ஏற ஏற கோடை வெப்பமும் ஏறிக்கொண்டிருந்தது. அவ்வெப்பத்தை ஓரளவிற்குக் காட்டு மரங்கள் தணித்தபடியிருந்தன. நாங்களோ நடந்து கொண்டேயிருந்தோம். கால்கள் கூட இலேசாக வலிக்கத் தொடங்கின. வலி கூடும் சமயங்களில் சிறிது தங்கி நின்றுவிட்டுப் பயணத்தைத் தொடர்ந்தோம். இடையிடையே தென்பட்ட சிறிய குட்டைகளெல்லாம் காய்ந்து போயிருந்தன. அந்த வருடம் வழமையை விடக் கோடை கடுமையாகயிருந்தது. ஏனைய சமயங்களில் சிறிதளவாவது குட்டைகளில் நீர் தேங்கிக் கிடக்கும். அவ்வருடம் அது கூட இல்லை. ராகவன் கூறினான் "வேண்டுமென்றால் நீயே பார்.. ..... நாங்கள் போற இடத்திலை மட்டும் ஊற்று வற்றவே வற்றாது...."

எங்கிருந்தோ மிருகமொன்றின் சத்தம் கேட்டது. குமரனின் மாமா கூறினார். "அது காட்டெருமையின்ற சத்தம்....... கிட்டடியிலைதானெங்கோ நிற்கவேண்டும்....."

இவ்விதம்கூறியவர் அருகிலிருந்த காய்ந்த மரமொன்றிலிருந்து கிளைகளையுடைத்து ஆளிற்கொரு தடிகளைத் தந்தார். "எதுக்கும் கையிலை தடியை வைச்சிருப்பம்...." காட்டெருமைகள் பயங்கரமானவையென்று கேள்விப்பட்டிருக்கின்றேன். அவற்றின் கூரான கொம்புகள் உறுதியானவை. காட்டெருமைகளும் மூர்க்கமானவை. தொடர்ந்தும் நடந்து கொண்டிருந்தோம். ஆனால் காட்டெருமைகள் தென்படவேயில்லை.

மரணம்... வாழ்க்கைப் பாதையின் எந்த மூலையில் நம்மை எதிர்பார்த்து நிற்கின்றதென்பது எமக்குத் தெரியவில்லை. ஆனால் மரணம் நிற்கிறதேயென்று நாம் பயணத்தை நிறுத்தி விடுவதில்லை. தொடர்ந்து நடந்து கொண்டு தானிருக்கின்றோம். ஒரு குறிக்கோளை வைத்து, ஆர்வத்துடன், எதிர்பார்ப்புடன், எதிர்ப்படும் நிகழ்வுகளை எதிர்வு கொண்டு, ஒருவித உற்சாகத்துடன், களிப்புடன் சென்று கொண்டிருக்கின்றோம். முடிவதற்குள் எவ்வளவு முடியுமோ அவ்வளவை முடித்துவிட வேண்டுமென்பது போல பறந்து கொண்டிருக்கின்றோம். அன்றைய எம் பயணமும் அவ்வகையில் தான் அமைந்திருந்தது.

குறைந்தது நான்கு மைல்களாவது காட்டினுள் சென்றிருப்போம். அப்பொழுது தான் அதனைக் கண்டோம்... . கறுத்து .....மயிர் முட்டி.. பார்ப்பதற்குப் பயமாகயிருந்தது. கூழாம்பழங்களைப் போல் பார்வைக்கு, ஆனால் அவற்றை விடச் சிறியதாக, சுவையிலும்.. கூழாம்பழத்தைப்போல் புளிப்புடன் கூடிய சுவையில்லாமல் இனிப்பாக இருக்கும் 'முதலிப்' பழங்கள் நிறைந்த மரமொன்றினருகே பழங்களைச் சுவைத்தபடி கரடியொன்று நின்றிருந்தது.

குமரன் தான் முதலில் கரடியைக் கண்டான்

"மாமா...மாமா..... அங்கை......கரடி...."

தென்னங்கள்ளும், கஞ்சாவும் தந்த 'கலை'யில் மெய் மறந்திருந்த மாமாவினதும், மாமாவின் நண்பனினதும் வெறி இருந்த இடத்தை விட்டு ஓடிப்போனது.

முதலிப் பழங்களைச் சுவைத்துக் கொண்டிருந்த கரடியின் கவனம் எங்கள் பக்கம் திரும்பியது. அவ்வளவு தான் அருகிலிருந்த குமரனின் மாமாவையும் மாமாவின் நண்பனையும் காணவில்லை. கையில் கிடந்த தடிகளைப் போட்டுவிட்டு அப்படி எப்படித்தான் அவ்வளவு விரைவாக அருகிலிருந்த மரத்தினுள் ஏறினார்களோ...

இதற்குள் முற்றுக

**29ம் பக்கம் பார்க்க..**

A.R.K MARKET

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள்,
மரக்கறி வகைகள், கடலுணவு வகைகளை
மலிவு விலையில் பெற ...
தமிழ், ஹிந்தி வீடியோப் படங்கள்
வாடகைக்குப் பெற...

**31-35 St.Dennis Dr**
**(Don Mills/Eglinton)**

---

★ பால், பழங்கள், உடன் மரக்கறிகள்,
இறைச்சி மீன் வகைகள் ★ கனடிய உணவுப்
பொருட்கள்
★ **Frozen seafood**

**CD, Audio**
**மலிவு**
**விற்பனையில்**

பழைய, புதிய தமிழ் வீடியோ
படங்கள் வாடகைக்கும்
விற்பனைக்கும்
(ஒரிஜினல் பிரதிகள் மட்டும்)

**ஏ.ஆர்.கே மார்க்கட்**
**(416) 421 3429**

சகல விதமான மீன்
வகைகள், இறைச்சி
வகைகள், மரக்கறி
வகைகள் மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள...

## Antony Brothers Peoples Market

1472 Queen St West
Tel:516 3903

**மாபெரும் மலிவு விற்பனை**


| | |
|---|---|
| சிவப்புப் பச்சை அரிசி 1கிலோ | 1.49 |
| முந்திரி வத்தல் 200 கி | .99 |
| சக்கரை 450 கி | 1.49 |
| பயறு 2 ரூத் | 1.49 |

## Antony Brothers Fashion House

1484 Queen St West


| | |
|---|---|
| Ladies Clothes (Front open) | $13.99 |
| Maestro Phones (Call Display) | $99.99 |
| 8 pc நிறைகுடம் செட் | $47.99 |

## WE APOLOGIZE TO ALL OF OUR CUSTOMERS FOR THE SHORTAGE OF VITAMOL










### DR. ROBERT GLUCOSE

GLUCOSE IS FOUND IN NATURE IN FRESH FRUITS AND VEGETABLES. DR. ROBERT GLUCOSE IS MADE WITH THE BEST NATURAL INGREDIENTS AND PURIFIED TO ITS HIGHEST QUALITY. DR. ROBERT GLUCOSE IS GOOD FOR QUICK ENERGY. IDEAL FOOD FOR THE BRAIN, RED BLOOD CELLS, LIVER & MUSCLES. EXCELLENT FOR FEEDING CHILDREN AND ADULTS BECAUSE IT IS USED QUICKLY BY THE BODY.




### NERVOGEN NERVE FOOD

NERVOGEN NERVE FOOD: EXCELLENT FOR HARD WORKING TISSUES OF THE BODY, SUCH AS THE BRAIN, IMMUNE SYSTEM, KIDNEY, LIVER, GUT AND HEART. ONLY NERVOGEN IS BETTER TASTING AND PROVIDES A BETTER PROTEIN PROFILE THAN SANATOGEN. FOR GOOD MENTAL AGILITY DON'T SETTLE FOR LESS, DEMAND THE BEST.

### VITAMOL by DR. ROBERT

DUE TO THE OVERWHELMING DEMANDS FOR VITAMOL, WE HAVE EXPERIENCED SEVERE SHORTAGES. HENCE, WE APOLOGIZE TO ALL OUR CUSTOMERS. VITAMOL IS A NOURISHING MALTED FOOD DRINK MIX FORMULATED BY DR. ROBERT. IT IS THE ONLY MALTED NOURISHMENT MIX WITH VITAMINS, IRON, CALCIUM AND HONEY. VITAMOL IS AN EXCELLENT FOOD FOR ALL THE TISSUES OF THE BODY ; FOR EXAMPLE CALCIUM FOR THE BONES, VITAMINS & IRON PREVENTS ANEMIAS, PACKED WITH ENERGY. SO NOURISH YOUR BODY WITH THE BEST. YOU GET MORE IN EACH BOTTLE OF VITAMOL. COMPARE THE QUALITY, SIZE AND PRICE. DON'T SETTLE FOR ANY INFERIOR MALT BEVERAGE MIX. DEMAND VIATMOL, TODAY'S BEST BUY FOR QUALITY AND VALUE. VITAMOL IS RECOMMENDED FOR CHILDREN AND ADULTS.




### CHATAK: Curry Excellence

CHATAK CHATAK MADRAS CURRY POWDER IS THE BEST CURRY POWDER ON THE MARKET TODAY. MADE WITH 475 YEARS EXPERIENCE. IT IS SUPERB AND SO GOOD, NO OTHER CURRY POWDER CAN COMPARE. DEMAND CHATAK CURRY POWDER TO EXPERIENCE MADRAS AS IT'S BEST. ALSO AVAILABLE CHATAK MEAT SEASONING, FISH SEASONING, TANDOORI CHICKEN MIX, SALTED

SUPPLIES CAN BE OBTAINED IN USA, CANADA, AND THE WEST INDIES FROM UNIVERSAL FOODS & MERCHANDISE CO. (416) 535-3118 TORONTO, CANADA.
FOR SUPER VALUE, LOW WHOLESALE & RETAIL PRICES ON GIFT, TOYS, SRI LANAKAN GROCERIES & ALL THE ABOVE ITEMS CONTACT

## வன்னிமண்..

முதலிப் பழங்களின் மேலிருந்த கவனத்தைக் கைவிட்ட கரடியைப்பற்றி ஏற்கனவே நிறைய கதைகளைக் கேள்விப்பட்டிருந்தோம். மனிதர்களின் கண்களைத் தோண்டுவதில் அவை கைதேர்ந்தவை, சில சமயமங்களில் அகப்படும் மனிதர்களின் ஆணுறுப்பு க்களையும் பிடுங்கி விடுவதில் விருப்பமுள்ளவை. இதே சமயம் சிறு வயதில் படிந்திருந்த 'அம்மாக்கரடி' 'அப்பாக்கரடி' 'குட்டிக்கரடி' யின் கதை ஞாபகத்திற்கு வந்தது. பிணம்போல் ஆடாமல் அசையாமல் படுத்திருந்தால் மரக்கட்டையாக எண்ணிக் கரடி விட்டு விட்டுப் போய்விடுமாம். ஆனால் அதனை முயன்று பார்க்கும் தைரியம் எங்களிருவரிற்குமேயில்லை. சிலவேளை இந்தக் கரடி வித்தியாசமான கரடியாகயிருந்துவிட்டால்... சிறிது அறிவு கூடின கரடியாகயிருந்து விட்டால்...

இதற்கிடையில் குமரன் மிக விரைவாக ஒரு காரியம் செய்தான். உணவுப் பார்சலை எடுத்து சுற்றிக் கட்டியிருந்த பேப்பரைக் கழட்டிவிட்டு உணவை கரடி வரும் திசையை நோக்கி எறிந்தான். கரடியின் கவனம் ஒரு கணம் எறியப்பட்ட உணவின் மேல்திரும்பியது. அந்தச் சிறு கணப்பெழுதிற்குள் கையிலிருந்த பேப்பரைப் பற்ற வைத்து அருகிலிருந்த காய்ந்து குவிந்திருந்த குப்பை கூளங்களின் மேல் போட்டு விட்டான். நெருப்பு 'குபீ'ரெனப் பற்றியது. நெருப்பைக் கண்டு மருண்ட கரடி வந்த வழியே ஓடிக் காட்டினுள் மறைந்தது. நெருப்பு எவ்விதம் மிருகங்களைப் பயப்படுத்தி விடுகின்றதென்பதை அன்று தான் அறிந்து கொண்டேன். கரடி ஓடி மறைந்ததும் குமரனின் மாமாவும், நண்பனும் மரத்திலிருந்து இறங்கி வந்தார்கள். எங்களைப் பார்க்க அவர்களிற்கே வெட்கமாகயிருந்தது. இருந்தாலும் குமரனின் அறிவை மெச்ச அவர்கள் தவறவேயில்லை. இந்தச்சம்பவம் எனக்குப் பெரியதொரு உண்மையை எடுத்துக் காட்டியது. பய உணர்வு எவ்விதம் அறிவை மறைத்து விடுகின்றது. சுயநலத்தை எவ்விதம் தூண்டிவிடு கின்றது. கரடியைக் கண்டதும் பயந்து விட்ட குமரனின் மாமாவோ நண்பனோ தங்களைக் காத்துக் கொள்ள வேண்டுமென்ற உணர்வில் ஏறி மரத்தில் ஒளிந்து கொண்டார்களே தவிர சிறுவர்களான எங்களைப் பற்றிக்கொஞ்சம் கூட நினைக்கவில்லை. இதேசமயம் இந்தச் சம்பவம் இன்னுமொரு விடயத்தையும் எடுத்துக் காட்டியது. எதிர்ப்படும்சூழல்கள் எவ்வளவு ஆபத்து நிறைந்தவையாகயிருந்தாலும், அறிவைப் பாவித்து தப்புவதற்கு முயற்சி செய்து பார்க்கவேண்டும். முயற்சி தோற்கலாம். வெல்லலாம், அத்தகைய ஆபத்தான சமயங்களில் பய உணர்விற்கு ஆட்பட்டுக் கலங்கி நின்று விடுவதால் நிகழப் போகின்ற அழிவை தடுத்து நிறுத்த முடியுமா? குமரன் உண்மையில் நெஞ்சுரம் மிக்கவன் தான். மாமாவின் சிகரட்டிற்காக எடுத்துவந்த நெருப்பெட்டியையும் சாப்பாட்டுப் பார்சலையும் இணைத்துக் கலங்காமல் ஒரு திட்டம் போற்று முயன்று பார்த்தான். வெற்றி கிட்டிவிட்டது. சந்தர்ப்ப சூழ்நிலைகள் எத்தகைய ஆபத்தானவையாக எதிர்ப்பட்டாலும் மனிதனே முயற்சியை மட்டும் கைவிட்டு விடாதே. மூளையை மட்டும் பாவிக்காமலிருந்து விடாதே. மூளையுடன் கூடிய முயற்சி நிச்சயம் உன்னைக் காப்பாற்றும்.

தொடரும்

## மடு அகதி முகாம்..

செயற்பாடு காரணமாக புலிக்கு தேவையான புதிய அங்கத்தவர்கள் குறைவின்றைக் கிடைக்கின்றனர்.

வேதனைப்படும்சகலருக்கும்துணை என நம்பப்படும் மடு மாதாவாலும் இப் பெருந்தொகையான அப்பாவிகளுக்கு ஒரே தடவையில் உதவி செய்ய முடியவில்லை போலும், அப்படி இல்லாவிட்டால் தனது கண்ணுக்கு முன்னே உள்ள இம் மக்களுக்கு நித்திய சமாதானத்தை வழங்காதது ஏன்?

பொதுவாக ஐந்து பேரைக் கொண்டகுடும்பம் ஒன்றுக்குரூபா 350/= பெறுமதியான உலர்ந்த பொருக்களே மாதமொன்றுக்கு கிடைக்கின்றன. இப் பங்கீட்டு பொருட்கள் மூலம் எந்தவொரு குடும்பமும் ஒரு மாத காலம் வாழமுடியாது. உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மேலதிக வருமானத்தை தேடிக் கொள்வதும் அகதி முகாமில் இலகுவான காரியம் அல்ல. 32,000 அகதிகள் உள்ள மடு அகதி முகாமில் இப் பிரச்சினை மிகவும் பாரதூரமானது. முற்றாக விவசாய பொருளாதாரம் மட்டுமே நிலவும் இப்பிரதேசத்தில் பசளை, எரிபொருள் பற்றாக் குறை காரணமாக பிரதேசத்தின் விவசாயம் தகர்ந்து விட்டது. இவ்வளவு இக்கட்டான நிலமையிலும் செய்யப்படும் விவசாயத்துக்கு கூலிவிவசாயிகளுக்கு தொழில் வழங்கக் கூடிய ஆற்றலும் இல்லை. சிறிய விவசாய கூலித் தொழிலுக்கும் கடுமையான போட்டியே நிலவுகிறது. இதனால் விவசாய கூலிகளின் நாள் சம்பளம் ரூபா 40 ஆக வீழ்ச்சி அடைந்துள்ளது.

மடுவைச் சுற்றியுள்ள காடுகளிலிருந்து முகாமுக்கு தேவையான விறகுகளை சமாளித்துக் கொண்டாலும் தண்ணீர் பற்றாக்குறையை மடு மாதாவாலும் தீர்க்க முடியவில்லை. இவ்வாறான பெரும் தண்ணீர் தட்டுப்பாடும் துப்பரவற்ற நீரைப் பாவிப்பதாலும் பலவிதமான நோய் நொடிகள் முகாமில் பரவியுள்ளன. முகாமைச் சார்ந்த 5000க்கு குறைவற்ற குடிசைகளும் இரவு நேரங்களில் நுளம்புகளின் கட்டளைக்கு கீழ்ப்படிகின்றன. இதனால் முகாமில் மலேரியா நோய் பரவுவதை தடுக்க முடியாது. மடுவுக்கு அருகில் உள்ள வில்பத்து காட்டில் விடுதலைப் புலிகள் மாதிரிக்கிராமங்களை அமைத்துள்ளனர். அநேகமாக உயிரிழந்த விடுதலைப் புலி தலைவர்களின் பெயர்களாலேயே இக்கிராமங்கள் அழைக்கப் படுகின்றன. பெரும்பாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதியினரே இக்கிராமங்களில் குடியமர்த்தப்படுகின்றனர். வரண்ட வலயத்தைச் சார்ந்த இக்காணிகளில் விவசாயம் செய்வது இலகுவானதல்ல என்பதால் அகதி விவசாய வாழ்க்கையிலிருந்து மேலும் அகதி நிலையை நோக்கியே பயணம் செய்கின்றனர்.

வவுனியாவை நோக்கி புறப்பட முன்னர் நாம் மடு கோவிலுக்குள் சென்றோம். வெறிச்சோடியிருந்த கோவில் மண்டபத்துள் பக்தர்கள் மடுமாதாவை நோக்கி அழுது பிரார்த்தித்துக்கொண்டிருந்தனர். துயரம் சூழ்ந்திருந்த அவர்களின் முகங்களின் இரு கண்களும் மடுமாதாவின் தேவசுருவத்தை கூர்மையாக நோக்கிய வண்ணம் காணப்பட்டன. தன்னை நோக்கி வாய்க்குள் முணுமுணுத்துப் பிரார்த்திக்கும் அப்பக்தர்களை பார்த்துக் கொண்டிருந்த தேமாதாவின் முகத்திலும் அபயம் அளிக்க முடியாத தன்மையே காணப்பட்டது.

(பயணக்குறிப்புகள் 5 அடுத்த வார இதழில்)

# ஜே.வி.பி.யின் வரலாற்றுக் கதை

வசந்த திசாநாயக, பற்றிக்பெர்னன்டோ
சரத் த சில்வா, ரஞ்சித் குமார

தமிழாக்கம்: செ. லோகநாதன்

### கட்சி புனரமைப்புடன் ஜேவிபி யின் அரசியல் நடவடிக்கைகள் மேலும் வளர்ச்சி பெறுகின்றன

1987 இறுதிப் பகுதியில் கட்சி புனரமைப்புச் செய்யப்பட்டதுடன் கூடவே ஜேவிபியின் நடவடிக்கைகள் அதிகரித்ததையும் காணக் கூடியதாகவிருந்தது. 1987ம் ஆண்டு அக்டோபர் 20ம் திகதி தேசபக்த மக்கள் இயக்கத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்திய ஏகாதிபத்தியத்திற்கும் தாய்நாட்டைக் காட்டிக் கொடுத்த சகல துரோகிகளுக்கும் எதிராக தேசபக்த யுத்தம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப பட்டது. ஆனுல் உண்மையில் நிகழ்ந்ததோ யுத்தம் அல்ல, தமக்கு விரோதமானவர்களைப் படுகொலை செய்ததும், ஆயுதங்களை அபகரித்ததுமேயாகும். இக் காலகட்டத்தில் தினசரி ஏதோ ஒரு சம்பவம் நிகழ்நதது. 1987ல வன்செயல் தடுப்புப் பிரிவின் பணிப்பாளரான பொலீஸ் அத்தியட்சகர் டெரன்ஸ் பெரேரா கொலை செய்யப்பட்டதும் டிசம்பர் 23ம் திகதி யூ என் பி தலைவர் ஹர்ஷ அபேவர்தன உட்பட மூவர் பட்டப்பகலில் வெள்ளவத்தையில் கொலை செய்யப்பட்டதும் பிரதான சம்பவங்களாகும். இது தவிர அரசாங்கத்தைச் சார்ந்த அரசியல் வாதிகளை கொலைசெய்ய எடுத்த முயற்சிகள், யூஎன்பியின் பிரதேச அமைப்பாளர் தீவிர ஈடுபாடு கொண்டவர்களை கொலை செய்தல் இராணுவ பொலீஸ் படையைச் சார்ந்தோரிடமிருந்து ஆயுதங்களை பறித்தல் என்பன 1987ன் இறுதிப் பகுதியிலிருந்து துரிதமாக இடம்பெற்றதையும் காண முடிந்தது. அத்துடன் இராணுவ பொலீஸ் படையைச் சார்ந்தோரை கொலைசெய்தலும் படிப்படியாக அதிகரித்தது. ஜேவிபியின் நடவடிக்கைகளை அவதானித்து வந்த உத்தியோகத்தர்களே பெரும்பாலும் இலக்காயிருந்தனர்.

படுகொலைகள், ஆயுதங்கள் அபகரிப்பு ஆகியவை தவிர இக்காலகட்டத்தில் ஜேவிபி யின் வழிகாட்டலின் கீழ் அர்சாங்கத்துக்கெதிரான பெரும் எதிர்ப்பார்ப்பாட்ட இயக்கங்களும் தோன்றின. பல்கலைக்கழகங்கள் பாடசாலைகளை மையமாகக் கொண்டே இவ் எதிர்ப்பார்ப்பாட்டங்கள் தோன்றின.

### முதலாவது தாய்நாடு இரண்டாவதே கல்வி

1987ன் இறுதி அரைப் பகுதி வகுப்பு பகிஷ்கரிப்பு, உண்ணுவிரதம் எதிர்ப்பு ஊர்வலம் ஆகியவற்றை கொண்டதாகும். ஜேவிபியின் மாணவர் அமைப்பான சோஷலிச மாணவர் சங்கமே இம் மாணவர் எதிர்ப்பு ஆர்ப்பாட்ட இயக்கத்த வழிநடாத்திய ஸ்தாபன மயப்பட்ட சக்தியாகும். தேசிய மட்டத்திலிருந்து மாவட்ட பிரதேச மட்டங்களில் அமைக்கப்பட்டிருந்த சோஷலிச ஸ்தாபனமாகும். 1987-1988 ல் மாணவர் போராட்டங்கள் இதனுலேயே வழிநடத்தப்பட்டன.

ஆனுல் போராட்டம் விரிவுபடும் போது, போராட்டத்தினது திசையே மாறும்போது சோஷலிச மாணவர் சங்கத்தின் பெயரால் ஆர்ப்பாட்டங்கள் வழிநடத்தப்படுமாயின் அவை ஒருவகையில் குறுகிய சுபாவத்தை அடைய இடமேற்படலாம். ஆதலால அவற்றை பரந்த அடிப்படையில் பரந்த மட்டத்தில் மாணவர் பேராட்டத்தை நடாத்துவதற்கு பொருத்தமான வகையில் பொதுவாக அதிகளவிலான மாணவர்கள் உடன்படக்கூடிய தேசிய மாணவர் நடுவம் ஸ்தாபிக்கப்பட்டது.

மாணவர் மீதான அடக்கு முறைகளுக்கு எதிராக ஆரம்பமாகி தனியார் துறை வைத்தியக் கல்லூரி பிரச்சினை, மாணவர் படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்தல் ஆகியவற்றின் ஊடாக அளவில் விருத்தி பெற்று பின்னர் இந்திய-இலங்கை உடன்படிக்கைக்கு எதிராகவும் இந்தியாவுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் விரோதமான அடிப்படையிலுமாக வளர்ந்து பல்கலைக்கழகங்களையும் பாடசாலைகளையும் செயலிழக்கச் செய்யுமளவிற்கு வளர்ச்சி பெற்றது. 'முதலாவதாக தாய் நாடு இரண்டாவதாக பாடசாலை", 'முதலாவதாக தாய் நாடு இரண்டாவதாக படிப்பு" ஆகிய கோஷங்கள் மாணவர் சமுதாயத்தின் முதன்மை பெற்ற கோஷங்களாக மாறின. மாணவர் போராட்டம், ஆர்ப்பாட்டம் காரணமாக பல்கலைக்கழகங்கள் சுமார் மூன்று வருடத்துக்கு மூடப்பட்டதோடு பாடசாலைகளும் நீண்ட காலத்திற்கு மூடப்பட்டன.

### இடதுசாரி இயக்கத்திற்கு எதிராக யுத்த பிரகடனம்

மேற்குறிப்பிட்டவாறு ஜேவிபி யின் வன்முறைகள் அதிகரிக்கும்போது, ஜேவிபி உத்தியோகபூர்வமாக இடதுசாரிகளுக்கு எதிராக 1988 ம்ஆண்டு ஜனவரி மாதம் யுத்தப் பிரகடனம் செய்தது. ஜேவிபியினர் தேசபக்த மக்கள் இயக்கம் மூலமாக இதுவரையும் தயாபத்திர, நந்தன மாரசிங்க, ஜேமிஸ் அத்துகல ஆகிய மூவரை மட்டுமே படுகொலை செய்திருந்தனர். தயாபத்திரன படுகொலை செய்யப்படும் போது சுதந்திர மாணவர் சங்கத்தின் தலைவராக இருந்தார். நந்தன மாரசிங்க 1971க்கு முன்னரும் 1971லிருந்து 1981வரையும் ஜேவிபியின் தீவிர இயக்குனராக செயல்பட்டதோடு ஜேவிபியில் இருந்து விலகிய பின்னர் 'மக்கள் கலாச்சார நடுவத்தை " ஸ்தாபிக்கும் வேலைகளிலும், இலக்கிய, கலை துறைகளிலும் ஈடுபட்டுவந்தார். ஜேமிஸ் அத்துகல 1971க்கு முன்னர் ஜேவிபியின் இயங்குனராகவும் பின்னர் ஜனதா சங்கத்தின் இயங்குனராகவும் செயல்பட்டதோடு அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்திலும் ஸ்ரீ லங்கா மக்கள் கட்சியிலும் செயல்பட்டார். ஜேவிபி இடதுசாரிகளுக்கு எதிரான போதிலும் அதுவரைக்கும் இடதுசாரிகளை வேரோடு அழித்து துவம்சம் செய்யவேண்டும் என்னும் தீர்மானத்துக்கு வரவில்லை. அதுவரைகாலமும் பிரதானமாக ஆளும் கட்சியினரே படுகொலை செய்யப்பட்டனர். 1988 ஆரம்பத்துடன் கூடவே இடதுசாரிகளை முற்ருக அழித்தொழிக்க வேண்டும் என்னும் முடிவுக்கு ஜேவிபியினர் வருகின்றனர்.

1988 ஜனவரி மாதம் 18ம் திகதி ஜேவிபியினர் 'தாய்நாட்டின் எதிரிகளுக்கு தண்டனை வழங்குவதற்கான தேசிய இயக்கம் 'என்னும் பெயரில் 'கொலை செய்யப்பட்ட அனைவரும் தண்டனைக்குரிய தேசத் துரோகிகளே ' என்ற தலைப்பில் பிரசுரம் ஒன்றை வெளியிட்டனர். அப் பிரசுரத்தில் தாய் நாட்டின் எதிரிகளாக சமசமாஜ கம்யூனிஸ்ட், நவ சமசமாஜ, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ஆகிய கட்சிகள் ஜனதா சங்கம் சுதந்திர மாணவர் சம்மேளனம் ஆகியவை, நாம் இங்கு பெயர்குறிப்பிடாத கலை, கலாச்சார, மகளிர், சமூக சேவை வெகுஜன அமைப்புகளையும் குறிப்பிட்டிருந்தனர். இவற்றை பூரணமாக அழித்தொழிப்பது ஜெயவர்தனவையும் இந்திய ஏகாதிபத்தியத்தையும் அழித்தொழிக்கும் போராட்டத்திலிருந்து பிரிக்கமுடியாத அங்கம் எனவும் குறிப்பிட்ட இப்பிரசுரத்தில் 'அண்மையில் தண்டனை வழங்கப்பட்ட' நந்தன மாரசிங்க பொலீஸ் உளவாளியும் தேசபக்தர்களுக்கு எதிராக சதி நடவடிக்கைகளில் ஈடுபடுபவர் எனவும்

ஜேமிஸ் அத்துகல உமா மகேஷ்வரனின் மட்டக்களப்பு முகாமில் பயிற்சிபெற்ற 'சேற்று நிறப் புலி'' எனவும் அறிமுகப்படுத்தப்பட்டது. இக்குற்றச் சாட்டுகள் தாம் செய்த படுகொலை நியாயப்படுத்துவதற்காக சோடிக்கப்பட்ட கதைகளாகும். கதைகளைச் சோடிப்பதில் ஜேவிபியினர் மிகவும் கெட்டிக் காரர்கள் தான்!

முதலாவதாக 1988ம் ஆண்டு ஜனவரி மாதம் 25ம் திகதியும் மீண்டும் 1988ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ம் திகதியும் 'தேச பக்த ஆயுத படையணியின் ஒருங்கிணைந்த தலைமையகம் ' என்னும் பெயரில் ஜேவிபியினரால் 'தாய் நாட்டின் அனைத்து எதிரிகளுக்கும் தண்டனை ' என தலையங்கமிட்டு வெளியிடப்பட்ட பிரசுரத்தில் இடதுசாரிகளை மூன்ருவது எதிரிப் படை என நாமம் சூட்டியதோடு அவர்களை அழித்தொழிப்பதாகவும் கூறப்பட்டிருந்தது. அப்பிரசுரத்தில் இவ்வாறு கூறப்படுகிறது. 'மூன்ரும் எதிரிப் படை என அழைப்பது யாரை? 1935ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ம் திகதி தோன்றிய நாள் தொடக்கம் தொழிலாளி வர்க்கத்தை ஏமாற்றி தொழிலாளி வர்க்கத்தின் முதுகின் மேல் ஏறி அவர்களது பலத்தால் நல்ல சௌகரியங்களை அனுபவித்துக்கொண்டு அவர்களைக் காட்டிக் கொடுத்து பிற்போக்கு வாதிகளிடமிருந்து சலுகைகளையும், கௌரவப் பட்டங்களையும், வெகுமதிகளையும் பெற்ற வரலாற்றின் சகல தீர்க்கமான காலகட்டங்களையும் மக்களைக் காட்டிக்கொடுத்து யூஎன்பிக்கு சேவை செய்த லங்கா சம சமாஜக் கட்சியும், 1943ம் ஆண்டு ஜூலை 03ம் திகதி தோன்றிய நாள் தொடக்கம் உலக சோஷலிச இயக்கத்தைச் சாப்பிட்டு வயிறுவளர்த்ததோடு யூஎன்பியின் ஊன்று பொல்லாக செயல்பட்டும் 1980ம் ஆண்டில் தொழிலாளர் இயக்கத்தை முற்ருகவே யூஎன்பிக்கு பலிகொடுத்ததோடு நிற்காமல் இலங்கை புரட்சிகர இயக்கத்தை காட்டிக் கொடுப்பதற்கென்றே செயல்படுகின்ற ஸ்ரீ லங்கா கம்யூனிஸ்ட் கட்சியும், அன்று நாட்டின் பிரதான யூஎன்பி விரோத இயக்கமாக நிலவிய ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சிக்குள் கலியாணத்தரகனின் வழியாக நுழைந்து அதற்கு உள்ளுக்கேயே பேதங்களை உருவாக்கி அதனை இரண்டாக பிளவுபடுத்தி பெலவீனமடையச்செய்ததோடு போலி நக்சலைட் கும்பல் பற்றிய பொய்ப்பீதியை தோற்றுவித்து 1983ம் ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெருவண்ணம் ஜெயவர்தனவுக்கு வழிசமைத்துக் கொடுத்ததோடு இறுதியில் தமிழ் ஈழ பயங்கரவாத கொலைகாரர்களை வாரி அணைத்து முத்தமிட்டுக் கொண்டு ஜெயவர்தனவின் பணிவான சீடனாக செயல்பட்ட விஜய குமாரதுங்கவும் அவ்வாறே செயல்பட்ட வாசுதேவ நாணயக்காரவும், யூஎன்பி விரோதி, தொழிலாளி வர்க்கத்தலைவர்கள் எனக் கூறிக்கொண்டு யூஎன்பிக்கோ அதன் மிருகத்தனமான பாசிச ஆட்சிக்கோ அல்லது யூஎன்பி தொழிலாளி வர்க்கத்தின் மீது கட்டவிழ்த்த அடக்கு முறைக்கோ எதிராக ஒரு விரலைத்தானும் உயர்த்தாத தொழிற்சங்கங்களை தமது மூதாதையர் சொத்து எனக் கணிக்கும் ஒரு சிலரும், தேவசரணை அபிவிருத்தி நிலையம் செடெக் நிறுவனம் உட்பட சந்தேக நடவடிக்கைளில் ஈடுபடும் மேலும் பல அமைப்புகளதும் ஆதரவில் உதவிகளைப் பெற்று விவசாய சம்மேளனம் என்னும் ஆட்டுத்தோலைப் போர்த்துக் கொண்டு வாழும் பிற்போக்கு ஓநாய்களான ஜனதா சங்கமும் போலிக்கு சமூகசேவை , மாதர் சங்கம் என்னும் பெயர்ப்பலகைகளில் ஒழிந்து கொண்டு சர்வதேச பிற் போக்கு இயக்கங்களது அனுசரணையுடன் பிற்போக்கு தாபனங்களையும் சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் நடாத்தும் கும்பல்களும் தமிழ் ஈழ பயங்கரவாதிகளின் சிங்களக் கையாட்களான சுதந்திர மாணவர் சம்மேளனமும் இவற்றின் பிற்போக்குத் தலைவர்களும் ஆகும். இவர்கள் இன்று உண்மையான ஜெயவர்த்தன விரோதக் கட்சிகளதும் ஜெயவர்த்தன விரோதிகளதும் உயிர்வாழும் எதிரிகளாவர்.'

'இவர்களில் சிலர் அன்று வட்டமேசை மாநாட்டுக்கு சென்று ஜெயவர்த்தனவின் தனிமைக்கு துணையாக இருந்தனர். மற்றவர்கள் அதற்கு ஆமாம் போட்டனர். இவர்கள் அனைவரும் நாட்டை காட்டிக் கொடுத்த உடன் படிக்கைக்கு ஆதரவு வழஙகினர். இவர்கள் அனைவரும் தேசத்துரோக மாகாணசபைக்கு ஆமாம் போட்டனர். இலட்சக்கணக்கான பொதுமக்கள் தெருவுக்கு இறங்கி நாட்டைக் காட்டிக் கொடுத்ததற்கு எதிராக உயிரை இழந்து போராடிய போது முழுத்தொழிற் சங்க இயக்கத்தையும் உறங்க வைத்தது இவர்களே ஆகும். தாய்நாட்டுக்கு எதிராக இவ்வளவு பெரிய துரோகம் செய்த இவர்கள் தற்போது மேலும் அதிக தூரம் சென்று விட்டனர்'

'அன்று யூ.என்.பி குண்டர்கள் பல்கலைக்கழக மாணவர்களைத் தாக்கிய போது மௌனம் சாதித்த இவர்கள் அன்று யூ.என்.பி குண்டர்கள் தொழிலாளரின் எதிர்ப்பு இயக்கத்தை சைக்கிள் செயின்களால், குண்டுகளால் தாக்கிய போது மௌனம் சாதித்த இவர்கள் புத்திஜீவிகளை, பௌத்த பிக்குகளை, தாதிமாரை, மகளிரை தாக்கிய போது மௌனம் சாதித்த இவர்கள், 1983 யூலையில் யூ.என்.பி குண்டர்களால் முழுநாடும் தீக்கிரையாக்கப்பட்ட போது மௌனம் சாதித்த இவர்கள் சட்டவிரோதமான முறையில் தேர்தலை ஒத்தி வைத்து புரட்சிகர இயக்கத்தை தடை செய்து அதனை அழிக்க ஜெயவர்த்த செயல்பட்ட போது அதற்கு பூரண ஆதரவை வழங்கிய இவர்கள் (இது தொடர்பாக அக்டோபர் 10,1993 தாயகம் இதழின் 30ம் பக்கம் கலம் மூன்றைப் பார்க்கவும்) இன்று பொதுமக்களின் சிவில், ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டு பொதுமக்கள் மீது கொன்று குவிக்கும் அளவில் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டு கடந்த டிசம்பர் 19ம் திகதி துரோகி ஜயவர்த்தனுவினுல மக்களுக்கு எதிராக திறந்த மரண உத்தரவு பிறப்பிக்கப்பட்டு பைத்தியம் பிடித்து ஓலமிட ஆரம்பித்த நிலையில் அதற்கு சரியான பதில் வழங்கும் ஒரே பாதையாக தேசத்துரோகி யூ. என்.பி பாசிச கும்பலுக்கு எதிராக பொதுமக்கள் ஆயுதங்களை ஏந்தி மிகவும் தாமதித்து வன்முறையில் பதில் கூற ஆரம்பித்துள்ள போது இவர்கள் செய்தது என்ன? இந்திய ஒற்றனும் தமிழ் ஈழ பயங்கரவாத தலைவர்களில் ஒருவனுமான உமா மகேஸ்வரனை கொழும்புக்கு கூட்டி வந்து அவனுடைய ஆலோசனைகளின்படி தேசபக்தர்களுக்கு எதிராக பயங்கரவாதக் கும்பல் ஒன்றை உருவாக்கியதாகும். மட்டக்களப்பில் பயிற்சி பெற்ற இக்கும்பலை அரசாங்கமே ஆயுதபாணியாக்கியுள்ளது என்றும் அறிய முடிகிறது'

'இவர்கள் எவருமே இடதுசாரிகளோ, தொழிலாளர்கள் தலைவர்களோ, விவசாய தலைவர்களோ, சமூக சேவையாளர்களோ, கலைஞர்களோ அல்ல. இவை அவர்கள் அணிந்துள்ள முகமூடிகளேயாகும். இவர்கள் எவ்வித கலப்பும் அற்ற பிற்போக்கு வாதிகளே. தேசத்துரோகிகளே. ஆதலால் யூ.என்.பி தலைவர்களும் அவர்களது எச்சில் நக்கிகளும் அவர்களது பச்சைப் புலி பயங்கரவாதிகளும் அவர்களது தனிப்பட்ட குண்டர்களும் போன்றே இத்துரோகி பிற்போக்கு சகபாடிகளும் அவர்களது சீடர்களும் இவர்களது பயங்கரவாதக் கும்பலின் சகல அங்கத்தவர்களும் தாய்நாட்டின் எதிரிகளாக தண்டிக்கப்பட வேண்டியவர்கள். தாய்நாட்டின் எதிரிகளாகிய இவர்கள் அனைவரையும் துடைத்தெறிவதன் மூலமே தாய்நாட்டின் சுதந்திரத்தையும் மக்களுக்கு சுதந்திரத்தையும் சமாதானத்தையும் உருவாக்க முடியும்'

'தாய்நாட்டின் அனைத்து எதிரிகளுக்கும் மரணம்– மக்களுக்கு சுதந்திரமும் சமாதானமும்'

இடதுசாரிகள் மீது சுமத்தப்பட்ட இப்பொய்க்குற்றச்சாட்டுக்களுடன் (உண்மையிலேயே இக்குற்றச்சாட்டுக்களில் அனேகம் ஜே.வி.பிக்கே பொருந்துபவை. இடதுசாரிகளுக்கு அல்ல) கூடவே ஜே.வி. பியின் வழிகாட்டலின் கீழ் இடதுசாரிகள் மீதான வேட்டை ஆரம்பமாகியது.

தொடரும்

# கோண்டாவிலும் தலைமைப்பீடமும்

## அறுஞர் க(ல்)லாநிதி கியூறியஸ் ஜி




## அ(று)சுவை

புலிகளின் தலைமைப் பீடத்திற்கும் கியூறியஸிற்கும் நெருக்கம் என்று சொன்னால் நம்ப மாட்டீர்கள். பூனகரித் தாக்குதலில் புலிகள் வென்றவுடன் கியூறியஸ் மெதுவாக பிளேட்டை மாத்துறான் என்பீர்கள். வெற்றி பெற்றவர்கள் பக்கம் சரிந்து போகின்ற யாழ்ப்பாணத்தமிழன் அல்ல கியூறியஸ். தோல்வி அடைபவன் என்றாலும் நியாயத்திற்காக நிற்பவன் அவன். அவனைப் பார்த்து நீங்கள் இப்படி சந்தேகம் கொள்ளலாமா? நான் சொல்ல வந்தது புலிகளின் தலைமை அலுவலகம் பற்றி... கோண்டாவில் சந்தியில் வடக்குப் புறமாக பலாலி வீதியில் றேயல் இன்ஸ்டிட்யூட் என்ற டியூட்டரி ஒன்று இருந்தது. அதற்கு அருகில் தான் இப்போது புலிகளின் தலைமையகம் இருக்கிறது.

கோண்டாவிலில் புலிகளின் தலைமையகம் இருப்பதற்கு காரணம் உண்டாம். அதாவது தலைவரின் மாமனாரான டாக்டர் ஒருவர் (உண்மையில் இவர் கலாநிதி, கல்லாநிதி அல்ல) அங்கு வைத்தியம் செய்த போது சிறுவயதில் தலைவர் அங்கு நடமாடியவராம். அதனால் அங்கு பலரை அவருக்குத் தெரியுமாம். மாமனாருக்கு அடிக்கடி இராணுவத்தினர் துன்பம் கொடுத்து வந்தனராம்... இவரது மாமனார் என்பதற்காக.. இதெல்லாம் கியூறியஸிற்கு சில 'நம்பத் தகுந்த வட்டாரங்கள்' தந்த தகவல்..

★ ★ ★

ரொறன்ரோ ஸ்டாரில் தற்போது கிசுகிசு பாணியில் Business Section பகுதியில் Sources Sayஎன்ற பகுதி தொடங்கப்பட்டிருக்கிறது. இதில் கனடிய வர்த்தக வட்டாரங்களில் உலவும் கிசுகிசுக்கள் வெளியாகும். முதன் முதலாக வந்த கிசுகிசுவில் ஒரு மாஜி இலங்கையர் அகப்பட்டிருக்கிறார். பிரபல எழுத்தாளரான மைக்கேல் ஒந்தாச்சியின் அண்ணன் கிறிஸ் ஒந்தாச்சி பற்றிய கிசுகிசு அது. அதைப் போலத் தான் 'இந்த நம்பத் தகுந்த வட்டாரங்களும்' என்று வைத்துக் கொள்ளுங்களேன்.

★ ★ ★

இந்த கோண்டாவில் சந்தி எனக்கு பல நினைவுகளைக் கொண்டு வருவது.. சிறு வயதில் என் மனதைத் தொட்ட விடயம் ஒன்று... கோண்டாவிலில் மக்கள் கூடுகின்ற சந்தை என்று பெரிதாக எதுவும் இல்லை. அருகில் திருநெல்வேலிச் சந்தை இருப்பதால்.. ஆனால் கோண்டாவிலில் இன்னொரு சந்தை ஒன்றுண்டு. அதிகாலையில் கூலித் தொழிலாளர்கள் மண்வெட்டியுடனும் மற்றும் தோட்ட உபகரணங்களுடனும், கடகங்களுடனும் வீதியோரமாக இருக்க, தோட்ட சொந்தக்காரர்கள் தங்கள் தோட்டங்களில் கூலிக்கு வேலை செய்ய இவர்களை வந்து அழைத்துச் செல்வார்கள். இதை ஒரு கூலித் தொழிலாளர்களைப் பெறுகின்ற flea market என்று சொல்லலாம். என் மனதை இன்றும் நெருடுகின்ற விடயம். . இந்த தொழிலாளர்கள் எல்லாம் இன்று என்ன செய்வார்கள்? தோட்டங்கள் காய்ந்து கிடக்கின்றன. நாட்கூலிக்கு சென்றால் மட்டுமே இவர்கள் வயிறு நிரம்பும். இன்று என்ன செய்வார்களோ? வயது முதிர்ந்த காலத்தில் வீட்டில் இளைப்பாற வேண்டிய வயதிலும் மண்வெட்டிகள், கடகங்களுடன் தொழில் செய்த இந்த வயோதிபர்களை நினைத்தால் இன்றும் கண் கலங்கும்.

கியூறியஸின் பேரனாரும் சிறுவயதில் பாடசாலைக்கு செல்ல முன்னர் துலா மிதித்து நீர் இறைத்து உழைத்த பின்னர் தான் பாடசாலைக்கு சென்று படித்தாராம். இவரையும் இவரது நண்பரையும் 'கறுவல் சோடி' என்று கூறி கடுமையான உழைப்பாளிகள் என்று பல தோட்டக்காரர்கள் ஆவலுடன் கூட்டிச் செல்வார்களாம். பின்னர் மனிதர் படித்து தலைமையாசிரியராக வந்திருந்தார்.

★ ★ ★

கியூறியஸிற்கும் இந்த கோண்டாவில் சந்திக்கும் நிறையவே தொடர்புண்டு. டீன் ஏஜ் போராளியாக கியூறியஸ் நடத்திய 'இராணுவத் தாக்குதல்' ஒன்று கோண்டாவில் சந்தியில் நடந்தது. இது குறித்து பின்னர்..

இதை விட கியூறியஸின் பல மாஜி கனவுக் கன்னிகள் இப்பகுதியைச் சேர்ந்தவர்கள். இதை விட இன்னொன்று, அப்பகுதியில் வீசும் 'புகையிலைப் பாணி' வாசனை.. இதெல்லாம் நீங்கள் நுகர்ந்து அனுபவிக்க வேண்டியன.

அருகில் இராமகிருஷ்ண மிசன் பாடசாலை... இருபாலை வீதியில் உள்ள சலூன் ஒன்றில் தான் கியூறியஸைக் கூட்டிச் செல்லும் பேரனார் 'காதைத் தவிர மற்றெல்லாத்தையும்' வெட்டி விடும்படி ஆணை பிறப்பிப்பார். அழாத குறையாக 'பொலிஸ் குறொப்'புடன் வெளியே வரும் கியூறியஸிற்கு ஒப்பந்தப்படி அருகில் உள்ள தேத்தண்ணிக்கடையில் எட்டு இடியப்பம் வாங்கித் தரப்படும். ஒருபுறமாய் உள்ள சைக்கிள் கடை.. காற்றடிக்க இருபத்தைந்து சதம்.. காற்றடிக்கப் போய் பெல்பொட்டத்தில் கொழுப்பைப் பிரட்டி வரப்படும்.

★ ★ ★

இங்கே தான் புலிகளின் தலைமையகம். பண்டத்தரிப்பு முதல் சாவகச்சேரி

வரையில் வாழும் தமிழர்கள் காணமல் போன தங்கள் வீட்டாரைத் தேடுவது முதல் கொழும்பு செல்ல பாஸ் எடுப்பது வரை போகும் கர்ப்பக்கிருகம் இது. பாஸ் எடுப்பதற்காக தினசரி பத்து மைல் நடந்து சென்று மூன்று நாள் திருப்பி அனுப்பப்பட்ட தாய்மாரை எனக்குத் தெரியும். மாத்தயா கூட பதவி குறைக்கப்பட்ட பின்னரும் இங்கு வந்து சென்றதாக தகவல்.

★ ★ ★

இதற்கு அருகில் ஒரு டியூட்டரி. றோயல் இன்ஸ்டிட்டியூட் என்று. அங்கே ஆங்கில டைப்பிங் படிக்க கியூறியஸ் சென்றான். வீட்டில் ஆண்டுக்கணக்காக இருந்த தட்டச்சு இயந்திரத்தில் பழக முடியாமல் எப்படியாவது 'டைப்'படிக்கும் நோக்குடன் சென்ற கியூறியஸிற்கு அங்கு காதல் பிறந்ததைத் தான் சொல்ல வந்தேன்.

டைப்பிங் பெண்களுக்கு உரிய கலை.. பெண்நிலைவாதிகள் கோபம் நீங்கற்க.. இப்படி யாழ்ப்பாணம் கருதியது. நான் போய் சேர்ந்து கொண்டதும் அனைவருக்கும் ஆச்சரியம். ஒரு பயல் வந்திருக்கிறானே என்று.. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தின் முன்தோன்றிய டைப்ரைட்டர் ஒன்று தரப்பட்டது. பெண்கள் புடைசூழ கியூறியஸ் தட்டச்சு பயின்றான். புடை சூழ என்றதும் ஏதோ நான் தட்டச்சும் போது பெண்கள் சாமரம் வீசிக் கொண்டு நின்றார்கள் என்பதல்ல. அவர்களும் பாட்டுக்கு தட்டிக் கொண்டிருந்தார்கள். ஆங்கில டைப்பிங் படித்த அவர்களுக்கு ஆங்கில அறிவு இருந்ததாக ஞாபகம் இல்லை. பார்த்து அடித்துக் கொண்டிருந்தார்கள்.

புத்தகம் ஒன்று தரப்பட்டது. முதல் பயிற்சியாக ASDFGFj :LKJHJ என்று திருப்பித் திருப்பி அடிக்க வேண்டும். ஒரு பத்துத் தரம் அடிக்க பயிற்சி தானாக வருகிறது. ஒரு மணி நேரம் பயிற்சி. மறுநாள் போக.. டீச்சர் புத்தகத்தை தந்து விட்டு தனது அலுவல். பெண்கள் தட்டச்சை விட்டு டீச்சருடன் உரையாடல். அடுத்த பயிற்சியை தொடங்கி விட்டேன். டீச்சர் ஓடி வந்து.. இல்லை, இல்லை.. ஒரு கிழமைக்கு இது அடிக்க வேணும்.. அவர்களுக்கு நான் விரைவாகப் பயின்றால் தங்கள் வருமானம் போய் விடுமோ என்ற கவலை. எப்படி ஒரு வாரம் ஒரே வரியை அடிப்பது? நான் மூலையில் இருந்து தட்டிக் கொண்டிருந்தேன். அப்போது தான் திரும்பிப் பார்த்தேன். அவள்.. என் முதலாவது (ஒருதலைக்)காதலி..

எதேச்சையான பார்வை. அவள் என்னையே பார்த்துக் கொண்டிருந்தது போன்ற பாவனை. ரைப்பிங்கும் மண்ணாங்கட்டியும்.. கியூறியஸ் தட்டச்சுவதை விட்டு திரும்பிக் கொண்டான். கிளுக்.. கியூறியஸிற்கு நெஞ்சு குளிர்ந்தது. ஒவ்வொரு வரி அடித்ததும் ஸ்பேஸ் பாரைத் திருப்புவது போல தலையைத் திருப்பிப் பார்த்ததும் அண்ணல் நோக்குகின்ற திசையில் அவளும் நோக்க.. மின்னலடித்தது. பார்த்தால் அந்தப் பெண் அங்கே எட்டாம் வகுப்பு டியூசனுக்கு வந்த பெண் பிள்ளை. இங்கே என்றால் உள்ளே தள்ளியிருப்பார்கள்.. மைனர் பெண்ணுடன் சேஷ்டை புரிந்ததற்காய்.

பிறகென்ன.. என்னைக் காணும் போதெல்லாம் அந்தப் பெண்ணின் தோழிகள் அவளின் செல்லப் பெயரை உரத்து உச்சரிப்பர். அவளும் நாணிக் கோணிச் சிரிப்பாள். கொஞ்சக் காலம் இப்படியே சிரிப்பு சிரிப்பாக போய் கடைசியில் அந்தப் பெண்ணுடன் ஒரு வார்த்தை பேசாமலேயே எனது காதல் கருகி விட்டது.

பாவம் அந்தப் பெண்.. இப்போது என்ன செய்கிறாளோ? சுதந்திரப் பறவையாக இருப்பாளோ யாரறிவார்?

★ ★ ★

புலிகளின் தலைமையகத்தில் வைத்துத் தான் பாலசிங்கம் பத்திரிகையாளருக்கு முன்பு பேட்டி கொடுப்பார். இந்தியப் பத்திரிகையாளரான பெண்மணி ஒருவர் தான் பிரபாகரனை முதல் முதலில் வெளியே காட்டியவர். 'இயற்கையே எனது நண்பன், வரலாறே வழிகாட்டி' என்ற ஒப்பற்ற தத்துவங்களை உலகறியச் செய்தவர். பின்னர் ஒரு தடவை சென்ற போது தலைவர்களுக்கிடையே முன்பு இருந்த அன்னியோன்னியம் இல்லை என்று எழுதியிருந்தார். இப்போது பாலா அண்ணை தவிர்ந்த அனைவருமே ஓரம் கட்டப்பட்டு விட்டனர். யோகி, மாத்தயா எல்லாரும் போக அண்ணை மட்டும் எப்படி ஒட்டிக் கொண்டார்?

★ ★ ★

அண்ணைக்கும் தம்பிக்குமான உறவு பற்றி முன்பு திம்புப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வது பற்றிய பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட ஒருவர் கூறினார். இந்தியா இவர்களை திம்புவில் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வேண்டும், இல்லாவிட்டால் மூட்டை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு வெளியேற வேண்டும் என்று விட்டதாம். அப்போது இயக்கங்கள் சேர்ந்து நடந்த கூட்டம் ஒன்றிற்கு அண்ணனும் தம்பியும் வந்திருந்தனராம். அண்ணன் மெதுவாக.. இந்தியாவின் மிரட்டலை உணர்ந்து கொண்டு 'அப்பிடியெண்டால் நாங்கள் போவம்' என்று மெதுவாக ஆரம்பிக்க.. தம்பி குறுக்கிட்டு 'பாலா அண்ணை, உங்களைப் போல ஆயிரம் பேரை நான் விலைக்கு வாங்குவன், நீங்கள் இங்க வந்தது நான் சொல்லிறதை சொல்லுறதுக்கே தவிர, நீங்கள் நினைச்சதை சொல்லுறதுக்கில்லை' என்றாராம். அண்ணை ஸ்தம்பித்துப் போனதாகவும் போன பின்னர் தம்பியை கேவலமாக திட்டியதாகவும் அன்னை கோபம் தணித்ததாகவும் சொன்னார்.

ஒருவருக்கு மற்றவர் இன்றியமையாதவர், ஒருவரின் பலவீனம் மற்றவருக்கு பலமாக அமைந்ததால் ஏதோ ஒருவழியில் ஒட்டிக் கொண்டுள்ளனர்.

★ ★ ★

இதனால் தான் அண்ணை இன்று தன்னோடு ஒட்டிக் கொண்டிருந்த மாத்தயாவைக் கைவிட்டு 'இயக்கத்தில் பிரதித்தலைவர்' என்ற பதவி இருக்கவே இல்லை என்று கூறியிருக்கிறார். மாறி மாத்தயா அதிகாரத்திலிருந்திருந்தால் 'பிரபாகரன்' என்றொருவர் இருக்கவேயில்லை என்றிருப்பார். அண்ணனுக்கும் வேறு இடத்திற்கு போக முடியாது. வாலைப் பிடித்து விட்டார். புலி எந்த தலை மாற்றினால் தான் அவருக்கு என்ன? அவர் பிடிக்க வேண்டியது வால் மட்டுமே.

★ ★ ★

இப்போது கவனித்தீர்களா ஒரு

விடயம்? புலிகள் பற்றி வரும் போது மத்திய குழு என்ற பேச்சு இருக்காது. காரணம் மத்திய குழுவிலிருந்த பெரும்புலிகள் பல ஒதுக்கப்பட்டு 'பாட்டும் நானே, பாவமும் நானே, அசையும் உலகில் இசையும் நானே, ஆடும் கலையின் நாயகன் நானே, எதிலும் இயங்கும் இயக்கம் நானே, என்னிடம் வந்தால் அடங்குதல் முறையே, நா அசைந்தால் அசையும் அகிலம் எல்லாமே' என்று ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு!

★ ★ ★

பெண்கள் அமைப்பிலும் ஜெயா என்றொரு பெண்தலைவி.. முன்பு பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டவர். பல்கலைக்கழகத்தில் உதவி அரசியல் விரிவுரையாளராக இருந்தவர். அவரையும் காணோம். இயக்கத்தில் இனவிடுதலை என்ற நோக்கத்தோடு போன பலர் இறுதியில் இப்படி செயலிழந்து ஒதுங்கிக் கொண்டனர். தலைவருக்கு விசுவாசம் என்ற ஒன்றில்லா விடில் ஒதுக்கப்பட்டு கடைசியில் வீண் வதந்திகளுக்கு ஆளாகியதுதான் மிச்சம்.

★ ★ ★

மாத்தயா ஒதுக்கப்பட்டதும் அவருக்கு ஆதரவாக இருந்த பொதுமக்கள் பலரும் கைது செய்யப்பட்டனர். இயக்கத்தினர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் எல்லாம் தமிழீழம் என்ற கொள்கையை ஏற்றுக் கொள்ளாதவர்களா? அல்லது துரோகம் செய்தவர்களா?

★ ★ ★

கிட்டுபோன பின்னர் அவரது இடத்தை நிரப்பும் திலகரை நினைக்கும் போது சிரிப்பாய் இருக்கிறது. பூனகரி முகாம் தாக்கப்பட்ட போது, இலங்கை அரசு யாழ்ப்பாணத்தை முற்றுகையிட்டு தாக்கப் போகிறது, அதை தடுக்கவே இந்த தாக்குதல் நடத்தப்பட்டது என்றார். பின்னர் இலங்கை இராணுவம் வந்தது என்று செய்தி வந்த போது 'இல்லை, நாங்கள் மேலும் படைவீரர்களை அனுப்பிக் கொண்டிருக்கிறோம்' என்றார். பார்த்தால் மீண்டும் இராணுவம் பூனகரிக்குள்.

★ ★ ★

யோகி மறுபுறத்தில் கொழும்பில பிரேமதாசா உபயத்தில வெளிநாடுகளுக்கு தொலைபேசி அடித்தது தான் மிச்சம். திலீபனைத் தியாகியாக்கிய பின்னர் அந்த இடத்தில் நுழைந்து என்ன பயன்? இப்போது தான் திருமணமும் செய்திருந்தார். இறுதியில் சஞ்சிகையா சிரியராகியிருக்கிறார்.

பேபி சுப்பிரமணியம் மாத்தயாவை ஓரம்கட்டப் பண்ணி தான் நுழையப் பார்த்தார். அவரையும் காணோம். நாளைக்கு தமிழ் செல்வமும் பால்ராஜும் ஏன் பொட்டம்மானும் ஒதுக்கப்படக் கூடும். அப்போது புலி ஆதரவாளர்கள் முடியைப் பிய்த்துக் கொள்ள வேண்டியதுதான். இருந்தாலும் ஒரு திருப்தி அப்போதும் அவற்றுக்கு விளக்கம் சொல்ல பாலசிங்கம் பேட்டியளித்துக் கொண்டிருப்பார்.


# மணமகன் தேவை

**32 வயதான இலங்கை முஸ்லிம் பெண்ணுக்கு 35 வயது வரையிலான மணமகன் தேவை. தமிழ் அல்லது முஸ்லிம் இனத்தவர் விரும்பத்தக்கது விபரங்களை தாயகத்தின் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். விபரங்கள் யாவும் இரகசியமாக வைக்கப்படும்.**



**This newspaper is published by Georgicka communications. A member of Ethnic Press Council Of Canada.**

**Editor: George R.Ckrhushchev**



**P.O.Box 1031, Station "F", Toronto, Ont, M4Y 2T7.**

**Tel: (416) 920 9081**
**Fax: 963 5738**
**E mail:71650.3216 @Compuserve.com**



**இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினால் வெளியிடப்படுகிறது.**
**ஆசிரியர்: ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்**



உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள். ஆக்கங்களை மீளப் பெற விரும்புபவர்கள் சுயவிலாசமிட்ட முத்திரையிட்ட அஞ்சற்கூடு அனுப்பவும். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.



## தாயகம் சந்தா விபரம்

**கனடா ஆறுமாதம் $30**
**வெளிநாடுகள் ஆறு மாதம் US$60**

**வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)**

ANTONY BROTHERS
516 3903

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை,
இந்திய, கனடிய உணவுப் பொருட்
தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அன்ரனி பிறதர்ஸ்

**1472 Queen St West**
**(Queen/Lansdowne),**
**Toronto, Ont. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும்
காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

✪ தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்

உடன் மீன், இறைச்சி,
பழவகைகள்
மலிவு விலையில்


✪ முத்திரை, சிகரெட், TTC Tickets,
Lottery Tickets
✪ போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்

தமிழ், ஹிந்தி, மலையாள
வீடியோக்கள் வாடகைக்குப்
பெறலாம்

✪ லேசர் இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

## ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உடைகள்,
பரிசுப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள

## ANTONY BROTHERS FASHION HOUSE

**1484 QUEEN ST WEST**

**588 0310**

# SIVA'S TRADING CO LTD

321-2739

அனைத்து வகையான இலங்கை,
இந்திய உணவு வகைகள்,
பலசரக்கு வகைகளை மலிவு
விலையில் பெற்றுக் கொள்ள

## சிவாஸ் ரேடிங் கோ

## 3852 FINCH AVE EAST
KENNEDY/FINCH

இலங்கையிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடன் இறால், நண்டு,
கணவாய், மீன் மற்றும்
கடலுணவு வகைகள்
மலிவு விலையில்

உலகெங்கும் செல்வதற்கான
விமானச்சீட்டுக்களை மலிவுவிலையில்
பெற தொடர்பு கொள்ளுங்கள்
சுந்தரலிங்கம் (சுந்தரி)

இந்தியா ருடே, பேசும்படம்,
சினிமா எக்ஸ்பிரஸ், ராசி பலன்,
பொம்மை தவிர்ந்த
அனைத்து தமிழக சஞ்சிகைகளும்
89 சதங்கள் மட்டுமே

தோசை, இடியப்பம், அப்பம்
சுடச்சுடக் கிடைக்கும்

# P.S.S.T

| | |
|---|---|
| எக்கோ, தொம்சன் கசட்டுகள் | 1.99 |
| 8 லேசர் இசைத்தட்டுக்கள் | 29.99 |
| வீடியோ பிரதி வாடகைக்கு | 99 சதம் |
| VIDEO TRANSFER (ANY SYSTEM) | 8.99 |

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள், இந்திய உணவு
வகைகளின் மொத்த விற்பனையாளர்

$40 க்கு மேல்பொருட்கள் வாங்கினால்
இரண்டு வீடியோப் பிரதிகள்
வாடகைக்கு இலவசம்
$75 க்கு மேல் கொள்வனவு செய்தால்
ஒரு தமிழ்ப்படம் இலவசம்

## TEL:609-0141

சகல தமிழ், இந்தி, மலையாளப்
படங்கள் வாடகைக்கு கிடைக்கும்

## 5210 FINCH AVE EAST #23
(FINCH/MIDDLEFIELD)